# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 344 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 19,வெள்ளிக்கிழமை 04.11.2016



கம நலம்
Govisetha
அதிக கோடீஸ்வரர்களை உருவாக்கும் கமநலம்
இப்பொழுது
புதன்கிழமைகளிலும்..
திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய தினங்களில்
கம நலம்
NATIONAL LOTTERIES BOARD


## யாழ்ப்பாணம் வருகின்றார் பிரி. அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 4
பிரிட்டன் பிரதமரின் பிரதிநிதியும், ஐ.நா. மற்றும் பொது நலவாயத்துக்கான அமைச்சருமான பரனோஸ் ஏன்லி அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.
பிரிட்டன் பிரதமர் கமரூன் பதவியிலிருந்து விலகிய >> 21

# தீர்வு வழங்க இழுத்தடிப்பது நாட்டுக்கே பெரும் ஆபத்து

## கிழக்கு முதலமைச்சர் எச்சரிக்கை



மட்டக்களப்பு, நவம்பர் 4
இன்னும் காலம் தாழ்த்தி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு வழங்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்படுமாயின் அது இந்த நாட்டை ஆபத்தில் தள்ளும் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னு லாப்தீன் நஸீர் அஹமட் எச்சரித்துள்ளார்.
மட்டக்களப்பு >> 23

## லசந்தவின் கைபேசியை ஒட்டுக் கேட்டார் கோத்தா

### அம்பலமானது இரகசிய ஆவணம்



கொழும்பு, நவ. 4
சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்படுவதற்குச் சில மாதங்கள் முன்னதாக, அவரது கைத்தொலைபேசி உரையாடல்களைக் கண்காணிக்குமாறு பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச உத்தரவிட்டிருந்தார் என்பது, அரச புலனாய்வுச் சேவை இரகசிய >> 21

## சந்திப்பு திருப்தி

### தமிழக மீனவர் வரவேற்பு

புதுடில்லி, நவ. 4
இலங்கை மீனவர்களுடனான சந்திப்பு திருப்திகரமானதாக இருந்ததாக, >> 21

## கடற்படைக்கு எதிராக திரண்ட புத்தளம் மீனவர்

யாழ்ப்பாணம், நவ. 4
கடற்படையினரால் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கைது செய்யப்படுவதைக் கண்டித்தும், சட்டத்திற்கு முரணான வகையில் கடற்படையினரின் தொழில் அனுமதி அட்டை முறைமை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் புத்தளத்தில் நேற்று மீனவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
இந்தப் போராட்டத்தில் வடக்கு மீனவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.
புத்தளம் நீதிமன் >> 21

## டில்லிக்கு விரைந்தார் சுமந்திரன்

### மீனவர் பேச்சில் பங்கேற்பதற்காக

யாழ்ப்பாணம், நவ. 4
இழுவைப் படகுகளைத் தடை செய்வதற்கான தனிநபர் சட்ட வரைவை முன்வைத்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப் >> 23

## முதல்வரின் குழு செயற்படக் காணோம்

### விசனம் தெரிவிக்கிறார் வட மாகாண உறுப்பினர்



யாழ்ப்பாணம், நவ. 4
வடக்கு அமைச்சர்களுக்கு எதிராக விசாரணை நடத்த அறிவிக்கப்பட்ட குழு இன்னமும் தனது பணிகளை ஆரம்பிக்கவில்லை. அத்துடன் அந்தக் குழுவின் அலுவலகமும் அமைக்கப்படவில்லை.
இதற்கான அறிவிப்பு முதலமைச்சரினால் வெளியிடப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் இந்தக் குழு செயற்படாமை தொடர்பில், >> 21

## இளம் தாயும் பிள்ளையும் கடன் சுமையால் உயிர் துறப்பு

கடன் சுமை காரணமாக கணவன் – மனைவிக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டில் இளம் தாயும் பிள்ளையும் கிணற்றில் வீழ்ந்து உயிரிரை மாய்த்துக் கொண்ட கொடூரச்சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம் பெற்றதாக, வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
(விரிவு பக். 11)

## ஆவா குழுவை உருவாக்கும் ஆற்றல் எனக்கில்லை

### கூறுகின்றார் கோத்தபாய

கொழும்பு, நவ. 4
ஆவா குழுவை உருவாக்கும் ஆற்றல் எனக்கு இல்லை. இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார். >> 21



## புத்தர் சிலையை அகற்ற மறுத்தனர் பிக்குகள்

### மாணிக்க மடுவில் தொடரும் பதற்றம்

அம்பாறை, நவ. 4
தமிழ்ப் பேசும் மக்கள் செறிவாக வாழும் இறக்காமம் பகுதியில் மாணிக்கமடுக் கிராமத்தின் அருகே, மாயக்கல்லி மலை மீது அத்துமீறி வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுவதற்குப் பௌத்த பிக்குகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.
கடந்த சனிக்கிழமை திடீரென வந்த பௌத்த பிக்குகளைக் கொண்ட குழுவினரால், புத்தர் சிலை நிறுவப்பட்டது. பௌத்தர்கள் எவரும் வசிக்காத >> 21

## மாதகலில் சிக்கிய 52 கிலோ கஞ்சா

### சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 4
இந்தியாவிலிருந்து மாதகல் கடற்பரப்பின் ஊடாகக் கடத்த முற்பட்ட 52 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.
இதனுடன் சேர்த்து கடந்த 4 நாள்களில் வடக்கில் 176 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து மாதகல் கடற்பரப்பு ஊடாக யாழ்ப் >> 21



## சு.க. தலைமையில் விரைவில் ஆட்சி

### மலரும் என்கிறார் மைத்திரி



யாழ்ப்பாணம், நவ. 4
தோல்விகளைச் சந்தித்து பிளவடைந்து காணப்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தூய்மையாக்கி எதிர்காலத்தில் மக்களின் பலத்தைக் கொண்டு அந்தக் கட்சியின் தலைமையில் அரசு அமையும் என்று நேற்று >> 23

## மரக் கடத்தலுக்கு உடந்தை இரு பொலிஸார் பணி நீக்கம்

கிளிநொச்சி, நவ. 4
சட்டவிரோத மரக் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாகப் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் >> 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வருடன் நேரில் பேச முடியவில்லை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 4
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நேரில் சந்திக்க முடியாமல் இருப்பதாக, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
'முதலமைச்சரை, உறுப்பினர்களாகிய எம்மால் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை. அவரைப் பொது நிகழ்வுகளிலும், கூட்டங்களிலுமே காணக் கிடைக்கின்றது' என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைக் குழுவுக்கு ஆவணங்களைக் கையளிப்பதற்கு, வடக்கு மாகாண தலைமைச் செயலகத்துக்கு நேற்றுக் காலை ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் வந்திருந்தார். அறிவிக்கப்பட்டதற்கு அமைவாக அந்தக் குழு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.
இந்த நிலையில் ஆவணங்களை- வடக்கு மாகாண விவசாய அமைச்சருக்கு எதிரான ஆதாரங்களை- முதலமைச்சரிடம் நேரில் கையளிப்பதும் முடியாத காரியம். முதலமைச்சரை உறுப்பினர்களான எம்மால் கூட இலகுவில் தொடர்பு கொள்ள முடியாத நிலை இருக்கின்றது. அவரை நேரில் சந்திக்கவும் முடியாது. பொது நிகழ்வுகள், கூட்டங்கள் தவிர்ந்து அவரை நேரில் காணவும் முடியாது. இதனால் ஆவணங்களை எப்படி ஒப்படைப்பது என்பது தெரியவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.
கடந்த காலங்களிலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்திக்க முடியாமல் இருப்பதாக மாகாண சபை அமர்வுகளிலேயே பகிரங்கமாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## வாளுடன் வைத்தியசாலைக்குள் புகுந்த 10 பேருக்கு வலை வீச்சு

யாழ்ப்பாணம், நவ. 4
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையினுள் கடந்த செவ்வாய்க்கிழமை கூரிய ஆயுதங்கள் மற்றும் வாள்களுடன் புகுந்து, வைத்தியசாலையினுள் அமைதியின்மையை ஏற்படுத்திய சந்தேகத்தில் 10 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.
அவர்களைத் தேடி, தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருவதாக நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த தெரிவித்தார்.
வாள்வெட்டுக்கு உள்ளாகி வைத்தியசாலையில்சிகிச்சை பெற்றுவரும் நபர்களிடம் இருந்து பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே சந்தேக நபர்கள் இனங்காணப் பட்டிருப்பதாகவும், பொலிஸ் குழுக்கள் தொடர்ச்சியாகப் பல வேறு கோணங்களில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.
ஏற்கனவே துன்னாலைப் பகுதியில் பொலிஸார் நடத்திய தேடுதல்கள், சுற்றிவளைப்புகளில் வாள்கள் மற்றும்கோடரியுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு இருந்தனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வாளால்வெட்டிக்காயமேற்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் ஒருவர் இனங்காணப்பட்டுத் தேடப்பட்டு வருகின்றார் என்றும் அவர் கூறினார். (த-5-109)

## உணவு ஒறுப்பாக மாறியது சிப்பாய்களின் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 4
ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனக் கோரி, சேவையில் இருந்து இடைவிலகிய ஊனமுற்ற இராணுவச் சிப்பாய்கள் மேற்கொண்டு வந்த தொடர்போராட்டம், தற்போது உணவு ஒறுப்புப் போராட்டமாக மாற்றப்பட்டுள்ளது.
ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையான 12 வருடங்களைப் பூர்த்தி செய்யாது இடைவிலகிய ஊனமுற்ற இராணுவச் சிப்பாய்கள் கடந்த 31 ஆம் திகதி முதல் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.
தமது கோரிக்கைகளுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வு வழங்கப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று, 'இராணுவச் சிப்பாய்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு' குறிப்பிட்டுள்ளது.
நேற்று முதல் அவர்கள் சாகும் வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த அமைப்பின் தலைவர் பீ.வசந்த சுட்டிக்காட்டியுள்ளார். (த-5)

## வந்தார் மகேந்திரன்

கொழும்பு, நவ 4
இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மத்தியவங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும், மோசடி தொடர்பான கோப்அறிக்கை, நாடாளுமன்றத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிலை யில், அதற்கு முன்னைய தினமான 27ஆம் திகதி, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.
இந்தநிலையில், அவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று மகிந்த அணியினர் குற்றஞ் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

## மத்திய வங்கியில் கொள்ளையிட்டோர் சுதந்திர நடமாட்டம்

### சாடுகின்றார் மகிந்த



யாழ்ப்பாணம், நவ. 4
மத்திய வங்கியில் கொள்ளையிட்டவர்கள் இன்னமும் சுதந்திரமாக சுற்றித் திரிகின்றனர். நல்லாட்சி அரசின் காலத்தில் சட்டம் ஆளுக்காள்ஏற்றவகையில்வளைக்கப்படுகின்றது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார். வடக்கு மாகாணத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வீடுகளை நிர்மாணிப்பதற்கு கொடுக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்தை ராடா நிதி நிறுவனத்தின் ஊடாக மோசடி செய்த குற்றச்சாட்டில் அந்த நிறுவனத்தின் பிரதானியாகச் செயற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். டிரான் அலஸைச் சந்திப்பதற்காக கொழும்பு வெலிக்கடைச் சிறைச் சாலைக்கு, மகிந்த ராஜபக்ச நேற்று வந்திருந்தார். இதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
தங்களுக்கு ஏற்ற வகையில் சட்டத்தை வளைத்துக் கொள்ள முடியும். இன்று அப்படியே இடம்பெறுகின்றது. மத்திய வங்கியில் இடம்பெற்ற கொள்ளை விடயம் இது பெரிய விடயமல்ல. அந்தக் கொள்ளையை மேற்கொண்டவர்கள் இன்றும் சுதந்திரமாகவே திரிகின்றனர்.
ஜி.எல்.பீரிஸ்தலைமையிலான புதிய கட்சியினர் எமது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் பேச்சு நடத்த வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட அவர்கள் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களுடன் இணைந்து செயற்பட நாங்களும் தயார். கட்சியை ஆரம்பிக்கவும் அதில் தவிசாளராக இருக்கவும் உரிமை உள்ளது. அவ்வாறே எனக்கும் கட்சியை ஆரம்பிக்க முடியும். ஆனாலும் நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்தானே - என்றார். (த-5)

# ஆவா குழுவைக் கோத்தா உருவாக்கியிருக்க வாய்ப்பு

## கூறுகிறது ஜாதிக ஹெல உறுமய

யாழ்ப்பாணம், நவ. 4
ஆவா குழுவைக் கோத்தபாய உருவாக்கினார் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்த தகவல் உறுதியானது அல்ல. இருப்பினும் அந்த விடயம் உண்மையாக இருக்க வாய்ப்புள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.
வடக்கில் சூடு பிடிக்கு விவகாரங்களைச் சாதமாகப் பயன்படுத்திக் கொள்பவர்கள் யார் என்பதை அறிந்து கொண்டால் குறித்த விடயத்தின் பின்னணியில் உள்ளவர் யாரெனத் தெரியவரும் என்று ஜாதிக ஹெல உறுமய வின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த வர்ணசிங்க தெரிவித்தார்.
ஜாதிக ஹெல உறுமயவின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
ஆவா குழுவை கோத்தபாய உருவாக்கினார் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். ஆனால் எமக்கு இது வரைஅதுதொடர்பில்உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் அவ்வாறு செய்திருக்க வாய்ப்புக்கள் உள்ளன.
அண்மையில் அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தனது உரையில் 250 முன் னாள் விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய உதவி யுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.
அதனால் அவ்வாறன விடயங்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆவா குழு இவ்வாறான பின்னணியில் உருவாக்கப்பட்டிருக்க முடியும். அதன் உண்மைத் தன் மைகள் தொடர்பில் தீர்க்கமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.
அதேநேரம் வடக்கில் சில விவகாரங்கள் சூடு பிடிக்கின்றபோது அது தொடர்பில் பெரிதாக அலட்டிக் கொண்டு அந்தச் சந்தர்ப்பங்களில் பயனடைப்பவர்கள் எங்கு உள்ளனர் என்பது தொடர்பில் சிந்தித்துப் பார்த்தால் இந்த விடயங்களில் இருக்கின்ற உள்ளார்ந்த தொடர்புகளைப் புரிந்து கொள்ள முடியும்-என்றார். (த-5)

# 2 வீத வட்டியில் சீனா கடன் தந்தால் மகிழ்ச்சி

## நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு

சீனா 2 சதவீத வட்டியில் கடன் கொடுத்திருந்தால் இலங்கை 2 சதவீதம் மட்டுமே செலுத்தும். 2 வீதத்துக்கு அதிகமாக இலங்கைக்குக் கடன் கொடுக்கவில்லை என்று சீனா கூறுமானால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.
இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
சீனாவிலிருந்து பெறப்படும் கடன்களின் வட்டி வீதம் அதிகம் எனில்ஏன்தொடர்ந்தும்சீனாவிடம் இலங்கை கடன் கோர வேண்டும் என்று கடந்த செவ் வாய்க்கிழமை இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்திருந்தமை தொடர்பிலேயே, அமைச்சர் ரவி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
நான் சீனாவின் நிதியமைச்சர் அல்ல. மாறாக இலங்கையின் நிதியமைச்சராகவே உள்ளேன். சீனத் தூதுவர் முன்வைத்துள்ள விடயங்களை நிராகரிக்கின்றேன்.
இலங்கைக்கு 2 வீதத்தில்தான் கடன் வழங்கப்பட்டுள்ளது என்று சீனத் தூதுவர் தெரிவித்துள்ள கருத்துக்களை நிராகரிக்கின்றேன். சீனா 2 வீத வட்டியில் கடன் கொடுத்திருந்தால் இலங்கை 2 வீதம் மட்டுமே செலுத்தும். 2 வீதத்துக்கு அதிகமாக இலங்கைக்குக் கடன் கொடுக்கவில்லை என்று சீனா கூறுமானால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். காரணம் அப்படியானால் நாங்கள் 2 வீத வட்டி மட்டுமே செலுத்த வேண்டி வரும் - என்றார். (த-5-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலை வாய்ப்பு**

இல.72, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனத்திற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. தமிழ் கணனி தட்டெழுத்து தெரிந்திருப்பது விரும்பத்தக்கது.
சனிக்கிழமை காலை,
மு.ப. 10.30 - 12.30/ பி.ப. 4.00 - 6.00 இடையில் நேரில் வரவும்
விவரங்களுக்கு - 077 7033729

# ரயில் கடவைக் காப்பாளர்கள் காலவரையற்ற போராட்டம்

## மக்களை அவதானமாகச் செயற்படுமாறு கோரிக்கை

வவுனியா, நவ. 4

வடக்கு, கிழக்கிலுள்ள ரயில் கடவைகளின் தற்காலிக காப்பாளர்கள், மீண்டும் நேற்றுக்காலை தொடக்கம் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடவைகளில் பொலிஸார் பணியில் இருப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளபோதும், மக்கள் அவதானமாகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி நேற்றுக்காலை 6 மணி தொடக்கம்தொடர்பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாகத் ரயில் கடவைகளின் தற்காலிக காப்பாளர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

அது பற்றிய அறிவிப்பை அவர்கள் வவுனியாவில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

அதில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மூன்று ஆண்டுகளாக நாங்கள் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குக்கீழ் நாள் ஒன்றிற்கு 250 ரூபாவுக்கு மாதம் 7 ஆயிரத்து 500 ரூபாவுக்கு சேவை செய்து வருகின்றோம். இது எமக்குப் போதாது. இது எமக்கு இளைக்கப்பட்ட அநீதி. இதற்கு எதிராக நாங்கள் போராட்டங்கள், சாலை மறியல், உணவு தவிர்ப்புப்போன்றபலபோராட்டங்களை மேற்கொண்டிருந்தும், எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

கொழும்பு அரசின் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பில், ரயில் கடவை ஊழியர்களுக்கு மாற்றீடாக சிவில் பாதுகாப்புப் பிரிவினரை கடமையில் அமர்த்துவதாகவும், எங்களுடைய ஊழியர்களின் சேவை புறக்கணிக்கப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார். அவரின் இந்த அறிவிப்பை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது எமது ஒட்டுமொத்த ரயில் கடவைக் காப்பாளர்களையும் 2 ஆயிரத்து 638 ஊழியர்களின் எதிர்கால வாழ்வையும் பாதிக்கின்றது.

எனவே ஜனாதிபதி இதில் உடனடியாகத் தலையிட்டு எமக்கு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும். எங்களுடைய உரிமைகள் மறுக்கப்படுவது தொடர்பாக ஐ.நாவிடம் முறையிடத் தயாராக உள்ளோம்.

எமது முழுமையான பிரச்சினைகள் குறித்தும் எமக்கு இளைக்கப்பட்ட அநீதி குறித்தும் கடந்த 15 ஆம் திகதி எழுத்து மூலமான முறைப்பாடு ஒன்றினை வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகரிடம் முன்வைத்திருந்தோம். அதில் எமது முழுமையான பிரச்சினைகள் உள்ளடக்கி நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து நீதித்துறையின் ஊடாக நீதியைப் பெற்றுத்தருமாறு கேட்டிருந்தோம். எனவே நாங்கள் இன்று (நேற்று) காலை முதல் வடக்கு கிழக்கு புகையிரதக்கடவைகளில் பணிப்புறக்கணிப்பினை மேற்கொண்டு வருகின்றோம். பொலிஸார் பதில் கடமைகளை மேற்கொண்டுவருகின்றனர் - என்றனர்.

(வ-4)

### வித்தியா படுகொலை வழக்கில்

## சந்தேகநபரை விடுவிக்க முயற்சித்த பொலிஸ் உயர் அதிகாரிக்குச் சிக்கல்

யாழ்ப்பாணம், நவ. 4

புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை விடுவிக்குமாறு கூறியதாகக் குற்றஞ்சாட்டப்படும் பொலிஸ் உயர் அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் ஒருவரைப் பொதுமக்கள் பொலிஸாரிடம் ஒப்படைந்திருந்த நிலையில், அந்த நபரைக் பொலிஸார் விடுவித்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அதற்குக் காரணம் அந்தக் காலத்தில் வடக்கில் கடமையாற்றிய பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் வழங்கியிருந்த அறிவுறுத்தலே என்றும் கூறப்பட்டது. அது பற்றிய விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

இந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு குறித்த பொலிஸ் உயர் அதிகாரிக்கு எதிரான நடவடிக்கை தொடர்பில் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,106)

## கந்தசஷ்டி உற்சவம்

புலோலி வில்லிபாதி முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தினமும் பி.ப. 4 மணிக்கு முழுக்கு, சிறப்பு வழிபாடு இடம்பெற்று வருகின்றது. நாளை சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் முழுக்குடன் ஆரம்பமாகி தொடர்ந்து சிறப்புப் வழிபாடு இடம்பெற்று சூரசங்காரம் நடைபெறும். நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில்பாறணைப்பூசையும், மாலை 6.30 மணியளவில் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## பாடகர் மறைவு ஒருவாரம் துக்கம்

இலங்கையின் புகழ் பெற்ற பாரம்பரிய பாடகரும், இசையமைப்பாளரான டபுள்யூ.டி. அமரதேவா 88 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

மாரடைப்பு ஏற்பட்டதன் காரணமாகவே அவர் உயிரிழந்தார்.

இலங்கையின் இசைத்துறைக்கு ஒரு பிரத்தியேக தேசிய தன்மை மற்றும் அடையாளத்தை ஏற்படுத்த அமரதேவா எடுத்த முயற்சிகளுக்காக நோபல் பரிசின் ஆசிய பதிப்பாக கருதப்படும் ரமோன் மகசேசே விருது உட்பட பல எண்ணற்ற கௌரவங்களையும், விருதுகளையும் அவர் பெற்றார்.

மாலைதீவு நாட்டின் தேசிய கீதத்துக்கு அமரதேவா மெல்லிசை அமைத்துள்ளார். கலாநிதி பண்டித் டபிள்யூ. டி. அமரதேவவின் மறைவையொட்டி ஒரு வார காலத்தைப் தேசிய துக்கதினமாகக் கடைப்பிடிக்கும் [illegible] கிரியைகள் முழு அரச மரியாதையுடன் இடம்பெறுமென்றும் ஜனாதிபதி அறிவித்தார். (த-5)

## வைத்தியசாலைக்குள் வாள்வெட்டு; சந்தேகத்தில் 10 பேர் நேற்றிரவு கைது

யாழ்ப்பாணம், நவ. 4

பருத்தித்துறை வைத்தியசாலையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நேற்றிரவு 10 பேர் கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலை ஆட்டுப்பட்டித் தெருவில் சீட்டுத் தொடர்பில் இரு குழுவுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் 2 பேர் வாள்வெட்டுக்க இல்லக்காகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து வைத்தியசாலைக்குள் புகுந்த கும்பல் வைத்தியசாலைக்குள் வைத்து ஒருவரைத் துரத்தித்துரத்தி வாளால் வெட்டியிருந்தது. அதனால் படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் வரை 3 பேரைக் கைது செய்த பொலிஸார் நீதிமன்றின் உத்தரவில் அவர்களை விளக்கமறியலில் வைத்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டிருந்த நிலையில், துன்னாலையில் நேற்றிரவு 10 பேரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் வாள்வெட்டுச் சம்பவத்தில் தொடர்புபட்டிருப்பின் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர். தொடர்பில்லையெனின் விடுவிக்கப்படுவர் என்று பொலிஸார் கூறினர். (வ-4,108)

(ஏற்கனவே கிடைத்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு எண் 571
சீட்டிழுப்பு திகதி 2016.11.03
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
38 54 61 65 Q
சுப்பர் ஜக்பொட்
ரூ.58,386,220/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு எண் 1311
சீட்டிழுப்பு திகதி 2016.11.03
வெற்றி இலக்கங்கள்
09 26 41 65 S
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,850,080/=

IELTS
*Join Us Now!*
New batch starts on : 05.11.2016

Our unique features
* Trained and experienced lecturers
* Free study materials
* Ample IELTS test materials
* IELTS audio and video support
* Individual attentions
* Weekend and night classes



Call us on: 071 777 5666
#200, Sivan Pannai Road , Jaffna .
021 222 8060 | 021 4 900 900
iis@iis.lk | info@iis.edu.lk
IIS CITY CAMPUS
www.iis.edu.lk | 021 222 8060 | info@iis.edu.lk

குருவேதுணை
வாழ்கவையகம் வாழ்கவளமுடன்



யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா பயிற்சிகள்

அருளாசன் வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகின்றது.

காலம் : 05.11.2016 தொடக்கம் 11.11.2016 வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம்
தலைமை - மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தவேல் அவர்கள் (தலைவர் யாழ். மனவளக் கலை மன்ற அறக்கட்டளை)
பயிற்சி வழங்குபவர் - மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு. இந்தியா)

*காயகல்ப பயிற்சி *எளியமுறை தியானப்பயிற்சிகள்
*எளியமுறை உடற்பயிற்சிகள் *அகத்தாய்வுப்பயிற்சிகள்

அகத்தாய்வு I பயிற்சியானது 05.11.2016, 06.11.2016 வரை சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை நடைபெறும்.

மனவளக்கலை யோகா பயிற்சிகளை திறன்பட பயின்று முழுமை நலம் பெற்று வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிவுத்திருக்கோயில்
81 பிறவுண் வீதி, கொக்குவில்.
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2772
(J/5849)(19.20)
யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தை அரசு கைவிட்டு விட்டதாம்

## குற்றஞ்சாட்டுகின்றார் விமல்

கொழும்பு, நவ.4

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு இழப்பீடு வழங்கும் அரசு இராணுவத்தை மட்டும் கைவிட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் போராட்டம் மேற்கொண்டு வரும் பகுதிக்கு நேற்று நேரில் சென்றபின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எந்தவொரு இனத்தவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமே இது. நாட்டைக் காப்பாற்றிய இராணுவம் வீதியில் அமர்ந்துள்ள நிலையை இந்த அரசு வேடிக்கை பார்க்கின்றது.

நாட்டின் பாதுகாப்பிற்காக மிகவும் கஷ்டங்களைச் சந்தித்த பாதிக்கப்பட்ட வீரர்களின் போராட்டத்துக்கு இதுவரையில் எந்தவித பயனும் இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.- என்றார். (ற)

# மோசடியாளரைப் பாதுகாக்க முற்படுகின்றார் பிரதமர்

## ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்

கொழும்பு, நவ.4

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பலத்தைக் கையில் எடுத்துக்கொண்டே பர்பெச்சுவல் டெசரிஸ் நிறுவனம் செயற்பட்டது. அரசு தொடர்ந்தும் குற்றவாளிகளுக்கு வெள்ளையடித்து வருகின்றது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர மோசடியில் சம்பந்தப்பட்ட நபர்களைப் பாதுகாத்துக் கொண்டு அந்த மோசடியை வெளிகொண்டு வந்தவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

நட்பு, தொடர்புகளை கைவிட்டு, நாட்டின் நலனுக்காகப் பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் வட்டி வீதம் தற்போது 4 வீதத்தால் அதிகரித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விழுங்கியுள்ளது- என்றார்.(ற)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.4

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அச்செழுவிலும், கிளிநொச்சியில் நாச்சிக்குடாவிலும், வவுனியாவில் வீரபுரத்திலிருந்து நேரியகுளம் வரையும், மன்னாரில் முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, அரிப்பு, மறிச்சுக்கட்டி, பாலைக்குளி, முள்ளிக்குளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)


கல்லீரல் தேவை
Liver Wanted

கல்லீரலின் ஒரு சிறு பகுதி
தேவைப்படுகின்றது.



இரத்த வகை- A+/ O
வயது: 18-50
தானம் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு
கொள்ளவும்.மேலதிக விவரங்களுக்கு.
(J 4681) (12,17,18)
அழையுங்கள் : 077 577 8871

வேலையாள்கள் தேவை

01. Technical Officer
02. Technical Assistant
(முல்லைத்தீவுப் பிரதேசத்தில்)
03. மேசன்
04. உதவியாள்கள்
05. வயறிங், பிளம்பிங் வேலை தெரிந்தவர்கள்
06. வெல்டர்
(ஜே/5823)(11,18,21)
076 866 3944

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்

முதலாம் வருட முதலாம் அரையாண்டு பரீட்சைகள் - 2015
கல்வியாண்டு 2014 / 2015

கலைமாணிப்பட்ட முதலாம் வருட மாணவர்களின் முதலாம் அரையாண்டு பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 16.11.2016 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றேன்.

மாணவர்கள் தமக்குரிய பரீட்சை நேர அட்டவணையை கலைப்பீட விளம்பரப்பலகையில் நாளை முதல் பார்வையிடலாம் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

- பதிவாளர் -
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(சு/23088)(11,18,21)

அறிவித்தல்
வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பல் நோயாளர்களுக்கு
இலவச பல் சிகிச்சை

லண்டனில் கடமை புரியும் Dr. செல்வன் மேதர்,B.D.S (Sri Lanka) B.D.S (London) D.D.P.H.R.C.S(London), Diploma in Sedation (London) பல் வைத்திய நிபுணர் அவர்களால் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை பல் சிகிச்சை நடத்தப்படும். பல் நோயாளர்கள் இங்கு வந்து பயன் பெறுங்கள். முற்பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 021 22 55157

Secretary
Green Memorial Hospital
Manipay




*மழைகாலத்தில் ஏற்படும் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி நோய்களில் இருந்து மாணவர்களைக் காப்பாற்றும் வகையில் நெடுங்கேணி ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டது. ஒலுமடு கிராம மக்களும், நெடுங்கேணி பொலிஸாரும் இணைந்து பாடசாலை வளாகத்திலுள்ள கழிவுப்பொருள்கள், நீர்தேங்கும் நிலைகள், பற்றைகள், புற்கள் போன்றவற்றைத் துப்புரவு செய்தனர்.* (ற-7)


சக்கர நாற்காலி
புதிய வரவு - புதிய வடிவம், புதிய பாணி - யாவும் புதிது




எங்கள் சாதாரண சக்கர நாற்காலியின் விலை 9980/=
மருந்தகங்களுக்கும் மருத்துவ நிலையங்களுக்கும் விசேட கழிவு உண்டு.
Vanikaa Surgicals - No.203, Hospital Road, Jaffna.
Telephone : 021 222 0077 - Hot Line- 077 442 2367

விற்பனைக்கு
6", 8" கொங்கிறீற் கற்கள், காட்டுக்கல், மண், வீட்டு இடிபாடுகள் என்பன விற்பனைக்குண்டு.
077 606 2747

வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகரத்திலிருந்து 5Km சுற்று வட்டாரத்தினுள் 5 பேர் கொண்ட குடும்பத்தினருக்கு வீடு வாடகைக்குத் தேவை.
077 406 4241

வேலையாள்கள் தேவை
பரமேஸ்வராச்சந்தியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு மின்சாரப் பொருள்கள் விற்பனையாளர் தேவை.
நியூரோன் எலற்றிக்கல்
05.11.2016 சனிக்கிழமை நேரில் வரவும்.


# 18 வயதைப் பூர்த்தி செய்தால் அனைவருக்கும் வாக்குரிமை

## சட்டத்தரணி யு.எல்.அலிசக்கி சுட்டிக்காட்டு

இலங்கைப் பிரசையாக இருந்து 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. இவைகளனைத்துக்கும் அடிப்படையில் இலங்கைப் பிரசையாக இருந்து கொண்டு 18 வயதைப் பூர்தி செய்தவுடன் தேர்தல் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாற்றுத் திறனாளியும் சட்டத்தரணியுமான யு.எல். அலிசக்கி தெரிவித்துள்ளார்.

"வாக்காளர் உரிமையும் அரசியல் பங்களிப்பும்" எனும் தொனிப்பொருளின் கீழ் போரதீவுப்பற்று பிரதேச கதிரவன் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு நிகழ்வு நேற்று வெல்லாவெளியில் அமைந்துள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வாக்காளர்கள் வாக்களிக்கும் முன்னர் அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களை நன்கு வாசித்து அறிந்து கொள்ள வேண்டும். அனைத்துக் கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களைப் படித்து அறிந்தால்தான் மக்களுக்காக யாரெல்லாம் அதிகளவு சேவை நோக்குடன் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

மாற்றுத் திறனாளிகளுக்கு எப்படியான சலுகைகள், உரிமைகள் என்பன அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன என அறிந்து, அதன் பின்னர் நாம் விரும்பிய கட்சியைச் சேர்ந்த விரும்பிய வேட்பாளரைத் தெரிவு செய்யலாம். அதே போன்று மாற்றுத் திறனாளிகளும் தேர்தல்களில் போட்டியிடலாம். அவற்றுக்காக நாம் முதலில் எமது பெயர்களைச் சரியாக வாக்காளர் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளாகிய நாமும் அரசியல் கட்சிகளிடம் எம்மைப் பற்றியும் மாற்றுத் திறனாளிகளின் தேவைகள், குறைபாடுகள், பிரச்சினைகள் பற்றியும் எடுத்தியம்ப வேண்டும். அவ்வாறு அரசியல் கட்சியினருக்கு எமது பிரச்சினைகள் குறித்துத் தெரிவித்தால்தான் அவர்களது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் மாற்றுத் திறனாளிகள் பற்றிய கருதுக்களை வெளியிடுவார்கள். எனவே மாற்றுத் திறனாளிகளாகிய எமது பிரச்சினைகள் தொடர்பில் சம்மந்தப்பட்டவர்களுக்கு எடுத்துச் சொல்லப் பின்னிக்கக் கூடாது- என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் கௌரவத்தை பாதிக்காது நடக்க வேண்டும்

## கல்வி அமைச்சு அறிவுறுத்து

பிள்ளைகளின் தேவைகளுக்காக பெற்றோர் பாடசாலைகளுக்கு வரும்போது பாடசாலை மற்றும் பெற்றோர்களின் கௌரவத்தைப் பாதிக்காதவாறு அதிபர்கள் நடந்து கொள்ள வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்தது.


கல்வி அமைச்சின் செயலாளரால் சகல பாடசாலை அதிபர்களுக்கும் இது தொடர்பாக சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்து வரும் போதும் மற்றும் பல்வேறு தேவைகளுக்காகப் பாடசாலைக்கு வரும் போதும் அணிந்திருக்க வேண்டிய ஆடைகள் குறித்து பாடசாலைகளால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் முகங்கொள்ளும் அசௌகரியங்கள் குறித்து எமது அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பாடசாலைக்கு பெற்றோர்கள் வரும்போது பாடசாலை மற்றும் பெற்றோர்களின் கௌரவத்தைக் காக்கும் வகையில் ஒழுங்காக ஆடைகளை அணிந்து வருவதற்கும் உரிய கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறும் அறியத்தருகின்றோம்.

அவர்களைப் பாடசாலையில் இருந்து வெளியேற்றாமலும் பாடசாலைக்கு வரும் பெற்றோர்களின் ஆடையணிகள் தொடர்பாக அவர்களை அசௌகரியத்துக்குள்ளாக்கும் வகையில் பாடசாலை அறிவித்தல் பலகைகளில் அறிவித்தல் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அறியத்தருகின்றேன் – என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-108)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவியும் அரியதாஸ் தர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வியுமாகிய

**அரியதாஸ் கவிஷா**

2016 ஆம் ஆண்டு **5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப்** பெற்றுள்ளார் இவர் பல்கலையும் கற்று பட்டங்கள் பல பெற்று

மேன்மேலும் உயர வேண்டும் என கடவுளை வணங்கிப் பாராட்டுகின்றோம். இவரின் இக் கல்விக்கு ஊக்குவிப்புக்கள் கொடுத்த ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மகிழ்ந்து வாழ்த்துவோர்: பெற்றோர்கள்**

**மதுஷன் பேக்கரி, இறம்பைக்குளம், வவுனியா.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில்





**சு.சுலக்சன்-158 புள்ளிகள் க.சயித்தன் -153 புள்ளிகள்**

பெற்றுப் பாடசாலைக்கும் எமக்கும் பெருமை தேடித் தந்த இருவரையும் பாராட்டி மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: பழைய மாணவர் சங்கம் - யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. நடராஜா சேகர்**

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவக அதிகாரியாகிய **திரு. நடராஜா சேகர் பதவி வழியாக சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு 07.04.2016 அன்று ஜனாதிபதி மாளிகையில் சத்தியப் பிரமாணம்** செய்து கொண்டமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாராட்டுவோர்:**

அம்மா, அப்பா, சகோதரர்கள், வே.நடராசா குடும்பம்


**தும்பளை மேற்கு, பருத்தித்துறை.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு**



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சு.சுலக்சன்**
**158 புள்ளிகள்**


**க.சயித்தன்**
**153 புள்ளிகள்**

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

நிர்வாகம்
ஆசிரியர்கள், மாணவர்கள்,
**வள்ளுவன் பாலர் பாடசாலை**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்



சித்தி பெற்ற இருவரையும் பாராட்டுவதுடன் மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.



**சு.சுலக்சன்-158 புள்ளிகள் க.சயித்தன் -153 புள்ளிகள்**


**வாழ்த்துவோர் - ஆசிரியர்கள், மாணவர்கள் - முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை.**

மந்துவில் வடக்கு, கொடிகாமம். (சி/154)(11,18,21)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்**



**சு.சுலக்சன்**
**158 புள்ளிகள்**

**க.சயித்தன்**
**153 புள்ளிகள்**

**சித்தி பெற்ற இருவரையும் பாராட்டுவதுடன் மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.**

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

நிர்வாகிகள்
வள்ளுவன் சனசமூக நிலையம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நான் அகரம் படித்த பாடசாலையாம் யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் அண்மைக் காலத்தில் கல்வியில் பெறும் சாதனைகள் கண்டு அகமகிழ்கின்றேன்.
அந்த வகையில்
2016 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்



சித்தி பெற்று சாதனை படைத்த மாணவர்கள் இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். பாரதி மாணவர்களே படையுங்கள் சாதனை. தொடரும் எம் வாழ்த்துக்களும் உதவிகளும்



**சு.சுலக்சன்-158 புள்ளிகள் க.சயித்தன் -153 புள்ளிகள்**

**வாழ்த்துவோர்:- திரு.திருமதி நெளபால் நவமணி (குடும்பம்)-(மந்துவில் கிழக்கு)**

(சி/156)(11,18,21) **ஆசிரியர், மனித நேயப் பாடசாலை- சுவிஸ்-** (Switzerland)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சிறைக்குள் கஞ்சாவுடன் சென்ற பெண்ணுக்குச் சிறை

யாழ்ப்பாணம் நவ. 4

யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்குள் கஞ்சா போதைப் பொருளைக் கடத்த முற்பட்ட பெண்ணுக்கு யாழ். நீதிவான் மன்று ஒருமாதகால சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

அந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக இளம் பெண்ணொருவர் கடந்த மாதம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண்ணின் கணவர், குழு மோதல் குற்றச் சாட்டில் மல்லாகம் நீதிமன்றால் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்காகச் சென்ற அந்தப் பெண் உணவுப் பொருள்களையும் சவர்க்கார கட்டிகளையும் கொண்டு சென்றுள்ளார். அவ்வாறு கொண்டு சென்ற சவர்க்காரக் கட்டியினுள் கஞ்சாவினை சூட்சுமமான முறையில் மறைத்துக்கொண்டு சென்றுள்ளார்.

கைதிகளுக்கு பார்வையாளர்களால் வழங்கப்படும் பொருள்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களினால் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது, சவர்க்காரக் கட்டியினுள் இருந்து 725 மில்லிக் கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்தப் பெண் யாழ். சிறைச்சாலையினரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தி நீதிமன்றக் கட்டளையின்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரது வழக்கு அண்மையில் நீதிவான் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருக்கெதிரான குற்றப் பத்திரத்தைப் பொலிஸார் தாக்கல் செய்தனர். அந்தப் பெண் குற்றத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து நீதிவான் சி.சதீஸ்தரன், அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

(வ-4,103)

# எமது பண்பாடு, நாகரிகம் பேணுவது மிக அவசியம்

## பேராசிரியர் சிவலிங்கராஜா சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 4

வறுமைப்பட்டவர்களின் உணவாக இருந்த கூழ் தற்போது பெரிய பெரிய உணவுக் கடைகளில் விசேட உணவாக மாறியுள்ளது. எமது பண்பாட்டுடன் ஒன்றிப்போயுள்ள எமது பாரம்பரிய உணவுகள் நமக்கு தீங்கைத் தராதவை. சில மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்றாலும் அதனையும் தாண்டி எமது தொன்மையை மறக்காது பண்பாட்டை, நாகரிகத்தைப் பேணவேண்டும் .

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சிவலிங்கராஜா தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா - 2016 நடத்தப்பட்டது. அதில் பேராசிரியர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

இளம் சந்ததி மத்தியில் நமது பாரம்பரியம், பண்பாடு என்பன அருகுகின்றன. பண்பாடு என்பது பல்வேறு காலகட்டங்களிலும் பேசப்படுவதாகும். எமது பண்பாட்டைப் பறக்க விட்டு மேலைத்தேய நாகரிகங்களில் மூழ்குகின்றோம். நாம் எத்த கைய பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்கள், எத்தகைய பண்பாட்டுடன் வாழ்ந்தவர்கள் என்பது மூத்தவர்களுக்குத்தான் தெரியும். அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

எமது இளம் சமுதாயத்தில் ஆசிரியர், மாண வர்களின் உறவு முறையால் பல்வேறு பிரச்சினைகள் உருவாகுகின்றன. தற்காலத்தில் ஆசிரியர்களை நண்பர்களாக நினைத்துப் பழகுகின்றனர். அவர்களுக்குரிய மரியாதையைச் செலுத்தத் தவறுகின்றார்கள். இது முற்றிலும் தவறு. எமது பண்பாட்டில் ஆசிரியர் மாணவர் உறவு முறை பெரிதாகப் பேசப்பட்ட, மதிக்கப்பட்ட ஒரு விடயமாகும். இன்று அது தலைகீழாக மாறியுள்ளது. ஆசிரியர்களின் ஆசீர்வாதம் இன்றேல் எதுவும் செய்ய முடியாது.

பண்பாடு என்பது நிலத்தைப் பண்படுத்தல் என்பதாகும். அது போல் நாம் எம்மை பண்படுத்த வேண்டும். நாம் எமது பாதையை மறந்திருக்கிறோம். தமிழ் மக்களின் பண்பாடு, நாகரிகம், உணவுப் பழக்கங்கள், உறவு முறைகள், சடங்குகள் என்பன மாறிவிட்டன. சில மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்றாலும் அதனையும் தாண்டி எமது தொன்மையை மறக்காது பண்பாட்டை, நாகரிகத்தைப் பேண வேண்டும் .

இயற்கை வைத்திய முறைகளையும் நாடவேண்டும். ஒரு காலத்தில் வறுமைப்பட்டவர்களின் உணவாக இருந்த கூழ் தற்போது பெரிய பெரிய உணவுக் கடைகளில் விசேட உணவாக உள்ளது. நமது பண்பாட்டுடன் ஒன்றிப்போய் உள்ள எமது பாரம்பரிய உணவுகள் நமக்கு தீங்கினைத் தர மாட்டாது. இதனை உணர்ந்து நாம் உணவு வகைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

எமது பண்பாட்டின் அடையாளங்களாக திகழ்ந்த பெட்டி, பாய்களை இன்று காணவில்லை. பிறப்பு முதல் இறப்பு வரையான சடங்குகள் கூட இன்று மாறி எமது பண்பாடுகளையப்பட்டு மேலைத்தேய பண்பாடுகள் ஆக்கிரமித்துள்ளன. தொலைக் காட்சி, கைத்தொலைபேசி என்பன இளைய தலைமுறையைப் பிழையாக வழிநடத்தும் ஒரு சாதனமாக திகழ்கின்றன. இவை எல்லாம் மாறவேண்டும். எமது இளைய சமுதாயம் எமது பண்பாட்டை அறிந்து அதன் வழி நடக்க வேண்டும் - என்றார்.

(ற-21,10)

## நெல்லியடி வர்த்தகரின் மோட்டார் சைக்கிள் பட்டப்பகலில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 4

நெல்லியடியில் கடைகளுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வர்த்தகரின் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாகக் முறையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி நகரில் நேற்றுமுன்தினம் திருட்டு இடம் பெற்றது. குறித்த வர்த்தகர் உள்ளிட்டோரின் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சிலரது சைக்கிள்கள் அந்த இடத்தில் நிறுத்துவது வழமை. இரவானதும் கடைகளைப் பூட்டிவிட்டு வர்த்தகர்கள் தத்தமது சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை எடுத்துச் செல்வர். இந்த நிலையிலேயே திருட்டு இடம்பெற்றுள்ளது.

அன்று காலை 8.30 மணியளவில் வர்த்தகர் வழமை போன்று மோட்டார் சைக்கிளை விட்டுக் கடையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். மாலை நேரம் பார்த்தபோது மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. தேடுதல் நடத்தியும் கிடைக்காத நிலையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

(வ-4)

# சொகுசுக் காரில் சிக்கின ஆடுகள்

திருடப்பட்ட ஆடுகள் இரண்டை, கறுப்புக் கண்ணாடிகளைக் கொண்ட ஹைபிரிட் சொகுசுக் காரொன்றில், கொழும்புக்குக் கடத்திச் செல்ல முற்பட்ட சம்பவமொன்று முந்தல் பிரதேசத்தில் வைத்து நேற்று வியாழக்கிழமை முறியடிக்கப்பட்டது.

புத்தளம் பிரதான வீதியில் பயணித்து கொண்டிருந்த சொகுசுக் காரொன்று விபத்துக்குள்ளானது.

விபத்தைக் கேள்வியுற்ற பொலிஸார், உடன் அங்கு விரைந்தபோது, காரிலிருந்தவர்கள் தலை மறைவாகிவிட்டனர். எனினும், காரைச் சோதனையிட்டபோது காருக்குள், ஆடுகள் இரண்டு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான சொகுசுக் காரானது, கொழும்பு - கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள பெண்ணொருவருடையது என்றும், அந்தப் பெண், கார் வாடகைக்கு விடும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றமையும் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(து)

## மாணவர் நாடாளுமன்ற அமர்வு இன்று

யாழ்ப்பாணம், நவ. 4

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற 3ஆவது அமர்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொள்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

(வ-10)

கிளீனிங் சேவிஸ் ஊழியர் தேவை

யாழ்ப்பாண நகர பகுதியில் உள்ள அரச நிறுவனங்களில் வேலை செய்யக்கூடிய பெண் தொழிலாளர்கள் தேவை.

தொடர்பு - m.v.சின்னய்யா பாலதாஸ்

077 5396350, 077 2392850

அங்கர் கிளீன்ங் சேவிஸ்.

(வி/138)(9.20)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா சிவலிங்கம்



குப்பிளான் வடக்கு, சமாதி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவலிங்கம் நேற்று (03.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
தம்பித்துரை வளவு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 4422550

(J 5853)
(18.17.19)

### கந்தையா பரமநாதன்



4/3 முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமநாதன் (03.11.2016) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4/3. முருகமூர்த்தி வீதி.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

(ஜே/5854)(19.20)

### கந்தையா சுப்பிரமணியம்

பிறப்பு
27.12.1947

இறப்பு
03.11.2016



சரவணை மேற்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.29/3 ஸ்ரீநகர் பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (03.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-அந்தோனியாள் தம்பதிகளின் அன்பு மகனும் பூபதியின் பாசமிகு கணவரும் ரவி, சுரேஷ், காலஞ்சென்ற செந்தூரன், நவனீதராசா (ஆதார பொது வைத்திய சாலை, வவுனியா), ஆரணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பலதா, கோகிலவதனி, ரதீஸ்மாலா ஆகியோரின் மாமனும் சஞ்சை, சுபி, தாரகா, தர்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும் நாகம்மா, காலஞ்சென்ற கனகலிங்கம், மகாலிங்கம், கமலாதேவி, சுந்தரலிங்கம், சண்முகம்பிள்ளை, சுப்புலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குமரன் தெய்வி, அவர்களின் மருமகனும் மாணிக்கம், கனகம்மா,சிவகாமிப்பிள்ளை, பூமணி, பொன்னையா, ஏகாம்பிகை, அந்தோனிப்பிள்ளை, சந்திரா, பரமேஸ்வரி, தயாபரன், பொன்னம்பலம், மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் பொது மயானத்திற்கு தகனம் செய்வதற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(V 139)
(16.17.19)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நடும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பெரியளவில் வளர்ச்சியடையும்" - கிரேக்கப் பழமொழி.

கார்த்திகை
01–30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்"

# ஆசிரிய இடமாற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்



வவுனியா, நவ.4

வவுனியா - தெற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சிங்கள பாடசாலைகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 15 ஆசிரியர்களுக்கு அரசியல் செல்வாக்கின் மூலம் இடமாற்றம் வழங்கப்பட்டது என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று நடத்தப்பட்டது.

வவுனியா தெற்கு வலயக் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது.

பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஒருமாத காலத்துக்குள் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளனர். அரசியல் தலையீடு காரணமாகவே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் சிங்கள மாணவர்களின் புதிய கற்கை நெறியை உடனடியாக ஆரம்பிக்கவும், சிங்கள மாணவர்களின் ஆரம்ப கல்வி செயற்பாடுகள் வேற்றுத்தாயின் பிள்ளைகள் போல் பாராமுகமாக இருப்பது ஏன்? கல்வி அமைச்சர் அவர்களே! புதிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கியது ஏன்? புதிதாக வரும் ஆசிரியர்களுக்கு அரசியல் மூலம் இடமாற்றம் வழங்கியது யார்? போன்ற பதாகைகளை ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் ஏந்தியிருந்தனர்.

கவனவீர்ப்பு போராட்டத்தை அடுத்து, வலயக் கல்வி திணைக்களத்துக்கும் மக்களுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. சிங்கள பாடசாலைகளுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் எனக் கல்வி திணைக் களத்தால் தெரிவிக்கப்பட்டது. 100 ஆசிரியர் நியமனங்கள் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதால் மக்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதையடுத்து கவனவீர்ப்பு போராட்டம் கைவிடப்பட்டது. (ற-21)

## பனை வளம் தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 4

பனம் வளம் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பாடசாலை மட்டங்களில் மாணவர்களுக்கு பனை சார் பொருள்களின் அத்தியாவசியத்தை முன்னெடுக்கும் வகையில் விழிப்புணர்வு கருத்தரங்குகள்ள மேற்கொள்ளப்படவுள்ளன. என்று பனை அபிவிருத்தி சபை தெரிவித்தது.

எமது தேசத்தின் பெரும் வளம் குறிப்பாகத் தமிழர்களின் அடையாளமாக பனை மரம் வர்ணிக்கப்படுகின்றது.

வடமாகாணத்தில் எல்லா வளத்தையும்விட பனை வளம் சிறந்து விளங்குகின்றது. பனை வளம் பற்றியும் அதனோடு தொடர்புடைய உற்பத்திப் பொருள்கள் தொடர்பாகவும் பாடசாலை மாணவர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராயப்படுகின்றது.

இந்த வளம் சார் அபிவிருத்தியை முன்னிட்டு பாடசாலை அதிபர்கள், பனை அபிவிருத்தி சபையுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு மேற்படி கருத்தரங்குகளை தமது பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வாய்ப்பை பனை அபிவிருத்தி சபை வழங்கவுள்ளது. தொழில் கல்விக்கு ஈடான ஒரு கல்வியாக பனைசார் கல்வி நெறி விளங்குகின்றது.

இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றித் தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். பனை சார் உற்பத்தி தொடர்பான விழிப் புணர்வுக் கருத்தரங்குகள் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். இதனோடு இணைந்த வகையில் பாடசாலையிலிருந்து கல்வி கற்று விலகியுள்ள மாணவர்களும் பனம்சார் உற்பத்திக் கைப்பணிப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளலாம். இந்தப்பயிற்சி நெறியில் ஊக்கு விப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது - என்று அபிவிருத்திச்சபை தெரிவித்தது. (ற-10)

## க.பொ.த. உயர்தர மாணவர் இணையம் மூலம் கற்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 4

2017ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான பாடங்கள் வார நாள்களில் மாலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை இணையம் மூலம் கற்பிக்கப்படுகின்றது. அனைத்து மாணவர்களும் வீட்டில் இருந்தபடி இணைத் தொடர்பு ஊடாகக் கற்கமுடியும். இவ்வாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றவுள்ள ஆயிரம் மாணவர்களுக்கான பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்காத மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பத்தை பணிப்பாளர், கற்றல் உபகரண அபிவிருத்திப் பிரிவு, கல்வி அமைச்சு, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். இது தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்துகொள்ள 021 4646445 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் - என்றார். (ற-7)

# உருத்திரபுரத்தில் சிக்கியது கசிப்பு உற்பத்தி நிலையம்

கிளிநொச்சி, நவ.4

கிளிநொச்சி - உருத்திரபுரம் பிரதேசத்தில் சூட்சுமமான முறையில் இயங்கிய கசிப்பு உற்பத்தி மையமொன்றை முற்றுகையிடப்பட்டு கசிப்புக் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங் கள் சில கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார் என கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

உருத்திரபுரம் பிரதேசத்தில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின்போதே இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டறியப்பட்டு முற்றுகையிடப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகள், குறிப்பிட்ட இடத்தை முற்றுகையிட்டு சந்தேகநபரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 11ஆம் திகதி கைப்பற்றப்பட்ட உபகரணங்களுடன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் - என்று கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-21,ய)





# கழுத்தில் கத்தி வைத்து வவுனியாவில் கொள்ளை

வவுனியா, நவ.4

வவுனியாவில் வீட்டு உரிமையாளரது கழுத்தில் கத்தி வைத்து, மிரட்டி 10 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை வவுனியா பழையவாடி வீதி புளியங்குளத்தில் இடம்பெற்றது.

அதிகாலை ஒரு மணியளவில் வவுனியா பழையவாடி வீதி புளியங்குளம் பகுதியில் உள்ள வீட்டுக்குள் நுழைந்த இருவர் திடீரென வீட்டுக்குள் புகுந்து, வீட்டிலிருந்தவர்களின் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டியுள்ளனர். நகைகளைத் தருமாறும் வற்புறுத்தியுள்ளனர்.வீட்டில் சோதனைகளை மேற்கொண்ட கொள்ளையர்கள் 10 பவுண் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன. மோப்ப நாயின் உதவியுடன் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தேடப்படுகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிலத்தை வீசி, கூரிய ஆயுதத்தினால் தாக்கியே குடும்பத்தலைவர் கொலை

## ஐந்து சந்தி கொலை வழக்கில் சட்ட மருத்துவ அதிகாரி சாட்சியம்

யாழ்ப்பாணம், நவ.4
அமிலத்தினால் தாக்கப்பட்டும், தொடர்ந்து கூரிய ஆயுதத்தினால் வெட்டிக்காயங்கள் ஏற்படுத்தியும் ஒரு கை துண்டிக்கப்பட்டே குடும்பத்தலைவர் கொலை இடம்பெற்றது.

இவ்வாறு யாழ்.மேல்நீதிமன்றில் அறங்கூறும் அவை முன்னிலையில் நடைபெறும் யாழ்.ஐந்து சந்திக் கொலை வழக்கில் சட்ட மருத்துவ அதிகாரி நேற்றுச் சாட்சியமளித்தார்.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் கொலை தொடர்பான சாட்சிகளின் பதிவுகள் யாழ்.மேல்நீதிமன்றில் அறங்கூறும் அவை முன்பாகக் கடந்த 3 தினங்களாக இடம்பெற்று வருகிறது.

சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்திய யாழ். போதனா வைத்தியசாலையில் அப்போதைய சட்ட மருத்துவ அதிகாரி சி.சிவரூபன் நேற்று யாழ்.மேல்நீதிமன்றில் அறங்கூறும் அவை முன்பாகச் சாட்சியமளித்தார்.

வெட்டுக்காயத்தினால் ஏற்பட்ட குருதிப் பெருக்கின் காரணமாகவே குறித்த குடும்பத்தலைவர் இறந்துள்ளார் என்று என்னால் கூற முடியும். இறந்தவர் இரண்டுவகையான தாக்குதலுக்கு இலக்காகி உள்ளார். முதலில் அமிலம் ஊற்றப்பட்டுத் தாக்கப்பட்டார். பின்னர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் காயப் படுத்தப்பட்டுள்ளார்.

முதலில் அமிலத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது வெட்டுக்காயத்தால் வந்த இரத்தம் அமிலத்தால் ஏற்பட்ட காயத்தின் மேல் காணப்படுகின்றது. இறந்தவரின் முகப்பகுதி, நெஞ்சு, வயிறு, கைகள் போன்றவற்றில் அமிலத்தால் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன. அதன் பின்னர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதனால், அவரின் தலையின் பின் பகுதியில் 3 வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. இது மண்டையோடுவரை சென்றுள்ளது. வலது கை முழங்கையில் இருந்து 16 சென்ரி மீற்றர் கீழே முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இடது கையின் வெளிப்பகுதியில் 2 வெட்டுக்காயங்கள் ஆழமானதாக காணப்பட்டதுடன் மார்புப் பகுதியில் மேற்பாங்கான காயமும் காணப்பட்டது.

இந்த வெட்டுக்காயங்கள் கூரிய ஆயுதத்தால்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான காரணம் காயங்கள் 18 சென்ரி மீற்றர் ஆழமாகக் காணப்படுகின்றன என்று சட்ட மருத்துவ அதிகாரி சி. சிவரூபன் சாட்சியத்தில் தெரிவித்தார்.

குடும்பத்தலைவரின் இறப்புக்கான காரணமாக நீங்கள் எதனைக் கருதுகின்றீர்கள் என்று அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிசாந் கேட்டதற்கு, வெட்டுக்காயத்தினால் ஏற்பட்ட குருதிப்பெருக்குத்தான் காரணம் என்று என்னால் கூற முடியும் என்று சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார். இந்த வழக்கின் ஏனைய சாட்சியங்கள் இன்றும் இடம்பெறவுள்ளன. (வ-4,6)

## சைவ சமய போட்டிகள்

யாழ்ப்பாணம் நவ 4
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் ஆண்டு தோறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தில் நடத்தப்படும் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)

## நில அளவை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 4
நில அளவை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஓய்வு நிலை மருத்துவர் ஆ.திருநாவுக்கரசர் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. புன்னாலைக்கட்டுவன் வடக்கு, பலாலி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கா பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மடு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.சுபாகரனும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ரி.பிரகாஸும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், நவ.4
யாழ். மாவட்டத்தின் சர்வோதயம் சார்ந்த சிவில் குடிமக்கள் குழு, தேசோதயம் சமாதான நீதிவான்கள் அமைப்பு, அனைத்து மத நல்லிணக்கக் குழு என்பவற்றுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில், அரசியல் சீர்திருத்தம், நாட்டின் நிலமை ஆகியன பற்றி ஆராயப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட சர்வோதய தலைவர் நா. தனேந்திரன் அறிவித்தார். (வ-ள)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.4
யாழ்ப்பாணம் கொட்டடி பகுதியில் உணவுப்பொருள் பதனிடல், பொதியிடல், விற்பனை நிலையத் திறப்பு விழா எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குஇடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-ள)

## மனவளக்கலை பயிற்சி அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ. 4
யாழ். அறிவுத் திருக்கோயிலின் மனவளக்கலை பயிற்சி தொடர்பான அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பிறவுன் வீதியில் அமைந்துள்ள அறிவுத்திருக்கோயிலில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. மனவளக்கலை யோகப் பயிற்சி தொடர்பாக இந்தியப் பேராசிரியர் எஸ்.இந்திரா அறிமுக உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## ஜீ.சி.ஈ. சாதாரண மாணவர்களுக்கு நாளைகருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.4
ஜீ.சி.ஈ. சாதாரண தரம் கற்கும் யாழ். மாவட்ட மாணவர்களுக்கான விஞ்ஞான மற்றும் கணித பாடங்களுக்கான கருத்தரங்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நாளை நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சு கேட்டுள்ளது. (வ-ள)

## தமிழ் அரசுக் கட்சியின் சாவகச்சேரிப் பணிமனை ஞாயிறன்று திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 4
இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சாவகச்சேரித் தொகுதிக்கான பணிமனைத் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 18, வேலாயுதம் வீதி, நுணாவிலில் நடைபெறும் என்று அந்தக் கட்சியின் செயற்குழு அறிவித்தது. இலங்கை தமிழ் அரசுக்கட்சி யாழ். மாவட்டத் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனும், இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## வீதியைத் திருத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.4
யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள ஆனைப்பந்தி 4ஆம் ஒழுங்கை, பிரதான வீதியுடன் இணையும் பகுதி கடும் சேதமடைந்துள்ளது. அது குறித்து மாநகர சபைக்கு கடந்த ஜூலை மாதம் அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர். இந்த மாத இறுதிக்குள் குறித்த வீதி சீரமைக்கப்படும். பல வீதிக் குறைபாடுகளை நாம் நிவர்த்தி செய்து வருகிறோம். இதன் காரணமாக காலதாமதம் ஏற்பட்டது. மிக விரைவில் ஆனைப்பந்தி 4ஆம் ஒழுங்கை வீதிப் பகுதி திருத்தப்படும் என்று மாநகர சபைத் தகவல்கள் தெரிவித்தன. (ற-ள)



## வீரசிங்கத்தின் உருவச் சிலைக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், நவ.4
கூட்டுறவு பெரியார் வீரசிங்கத்துக்கு உருவச் சிலை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று மாவட்டக் கூட்டுறவுச் சபை வளாகத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் சிலைக்கான அடிக்கல்லை நட்டார். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சிறிக்குமார், கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.சுந்தரலிங்கம் உட்படப் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த உருவச் சிலை ஒரு மாதகாலத்துக்குள் அமைக்கப்பட்டு டிசெம்பர் 5 ஆம் திகதியளவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## கரையோரக் கட்டுமானங்களுக்கு அனுமதி பெறுவது கட்டாயம்

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 4
யாழ். மாவட்ட கடற்கரையோரப் பகுதிகளில் கட்டடங்கள் அமைத்தல் உட்பட எந்தவித அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் யாழ். மாவட்டச் செயலகத்தில் உள்ள கரையோரம் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்திடம் முன் அனுமதி பெறப்படவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கரையோர வலயம் எனக் கருதப்படும் கடற்கரைப் பகுதியில் இருந்து தரை நோக்கிய 300 மீற்றர் தூர எல்லையும், கடலை நோக்கிய 2 கிலோ மீற்றர் வரையான எல்லையும் உள்ளடக்கிய பிரதேசங்களில் கடற்தொழில் தேவை கருதியோ அல்லது வேறு எந்தத் தேவைகள் கருதி நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ கட்டுமானங்களை அமைத் தல் மற்றும் புனர் நிர்மாணம் செய்தல் போன்றவற்றுக்கு முன் அனுமதி பெறப்படவேண்டியது கட்டாயமாகும்.

கரையோர வலயத்தில் கட்டுமானங்கள் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கிவரும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல முகாமைத்துவ திணைக் களத்தின் ஊடாக அனுமதி பெற முடியும்.

அனுமதி பெறாமல் சட்டவிரோதமான முறையில் கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டு வருகின்ற கட்டமைப்புகளுக்கு எதிராக 1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1981ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ற-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் பதிலிருப்பு முன்னாயத்த நிகழ்வு சங்கானையில் நேற்று

## வல்வெட்டித்துறை வைத்தியசாலையிலும் நடத்தப்பட்டது



வல்வெட்டித்துறையில் நடந்த ஒத்திகை நிகழ்வில்

சங்கானை, நவ.4

சங்கானை மத்திய நகர பஸ்தரிப்பு நிலையத்தில் நேற்று மு.ப. 10 மணியளவில் தனியார் பஸ், முச் சக்கர வண்டி, படி ரக வாகனம் ஆகிய மூன்றும் ஒரேநேரத்தில் விபத்துக்கு உள்ளாகின. அதில் 7 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சங்கானை வைத்தியசாலை மற்றும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் வாகன உதவியுடன் சங்கானை வைத்தியசாலைக்கும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப் பட்டனர்.

இந்த நிகழ்வு இடர் பதிலிருப்பு முன்னாயத்த நிகழ்ச்சியாக நேற்று சங்கானையில் நடத்தப்பட்டது.

வலி. மேற்குப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஒத்திகைப் பயிற்சி நிகழ்வு வெற்றி கண்டுள்ளது என்று பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

அரச அலுவலர்கள், படையினர், மாவட்ட அலுவலர்கள், பொதுமக்கள் என 300க்கும் மேற்பட்டோர் பயிற்சியில் கலந்து கொண்டு முன்னாயத்த பயிற்சி மூலம் இடர் ஒன்று இடம்பெற்றால் இதனை எவ்வாறு தவிர்ப்பது என்பது குறித்த தீர்வை பெற்றனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சங்கானை மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இடம்பெற்ற பெரிய வாகன விபத்து இடரில் பலர் உயிருக்காகப் போராடுகின்றனர் என்று முதலில் பிரதேச செயலருக்கு மக்களால் தெரியப்படுத்தப்பட்டது. பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் உடனடியாகச் செயற்படும் வண்ணம் அந்தத் தகவலை சங்கானை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிக்கும் அவர்களது அம்புலன்ஸ் பிரிவுக்கும் அதனைத் தொடர்ந்து சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸுக்கும் பொலிஸாருக்கும் தகவலை வழங்கினார். அதேநேரம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க முதலுதவிப் பிரிவுக்கும் தகவல் வழங்கப்பட்டது. வாகன விபத்தில் காயமடைந்தவர்களைக் காப்பாற்றும் போலிப் பயிற்சியானது உண்மையாக இடம்பெற்றால் எவ்வாறு அனைத்து சேவை பிரிவுகளும் பங்குகொள்வது என்பது தொடர்பில் உடனடியாகச் செயலுறு வலுகொடுக்கப்பட்டது. இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் வீதிப்போக்குவரத்துப் பொலிஸ் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவு, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பிரதேச செயலக அனைத்துப்பிரிவு அலுவலர்கள், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், உள்ளூராட்சி சபை மாவட்ட இடர் முகாமைத்துவப்பிரிவு, சங்கானை வைத்தியசாலை அம்புலன்ஸ், வைத்தியர்கள், தாதியர்கள், பரிசாரகர், முதலுதவிப் பிரிவு மற்றும் பொது மக்களின் விசேட பங்களிப்புடன் இந்த நிகழ்ச்சி வெற்றி கொள்ளப்பட்டது.

நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதன், காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி தே.பாபு, மாவட்ட இடர்பிரிவு உதவிப்பணிப்பாளர் ச.ரவி மற்றும் பலர் கலந்து கொண்டு முன்னாயத்த போலிப் பயிற்சியை முறையாக நடத்தி வெற்றி கொண்டனர். இறுதியாக இவ்வாறான விபத்து ஒன்று ஏற்பட்டால், மக்கள் எவ்வாறு விழிப்படைய வேண்டும் என சங்கானை அரச வைத்தியசாலையில் விளக்கமளிக்கும் கூட்டமும் வலி.மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இதன் பெறுமானம் மதிப்பீட்டாளர் இருவரால் அதன் மதிப்பீடு செயற்றிறன் அளவிடப்பட்டது. கடற்கோள் அவசரநிலைமைகளின்போது நடந்திகொள்ளவேண்டிய செயற்பாடுகள் தொடர்பான ஒத்திகை நிகழ்வும் நேற்று வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்றது. இடர் நிலைமைகளில் இருந்து மக்களை மீட்டெடுத்தல், காயம் அடைந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர மருத்துவ உதவிகளைச் செய்தல், முதலுதவி செய்தல், மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மீட்பது தொடர்பில் இந்த ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றது.

அதில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.ஜெயசீலன், இலங்கை செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத் தர்கள், இடர் முகாமை உத்தியோகத்தர், பொலிஸார், இராணுவ அதிகாரிகள், கடற்படையினர், மருத்துவ அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். நேற்று நண்பகல் 12 மணிக்கு தொடங்கிய இந்த நிகழ்வு பிற்பகல் ஒரு மணிவரை இடம் பெற்றது.

(ந-21,50,26)

# உயிரோடு காணாமற்போனோரை அகழ்ந்து பார்க்கவேண்டிய துயரம்

## புதைகுழி குறித்து ஸ்ரீநேசன் எம்.பி

மட்டக்களப்பு, நவ. 4

உயிரோடு காணாமலாக்கப்பட்டவர்களை அரிதட்டுக்களைக் கொண்டு மண்ணை அகழ்ந்து பார்க்கவேண் டிய துயரம் மிகவும் கொடூரமானது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. முத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு – முறக்கொட்டாஞ்சேனையில் மனித எச்சங்கள் எனக்கருதப்படும் தடயங்கள் கண்டெடுக்கப்பட்டமை குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டு என்பது பயங்கரமும் அநியாயமும் நிறைந்த காலகட்டம். இரண்டாம் கட்ட ஈழப் போர் நடந்தபோது பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தார்.

1990 இல் கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து 180 பேர் கடத்தப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டிருந்தார்கள். சித்தாண்டியில் 15 பேரும், தேவாபுரத்தில் 7 பேரும் கைது செய் யப்பட்டார்கள். இவர்களில் எவரும் உயிரோடு திரும்பவில்லை.

முறக்கொட்டாஞ்சேனையில் எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட வீட்டுக்காரர்களின் உறவினர்கள் 15 பேர் 1990 இல் சித்தாண்டி முருகன் ஆலயத்திலிருந்து கைது செய் யப்பட்டு காணாமலாக்கப்பட்டிருந்தார்கள். இதில் 14 வயது மாணவனும் அடங்குகிறார். அவர்கள் மீளத் திரும்பவே இல்லை.

கைதிகள் விடுபடாத நிலையில் அவர்களை எலும்பு எச்சங்களாக மண்ணுக்குள் அரிதட்டுக் கொண்டு அரித்துப் பார்க்க வேண்டிய துயரம் நிறைந்த நிலையில் நாம் இருக்கின்றோம்.

குறித்த கடத்தல்கள், கைதுகள், காணமலாக்கப்பட்ட சூழ்நிலைகளில் அதிகாரத்திலிருந்த படை முகாம் அதிகாரிகள் யாரென்பது மக்களுக்குத் தெரியும்.

இவ்வாறான துயரங்களை உண்டாக்கிய சூழ்நிலைகளுக்கு உண்மையில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். துயரங்களுக்கு ஒத்தடமிட வேண்டும் - என்றார்.

(த-ய-46)

பாராட்டி வாழ்த்துகிறோம்

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

தேசிய மட்ட சாதனையாளர்கள் - 2016



ரவிந்திரன் துவாரகன்

- தமிழ்மொழித்திறன் இலக்கண வினாவிடைப் போட்டியில் 3ஆம் இடம்.



நகுலகுமார் அபிராமி

மத்திய சுற்றாடல் அமைச்சின் பேச்சு, கட்டுரை போட்டிகளில் முதலாம், 2ஆம் இடம். மகாவலி அபிவிருத்தி அமைச்சு பேச்சுப் போட்டியில் 03ஆம் இடம்.



நகுலகுமார் சாமந்தி

மத்திய சுற்றாடல் அமைச்சின் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம்.



விமலேஸ்வரன் பவிக்ஷன்

றோயல் கல்லூரியின் நாடக வினாடிவினாப் போட்டியில் முதலாம் இடம்.



சத்தியமூர்த்தி வருணன்

கணித வினாடி வினாப் போட்டியில் முதலாம் இடம்.

Best Wishes

எமது வித்தியாலயத்தில் இருந்து 2016 இல் தேசிய ரீதியிலான சாதனைகளைப் பெற்ற இம் மாணவர்களை வித்தியாலய சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது.

Best Wishes

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்
கிளிநொச்சி.

(K/206)(10.18)

# சபாநாயகரின் மகள் சஞ்ஜீவனி லண்டனில் சாவு

கொழும்பு, நவ 4

சபாநாயகர் கரு ஜயசூரியவின் இரண்டாவது மகளான, சஞ்ஜீவனி இந்திரா ஜயசூரிய (வயது- 40) புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார்.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான இவர், திருமணமாகி இங்கிலாந்தில் வசித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் புதன் கிழமை உயிரிழந்தார்.

இவரது இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள, சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் அவரது குடும்பத்தினர், இங்கிலாந்தைச் சென்றடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(தி)

# 93 குழந்தைகளில் ஒருவருக்கு ஓடிசம்

கொழும்பு, நவ.4

நாட்டில் புதிதாக பிறக்கும் 93 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு ஓடிசம் (தற் சிந்தனை) நிலைமை அதிகம் காணப்படுவதை புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பொரல்லை சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்மருத்துவர்சுவர்ணா விஜேதுங்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பெற்றோர்கள் இது குறித்து அறிவுறுத்த வேண்டிய காலம் உருவாகியுள்ளது. புதிதாக பிறக்கும் குழந்தைகள் ஓடிசம் தன்மையுடையனவாகக் காணப்படுவதற்கு அதிக காரணமாக அமைவது பெற்றோரின் அறியாமையே.

ஓடிச தன்மையுள்ள குழந்தையை பிறக்கும் முன்னர், ஸ்கான் மூலமோ, குருதிப் பரிசோதனைகள் ஊடாகவோ கண்டறிய முடியும். குழந்தை பிறந்த பின்னர் வளர்ச்சிக் கட்டங்களில் காணப்படும் வித்தியாசமான மாற் றங்கள் ஊடாகவே அதனைக் கண்டறிய வேண்டும்.

ஓடிசம் உள்ள பிள்ளைகளில் நூற்றுக்கு 40 வீத மானவர்களுக்கு வலிப்பு நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. புத்தி ரீதியில் பலவீனமான இவர்களுக்கு [illegible] வழங்கப்பட வேண்டியுள்ளது- என்றார்.

(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைகள் தொடர்பில் கைதானோருக்கு மறியல்

வவுனியா, நவ.4

தீபாவளி தினத்தன்று வவுனியாவில் இடம்பெற்ற வாள் வெட்டு, மோதல்கள் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட 7 பேரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த 28ஆம் திகதி வவுனியாவின், பல இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றில் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவை தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், வவுனியா மதீனா நகரில் ஏற்பட்ட மோதல் தொடர்பில் 5 பேரையும், கற்குழியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தொடர்பில் 2 பேரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ℜ-21)

# பசிலின் முயற்சி கனவு மாத்திரமே

## இசுர தேவப்பிரிய கூறுகின்றார்

கொழும்பு, நவ.4

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிரித்து, இரண்டாக்க பசில் ராஜபக்ச எடுக்கும் முயற்சி வெறும் கனவு மாத்திரமே. கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கே பசிலின் தீர்மானத்தில் உடன்பாடு இல்லை.

இவ்வாறு மேல் மாகாண சபை முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் முதலமைச்சர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கட்சியை ஒன்றுபடுத்தி முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் கூட்டுஎதிர்க்கட்சியிலுள்ளநாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பேச்சு நடத்தப்படுகின்றது.

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களை பாதையில் இறக்கி, அரசியல் லாபம் தேடும் நிலைக்கு சிலர் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளனர். ஜனாதிபதி இராணுவத்தினரின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கைமுன்னெடுத்து வருகின்றார் – என்றார். (ℜ)




# தொழிற் பயிற்சி குறித்து விழிப்புணர்வு ஊர்வலம்

## தென்மராட்சியில் நேற்று நடத்தப்பட்டது

தென்மராட்சி, நவ.4

நாட்டில் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல்கள் மூலம் அவர்கள் விரும்பும் தொழிற் பயிற்சி வழங்குவது தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று தென்மராட்சியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரப் பகுதி மற்றும் கொடிகாமம் பேருந்து நிலையப் பகுதிகளில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு ஊர்வலத்தில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் பயிற்சி அதிகார சபை போன்றவற்றின் அலுவலர்களும் பிரதேசசெயலகங்களில் பணியாற்றும் திறன் அபிவிருத்தி அலுவலர்கள், தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் பரிசோதனை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

> வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் தாம் விரும்பம் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கு தத்தமது பிரிவு பிரதேச செயலகங்களில் உள்ள தொழிற் பயிற்சிப் பிரிவு மற்றும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்

விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டதரப்பினரால் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அலுவலகத்தில் வணிகர் மன்றப் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோருக்கான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

மன்றத் தலைவர் ந.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் தொழிற் பயிற்சிகளின் அவசியம் பற்றி பிரதேச செயலகங்களின் திறன் அபிவிருத்தி அலுவலர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

பட்டப் படிப்புக்காக காத்திருக்கும் பிரதேச இளைஞர், யுவதிகள் பட்டப் படிப்புக்கு இணையான சான்றிதழ்களையும் அதனுடன் இணைந்த தொழில் வாய்ப்புகளைப் பெற முடியும். தொழில்களைப் பயின்று தாமாகவே ஒரு துறையில் பிரகாசித்து முன்னிலை பெறுவதற்கு தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தொழில் நிலையங்களில் பணிபுரியும்தொழிற்பயிற்சி பெறாதவர்களுக்கு கல்லூரியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நிலையத்திலிருந்தே பயிற்சிகள் பெற்று சான்றிதழ் பெறக்கூடிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பயிற்சியைப்பெற்றுதராதரத்துடன் தொழில் செய்ய முடியும். உதாரணத்துக்கு உணவகம் ஒன்றில் ரொட்டி தயாரிப்பு பணியில் ஈடுபடும் ஒருவர் அதற்கான பயிற்சியை உரிய முறைப்படி பயின்று, உரிய சான்றிதழைப் பெற்றுக் கொண்டால் உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் பயிற்றப்பட்ட பணியாளர் என்ற சான்றிதழுடன் நிறைய வருமானத்துடனான தொழில் வாய்ப்புக்களைப் பெறமுடியும் – என்று சுட்டிக்காட்டப்பட்டது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைப்பரப்பில் உள்ள வணிக தொழில் நிலையங்களில் பணியாற்றுவோரில் குறைந்தது 100 பேரையாவது தொழிற் பயிற்சித் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வணிகர்களும், தொழில் நிறுவனத்தினரும் முன்வந்துள்ளனர்.

வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் தாம் விரும்பும் தொழிலைக் கற்றுக்கொள்வதற்கு தத்தமது பிரிவு பிரதேச செயலகங்களில் உள்ள தொழிற் பயிற்சிப் பிரிவு மற்றும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ℜ-21,9)

# வவுனிக்குளத்திலிருந்து நீர் விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.4



முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப்பெரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் பெரும்போக பயிர்ச்செய்கைக்கான நீர்விநியோகம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் பாக்கியநாதன் விகர்ணன் தலைமையில் நேற்று மு.ப. 10 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மல்லாவி ஆலங்குளம் பகுதியில் உள்ள 65ஆவது இராணுவ முகாம் அதிகாரி, நீர்பாசன திணைக்கள உத்தியோகத் தர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

65ஆவது இராணுவப் படைப் பிரிவின் உதவியுடன் 20 கிலோமீற்றர் பிரதான வாய்க்கால் துப்புரவு செய்யப்பட்டது. 7.5 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட ஒரு அடிக்கு உயர்த்தப்பட்ட கலிங்குடன் குள நீர்மட்டம் தற்போது 25 அடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

வவுனிக்குளம் நீப்பாசனத்தின் கீழ் இந்த முறை 6 ஆயிரத்து 60 ஏக்கர் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே விவசாயிகள் பயிர்களை விதைத்துள்ளனர். பருவ மழையும் சீராக பெய்யாத நிலையில் அவர்களுக்கான நீர்ப்பாசனத்துக்காக குளம் திறந்து விடப்பட்டுள்ளது என்று வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார். (ℜ-7)

# திண்மக் கழிவுகள் சேகரிக்கும் செயற்றிட்டம் நுவரெலியாவில்

நுவரெலியா, நவ.4

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் தீர்மானத்தின் பிரகாரம், திண்மக் கழிவுகளை வகைப்படுத்தி சேகரிக்கும் புதிய செயற்றிட்டம் நுவரெலியா பிரதேச சபையால் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வு அக்கரப் பத்தனை பொலிஸ் நிலையத்தில் நுவரெலியா பிரதேச சபையின் செயலாளர் யூ.எச். பத்மா தலைமையில் நடைபெற்றது.

நடைமுறை குறித்தும் அதனால் சுற்றாடலுக்கும், மக்களுக்கும் ஏற்படவுள்ள அனுகூலங்கள் தொடர்பிலும் பிரதேச மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெளிவுப்படுத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதேச சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள், வர்த்தக பிரமுகர்கள், நுவரெலியா பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ℜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருளைக்கிழங்கு செய்கையாளருக்கு மானிய உதவி

அச்சுவேலி, நவ.4
யாழ். மாவட்டத்தில் சமுர்த்திக் குடும்பங்களைச் சேர்ந்த 90 விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழக்கு கொள்வனவு மானிய உதவியாக 27 லட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு விவசாயிக்கும் தலா 30 ஆயிரம் ரூபா வழங்கப் படுகின்றது என்று தெரிவிக் கப்பட்டது.

உடுவில் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 40 விவசாயிகளுக்கும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 20 விவசாயிகளுக்கும், சண்டிலிப் பாய்ப் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 20 விவசாயிகளுக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 10 விவசாயிகளுக்கும் விதை உருளைக்கிழங்கு கொள்வனவு மானியமாக வழங்கப் படுகின்றது.

குறித்த விவசாயிகளுக்கு விதைஉருளைக்கிழங்கு மானிய உதவி வழங்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப்பிரிவு, வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) அலகால் அறிவிக்கப்பட்டுள்ளது. உருளைக் கிழங்குச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் கடந்த காலங்களிலும் இத்தகைய உதவிகள் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்டன. கடந்த காலங்களில் மானிய உதவியை பெற்றுக் கொண்டவர்களைத் தவிர்த்து, புதிய விவசாயிகளுக்கு இந்த வருடம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.(ற-11)

## பாதசாரிகள் கடவையை மாற்றியமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.4
யாழ்ப்பாணத்தில் வீதிச் சமிக்ஞைகள் பொருத் தப்பட்டுள்ள பகுதிகளில் பாதசாரிகள் இலகுவாக கடக்கக் கூடியவாறு பாத சாரிகள் கடவைகள் அமைக் கும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

வீதிச் சமிக்ஞைகளுக்கு ஏற்ற வகையில் வீதியை கடக்கும் பாதசாரிகள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதை நிவர்த்தி செய்யும் வகையிலேயே பாதசாரிக் கடவைகள் திருத்தியமைக் கப்படவுள்ளன.

வீதிச் சமிக்ஞை பொருத்தப்பட்டுள்ள வேம்படிச் சந்தியில் உள்ள பாதசாரிக்கடவை வீதிச் சமிக்ஞை ஒழுங்குகளுக்கு ஏற்றதாக அமைக்கப்பட வில்லை. அது திருத்தியமைக் கப்படுகின்றது. ஏனைய வீதிச் சமிக்ஞை உள்ள வீதிகளில் உள்ள பாத சாரிக் கடவைகளும் திருத்தி அமைக்கப்பட வுள்ளன. இதனால் வீதி விபத்துக்களை தவிர்க்க முடியும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.
(ற-8)



கிளிநொச்சி, கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக நின்றிருந்த 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மரம் ஒன்று நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையால் பாறி விழுந்தது. ஏ-9 வீதிப் போக்குவரத்து இதனால் தடைப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத் துவப் பிரிவினரும், இராணுவத்தினரும் இணைந்து போக்குவரத்தைச் சீர்ப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ற-21,35)

முல்லைத்தீவின் பல பகுதிகளில்

# யானைகள் அட்டகாசம்

## தடுக்க ஆளில்லை

யாழ்ப்பாணம், நவ.4
கிராமத்துக்குள் நேற்றுமுன் தினம் இரவு புகுந்த யானைகள் 5 வீடுகளை உடைத்தன. ஒரு வீட்டில் வைக்கப்பட்டிருந்த 20 கிலோ அரிசியையும் அவை விட்டு வைக்கவில்லை. யானைகளின் அட்ட காசம் குறித்து பல தரப்பினரிடம் முறையிட்ட போதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

இவ்வாறு மணவாளன் பட்ட முறிப்பு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 9ஆம் கட்டைக் கிராம மக்கள் கவலை தெரி வித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் தற்போது காட்டு யானைகளின் அட்காசம் அதி கரித்துள்ளது.

யானைகளைக் கட்டுப்படுத் துவதற்கு ஒட்டுசுட்டான் 19ஆம் கட்டையில் இருந்து முத்து ஐயன்கட்டுக் குளம் வரையான 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு மின்சார வேலிகள் அமைக் கப்படவுள்ளன என்று அதிகாரி கள் தெரிவித்தாலும், அது இன்னமும் அமைக்கப்படவில்லை. மாங்குளம் பிரதான வீதியில் பயணிப்போரை நாளாந்தம் யானைகள் அச்சுறுத்துகின்றன. நேற்றுமுன்தினம் கரை துறைப்பற்று பிரதேச செய லாளர் பிரிவின் கீழ் உள்ள முள்ளிய வளையிலும் வீதியால் பயணிப் போரை யானைகள் விரட்டுகின்றன என்று தெரி விக்கப்பட்டது.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட் பட்டது 9ஆம் கட்டைக் கிராமம். நேற்று முன்தினம் இரவு அந்தக் கிராமத்துக்குள் புகுந்த யானைகள் பெரும் அட்டகாசம் புரிந்துள்ளன. அவை தோட் டங்களை நாசம் செய்ததுடன், வீட்டில் சேமித்து வைக்கப்பட்டிருந்த அரிசி போன்றவற்றையும் கபளீகரம் செய்துள்ளன. பாதிக் கப்பட்ட குடும்பங்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது.

நாம் சேமித்து வைக்கும் அரிசி, தானியங்களையும் யானைகள் விடுவதில்லை. அவற்றுக்காக எமது வீடுகளையும் சேதப் படுத்துகின்றன. தகரங்களில் அடித்தாலும், வெடிகள் கொளுத் திப் போட்டாலும், அவைகள் அசைவதாக இல்லை. இரவு வேளைகளில் நிம்மதியாக அசந்து தூங்க முடிவதில்லை. சிறிய சத்தம் கேட்டாலும் அச் சத்துடன் எழுந்து பார்க்க வேண் டியுள்ளது. பெரும் அச்சத்துட னேயே எமது இரவுப் பொழுது களைக் கழிக்கின்றோம். யானைகளை கட்டுப்படுத்து வதற்கு அதிகாரிகள் உரிய நட வடிக்கை எடுக்கவேண்டும் - என்று அந்தக் கிராம மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

யானைகளால் அழிவுகளைச் சந்திப்பவர்களுக்கு இடர் நிவா ரணத்தின் கீழ் உடனடியாக கிராம சேவையாளர் ஊடாக பதிவுகளை மேற்கொண்டு, உதவிகள் வழங்குகின்றோம். யானைகள் தொடர்ந்து கிராமங் களுக்குள் நுழைவது தொடர் பாக வன விலங்குத் திணைக் களத்துக்கு தெரியப்படுத்தியுள் ளோம். போதுமானஅளவு யானைவெடிகளை பிரதேச செயலகத்தால் வழங்குகின் றோம். யானைகள் வெடி களுக்கும் நகர்வதில்லை என மக்கள் எமக்குத் தெரியப்படுத்தி யுள்ளார்கள். இருந்தாலும் யானை வெடிகளை பாவிக்கின் றார்கள். திடீர் என வரும்போது ஒன்றும் செய்யமுடியாது. எனி னும் யானைகளால் ஏற்படும் அழிவுகளுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம் - என்று ஒட்டுசுட்டான் பிரதேச செய லாளர் க.அனிருத்தன் தெரி வித்தார். (ற-7)

## இளம் தாய், குழந்தையின் உயிரைப் பறித்தது கடன்

### வவுனியாவில் பரிதாபச் சம்பவம்

வவுனியா, நவ.4
கடன் சுமையால் கணவன், மனைவிக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, இளம் தாயும் பிள்ளையும் தவறான முடிவை எடுத்து கிணற்றில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்டனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா, புதியவேலர் சின்னக்குளத்தில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நாகநாதன் சுகந்தினி (வயது -23), நாகநாதன் சிந்துஜன் (வயது -2) ஆகியோரே உயிரிழந்தனர்.

குறித்த தாய் வாழ்வாதாரத் தேவைக்காக வங்கி ஒன்றில் தவணை அடிப்படையிலான கடனைப் பெற்றார் என்றும், அதை அடைப்பதற்கு குடும்பத்தின் வருமானம் போதாதிருந்தது என்றும் - தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நேற்றுமுன்தினம் கணவன், மனைவிக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டது என்றும் - மனைவியும் பிள்ளையும் உறவினர் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றுவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அவர்களைக் காணவில்லை என்று - கணவர் தேடியபோது அவர்கள் கோயில் காணி ஒன்றில் இருந்த கிணற்றில் உயிரற்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-21, 402)

## பரிசங்குளம் வீதித் திருத்தம் இன்றுமுதல் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.4
திருத்தம் வேலைகள் மேற் கொள்ளப்பட்டு, இடை நிறுத் தப்பட்ட நெடுங்கேணி - பரி சங்குளம் வீதித் திருத்த வேலை கள் இன்று மீண்டும் ஆரம் பிக்கப்படவுள்ளன.

இவ்வாறு நெடுங்கேணி பிரதேச சபைச் செயலாளர் தெரிவித் தார்.

போக்குவரத்தில் ஈடுபட முடியாத அளவுக்கு மிகவும் சேதமுற் றிருந்த நெடுங்கேணி பரிசங் குளம் வீதி, நெடுங்கேணி பிர தேச சபையால் சீரமைக்கப் பட்டது. திருத்த வேலைகளுக் காக வீதி ஓரத்தில் கிரவல் பறிக் கப்பட்டது. இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும், அவை வீதி யில் பரவப்படாது அப்படியே காணப்பட்டது. போக்குவரத்தில் ஈடுபட முடியாது அந்தப் பகுதி மக்கள் அசௌகரியங்களை எதிர் கொண்டனர்.

கிரவல் தொடர்பாக நாங்கள் பிரதேச சபைக்கு அறிவித்த மையை அடுத்து, அதை ஒரு பக்கம் ஒதுக்கியிருந்தார்கள். தற்போது பெய்து வரும் மழை காரணமாக கிரவல்கள் அரிக் கப்பட்டதால் வீதியில் பயணிக்க முடியாத அளவுக்கு காணப் படுகின்றது. இந்த வீதியால் பாடசாலை மாணவர்கள், வைத் தியசாலைக்குச் செல்பவர்கள், விவசாய நிலங்களுக்குச் செல் பவர்கள் எனப் பலரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். வீதியை உடனடியாக சீர்செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத் தனர்.

நெடுங்கேணி பரிசங்குளம் வீதி திருத்தல் பணிகளுக்காக இன் னும் கிரவல் போடவேண்டி யுள்ளது. மீளவும் அதன் பணி கள் இன்று ஆரம்பிக்கப்பட வுள்ளன. விரைவாக அதன் பணிகளை முடிப்பதற்காக உள்ளோம் - என்றார். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிங்கள மனோநிலையில் மாற்றம் சாத்தியமா?

இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜ பக்சவின் பிறந்த தினத்தில் அவரது ஆதரவாளர்களும் கூட்டு எதிரணியினரும் இணைந்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க உள்ளார்கள் என்கிற செய்தி வெளியாகி இருக்கிறது. அயலுறவுத் துறையின் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் கார்த்திகை 18ஆம் திகதி அந்தப் புதிய கட்சியின் தொடக்கம் இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

இத்தகைய ஒரு கட்சி தேவையா? அது மகிந்தவின் தேவைக்காக மட்டுமேதான் உருவாக்கப்படுகின்றதா? சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுதான் இதற்குக் காரணமா? இந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் தேட சிங்கள மனோநிலை பற்றி அறிவது முக்கியம்.

தமிழர்கள் விடயத்தில் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கள மனோநிலை ஒரே பாதையில்தான் பயணிக்கிறது. அதாவது ஒரு தரப்பு தமிழர்களை நெருங்கி அவர்களுக்கு ஏதாவது செய்ய விரும்பின் - அல்லது செய்வதாகக் காட்டிக்கொள்ளின் - மற்றைய தரப்பு அதிலிருந்து விலகிச் சென்று தீவிரப் போக்குடன் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படும். இந்தக் எதிர்ப்புக் காரணமாகவே தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் அனைத்தும் இல்லாதொழிக்கப்படும்.

டட்லி - செல்வா ஒப்பந்தமாகட்டும், பண்டா - செல்வா ஒப்பந்தமாகட்டும், இந்திய - இலங்கை ஒப்பந்தமாகட்டும், விடுதலைப் புலிகள் - ரணில் ஒப்பந்தமாகட்டும் எல்லாவற்றிலுமே காலம் காலமாக சிங்கள மனோநிலை ஒரே மாதிரித்தான் செயற்படுகிறது.

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதாக ஒரு தரப்புக் காட்டிக்கொண்டால், மறு தரப்பு அதனை எதிர்க்கும். அந்த எதிர்ப்பு வலுத்து சிங்களத் தேசியவாதம் சீண்டப்பட்டு, வீறுகொண்டெழும். அதற்குப் பயந்து முதல் தரப்பு, ஒன்றில் தன்னுடைய முயற்சியைக் கைவிடும் அல்லது இரண்டாவது தரப்பிலும் பார்க்க வீரியமாக சிங்களத் தேசிய வாதத்தைச் சீண்டி அதன் பயனை அனுபவிக்க முயற்சிக்கும்.

காலம் காலமாக இதுவே நடந்து வந்தது. 2015இல் அதில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இதுவரை காலமும் ஆடு-புலி ஆட்டம் ஆடிவந்த ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரேயணிக்குள் ஒன்று சேர்ந்தன. வரலாற்றில் இப்படியொரு வாய்ப்பு முன்னர் ஒருபோதுமே இருந்ததில்லை என்று அதை முற்போக்குச் சிங்களவர்களும் மென்போக்குத் தமிழர்களும் கொண்டாடினார்கள். இந்த ஒரு வாய்ப்பே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அசைக்க முடியாத நம்பிக்கையைத் தருவதாக அவர்கள் நம்பினார்கள்.

ஆனால், அந்த நம்பிக்கையை மெல்ல மெல்லச் சிதைக்கும் வகையில் மகிந்த ராஜபக்ச மீண்டும் மேற்கிளம்பி வந்தார். சிங்கள மனோநிலையின் ஆன்மாவாக அவர் வளர்ந்தார். ஓரணிக்குள் திரண்டிருந்த ஐ.தே.கட்சி மற்றும் சு.கட்சிக்கு எதிராக சிங்கள மனோநிலையின் திரட்சியாக அவர் உருவெடுத்தார்.

இதோ! அந்த எதிர்ப்பு நிறுவனமயப்பட்டு, ஒரு கட்சியாக இப்போது பரிணமிக்க உள்ளது. மகிந்த மெல்ல மெல்லத்தான் வளர்ந்தார். ஆனால், சிங்கள மனோநிலைக்குத் தேவையாக இருந்த, எதிர்ப்புச் சக்தியை அவர் வழங்கினார். அதனால், அவர் தமிழர்களுக்கு எதிரான சிங்கள மனோநிலையின் ஆதர்ச தலை வனாகிறார்.

இப்போது ஐ.தே.க. - சு.க. ஒரு கூட்டு என்றால், தமிழர்களின் அரசியல் தீர்வு முயற்சிகளை எதிர்ப்பதற்கான சிங்கள மனோநிலையின் பிரதிநிதித்துவம் தயாராகி விட்டது. ஆக, புதிய கட்சி என்பது வெறுமனே மகிந்தவின் தேவை மட்டுமேயல்ல, அது சிங்கள மனோநிலையின் தேவை.

இந்தச் சிங்கள மனோநிலையில் மாற்றம் ஏற்படாத வரை, சிங்களத் தலைமைகள் அதற்கு முழுமையாக முயலாத வரை, அதற்கான முயற்சிகள் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படாதவரை - இப்போது வரைக்கும் அப்படியொரு முயற்சியே இல்லை என்பது பெருங் கவலை - எந்தத் தரப்பும் அதற்கு பணிந்துபோவதைத் தவிர வேறு வழியில்லை. அதுதான் வரலாறும், காலத்தின் படிப்பினையும்.

# பல்கலைக்கழக மாணவர் சமூகத்தால் இன ஐக்கியத்தை உருவாக்க இயலும்!

■ வந்தியத்தேவர்



தமிழ் மக்களின் பிரச்சினைக்கு, தீர்வுக் கிட்டும் என்று எதிர்கட்சித்தலைவர் சம்பந்தன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது அடிக்கடி தெரிவிக்கப்பட்டு வரும் ஒன்றுதான் என்றாலும், இந்த அரசு மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கை வெற்றி பெறுமா என்பது கேள்விக்குறிதான். தெளிந்த அறிவு, ஆழ்ந்த சிந்தனை, தீர்க்க தரிசனம் எதுவுமே கிடையாத இலங்கை அரசியல்வாதிகளால் சுபீட்சமான நாடு ஒன்று உருவாகும் என எதிர்பார்க்க முடியுமா என்பதும் சந்தேகமே.

அண்மைக்காலமாக வடக்கில் இடம்பெற்றுவரும் அசம்பாவித சம்பவங்கள் இந்தப் பகுதியை தொடர்ந்தும் ஒரு நெருக்கடி நிலையில் வைத்திருப்பதற்கான திட்டம்போல் தெரிகின் றது. சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரே இந்தத் திட்டத்தின் கையாள்களாக உள்ளனர். இங்கு இடம்பெற்ற அநியாயங்களுக்கு எதிராக அவற்றுக்கு நீதி வேண்டி இடம்பெற்ற எத்தனையோ வீதிப் போராட்டங்கள், கவனவீர்ப்புக்களால் கிடைத்த பயன்தான் என்ன? அரச பிரதிநிதிகள், தம்மிடம் வழங்கப்படும் மகஜர்களையும் கோரிக்கைகளையும் பெற்றுக்கொண்டு, அரசுக்குத் தெரியப்படுத்துவதும், அரசு அது குறித்து மௌனம் சாதிப்பதும் வழக்கமாகி விட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை அனைத்து மக்களையுமே அதிர்ச்சிக்கும், வேதனைக்கும் உட்படுத்தியது. இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி தென்பகுதி பல்கலைக்கழக மாணவர்களும் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். இதுவரை வகுப்புவாதக் கருத்துக்களுக்கு செவிமடுத்து, தமது செயற்பாடுகளை நகர்த்திக் கொண்டிருந்த மக்கள், இப்போது புதிய சிந்தனைக்குள் தம்மை ஈடுபடுத்தி நீதி கேட்கும் மக்களுக்காகப் போராட முன்வந்துள்ளனர். வித்தியா உட்பட வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சிறுமிகளுக்கு நீதி கேட்டுப் போராடிய தமிழ் மக்களுக்குதமது முழு ஆதரவைத்தெரிவித்துப் போராட்டங்களை நடத்திய தென்பகுதி மக்களின் மனப்பாங்கு நாட்டில் நிலவும் இனவாதச் சிந்தனைகளுக்கு ஒரு நல்ல பதிலடியாகும். இவைகள் நாட்டுக்கு ஒரு நல்ல சகுனமாக மாற்றமடையவேண்டும்.

இப்போது நல்லாட்சி என்ற தொனிப் பொருளின் கீழ் அரசு ஓர் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலம் இன நல்லுறவுகளை ஏற்படுத்த முயற்சிக்கிறது. எனினும் அதற்குத் தடைகளைப் போட்டு தொடர்ந்தும் இந்த நாட்டில் ஒரு பயங்கர நிலையை நீடிக்க வைப்பதில் இனவாத அரசியல்வாதிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். கூட்டு எதிரணி, வடக்கின் தற்போதைய அசாதாரண நிலையைப் பயன்படுத்தி, மீண்டும் ஒரு போரை ஏற்படுத்துவதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிப் பதாகக் கூறப்படுகின்றது. நாட்டில் ஜனநாயகம் நிலவத் தடையாக உள்ள இனவாதிகள், ஜனநாயகத்தை நிலைநாட்ட ஜெனிவாவுக்குச் செல்லப் போவதாகக் கூறுகின்றனர்.

இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை வளர்க்கும் செயற்பாடுகளை இவர்கள் தவிர்த்து, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தாலே ஜனநாயகத்தைக் காக்கமுடியும் என்பதை இவர்கள் உணர்ந்தாலே போதும். அதற்காக ஜெனிவாவுக்கு ஓடவேண்டிய தேவை இல்லை.

இனவாதத் தரப்பினரது முயற்சிகளை முறியடிக்க வேண்டிய பொறுப்பு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களையும் சார்ந்ததே. சாதாரண கல்வியறிவற்றவர்கூட மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் உள்ளனர் என்பதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் ஒப்புக் கொண்டுள்ளார். இன்றைக்கு நாடு ஒரு மோசமான நிலைக்குள் சிக்கிக் கிடப்பதற்கு அரசியல் கலாசாரம் குறித்த அறிவற்றவர்கள்தான் காரணம். பல்கலைக் கழகமாணவர்கள் அனைத்து மக்களுக்கும் உண்மைநிலையை எடுத்துக்கூறி, இனவாதத்தை வேரறுப்பதுடன் இனங்களிடையே ஐக்கியத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்த ஒன்றுபட வேண்டும்.

சக மாணவர்களுக்காக நீதி கேட்டுப் போராட வேண்டியது மட்டுமே தமது கடமை எனக் கருதாது, அறுபது வருட காலத்துக்கு மேலாகத் தமது உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு ஆதரவாகவும் அணி திரள வேண்டிய கடமையும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உரியதே. நாட்டின் அனைத்து மக்களதும் சம உரிமைக்காக அவர்கள் அர்ப்பணிப்புடன் களத்தில் இறங்க வேண்டும். ஏற்கனவே தமிழ் - சிங்கள -முஸ்லிம் மாண வர்கள் நாட்டில் ஐக்கியத்தையும் சமாதானத்தையம் அமைதியையும் உருவாக்கக் கூடியதாக அணி சேர்ந்திருப்பின், பல ஆயிரக் கணக்கானமக்களை அழிவினின்றும் பாதுகாத்திருக்க முடியும். அந்தத் தவறுகள் இனியும் தொடர இடமளிக்காதவாறு, பல்கலைக் கழக மாணவர்களின் செயற்பாடுகள் அமையவேண்டும். கிராமப்புறங்களில் வதியும் மக்களுக்கு உண்மைகளை எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களது மனங்களில் இனவாதக் கருத்துக்கள் பதியாதிருக்க செயற்பட வேண்டும். அதன்மூலம் நாட்டுக்குப் பயனுள்ள போராட்டங்களின் மூலம் மக்களையும் ஒன்றிணைக்கக் கூடியதாக இருக்கும். இனங்களுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகளை வேரறுக்கவும், இனவாதிகளை அரசியலில் இருந்து புறந்தள்ளவும் வன்முறைகள், கொடுமைகள், அநீதிகள் எந்தவடிவில் வளர்த்தெடுக்கப்பட்டாலும், அவற்றுக்குக் காரணமானவர்களை ஓரங்கட்டி இன ஐக்கியத்தை வளர்ச்சிப் பாதையில் முன்கொண்டு செல்ல பல்கலைக்கழக மாணவர்கள் ஏன் ஒன்றிணைய முடியாது? ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜேந்திரகுமார் காட்டும் பூகோள அரசியல் பூச்சாண்டி

வி.எஸ்.நடராஜா



பூகோள அரசியல், பூகோள அரசியல் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தான் பேசும் கூட்டங்களில் அடிக்கடி குறிப்பிடுகின்றார். உலக வல்லரசுகளது பலம் குறித்து தீர்மானிக்கும் போட்டிக் களமாக இலங்கை இருக்கிறது. பூகோள அரசியலில் இலங்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் உச்சத்திலிருந்த பொழுது இருந்த வாய்ப்புக்களைவிட, இன்று அதிகமான வாய்ப்பு பூகோள அரசியலினால் ஏற்பட்டிருக்கின்றது. பூகோள அரசியல் போட்டி ஆட்சி மாற்றத்துடன் முடிந்து போகவில்லை என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் ஒரு நிகழ்வில் தெரிவித்திருந்தார்.

அவரது கருத்தை ஆதரித்து முன்னாள் வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தேவராஜ் மற்றும் அரசியல் பத்தியாளர் நிலாந்தனும் பேசியிருந்த னர். சிங்களத் தலைவர்கள் கடந்த காலங்களில் ஏதாவதொரு வல்லரசுகளின் பக்கம் சாய்ந்திருந்தார்கள். அப்பொழுது அந்த வல்லரசுகள் சிங்களத் தலைவர்களைத் தங்களது பிடிக்குள் கொண்டு வருவதற்குத் தமிழர் விடயங்களை முன்னிறுத்தினர் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

தமிழ்தேசியக் கூட்டணியினர் சென்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை வீழ்த்தியது தவறு என்பதும் அவர்களது நிலைப்பாடு. 1987இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை–இந்திய ஒப்பந்தம் ஒரு பூகோள அரசியலின் நேரடி விளைவுதானே? அதாவது இந்தியா (அமரர் இந்திராகாந்தி ஆட்சியின்போது) இலங்கையின் வடக்குக் கிழக்கில்பலஆயுதக்குழுக்களின் தோற்றத்துக்குக் காரணமாக இருந்தது மட்டுமன்றி, இந்தியாவே அந்தக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சியையும் கொடுத்தது. இந்தியா செய்த இந்த அநியாய தலையீடுத்துக்கு எதிராக எந்த ஒரு அயல் நாடும் இந்தியாவைக் குறை கூறியதில்லை. காரணம் இந்தியா இலங்கையைப் பொறுத்த வரை ஒரு பலம் பொருந்திய அயல்நாடு என்பதே. இதற்கு வாய்ப்பாக 1983இல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது இலங்கைத் தமிழ் அகதிகள் தமது உயிரைப் பாதுகாப்பதற்காக இந்தியாவை நோக்கி ஓட இந்தியாவும் அவர்களுக்குப் புகலிடம் வழங்கியது.

அதனைத் தொடர்ந்து இந்தியா எந்த ஓர் அயல்நாட்டையும்விட இலங்கை விடயத்தில் தனக்கே அதிக உரிமையுண்டு என்னும், இங்கு பாதிக்கப்பட்டோரும் தென்னிந்தியரும் பேசும் மொழி ஒன்று என்பதாலும் இலங்கையுடன் ஒப்பந்தம் செய்வதற்கு (தனது மேலாண்மையையும், இந்து சமுத்திரத்தில் தனது பாதுகாப்பையும் உறுதி செய்யும் நோக்கத்துடன்) முன்வந்தது. புலிகள் இயக்கத்தின் கெரில்லாத் தாக்குதல்களினால் களைப்படைந்திருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும் வேறு வழியின்றி (டெஸ்பரேட்) இந்த ஒப்பந்தத்துக்குச் சம்மதித்து அரசமைப்பில் 13வது திருத்தத்தினூடாக அதன் சரத்துக்களைச் சட்டமாக்கினார்.

பூகோள அரசியல் கூற்றின் பிரகாரம், இந்தியா ஐக்கிய அமெரிக்காவின் பக்கம் சாராது, சோவியத் ரஷ்யாவின் பக்கமே பெரும்பாலும் சார்ந்து இருந்த காரணத்தினால், இந்தியா எடுக்கும் எந்த அரசியல் நகர்வையும் சோவியத் ரஷ்யா ஆதரித்தே வந்தது. இந்த அடிப்படையில் மேற்படி ராஜீவ்– ஜே.ஆர் ஒப்பந்தத்தையும் சோவியத் ரஷ்யா ஆதரித்து நின்றது.

அமெரிக்க சார்பு ஐக்கியதேசியக்கட்சி (ரணில் உட்பட) தான் இந்த ஒப்பந்தத்தின் (வேறுவழியின்றி) ஒரு தரப்பு என்பதுடன், இந்தியா மற்றைய பங்காளி என்பதனால் சோவியத் ரஷ்யாவினதும் அதன் கூட்டாளி நாடுகளினதும் முழுமையான ஆதரவு ராஜீவ்–ஜே.ஆர் ஒப்பந்தத்துக்குக் கிடைத்தது. அது மட்டுமன்றி இலங்கையில் இருந்த இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் அந்த ஒப்பந்தத்தை ஆதரித்தன.

அந்த ஒப்பந்தத்தின் கீழ் எமக்குக் கிடைத்த அதிகாரங்கள் போதுமா? இல்லையா? என்பது இப்பொழுது பிரச்சினையல்ல. அதில் குறிப்பிடப்பட்டிருந்த காணி பொலிஸ் அதிகாரங்கள் கொண்ட மாகாணசபை முறைமை, அடுத்தது வடக்குக் கிழக்கு இணைப்பு. இவை இரண்டுமே அந்த ஒப்பந்தத்தின் மைல்கல்கள் எனலாம்.

ஏதோ காரணங்களுக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அந்த ஒப்பந்தத்தின் முதல்தர எதிரிகளானார்கள். ஆனாலும்தளபதிஅமிர் உட்பட ஏனைய இயக்கங்கள் சகலருமே தமது உயிருக்குப் பயந்திருந்த வேளையில், இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும் இணைந்த வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலைச் சந்திக்கவும், பத்மநாபா தலைமையிலிருந்த ஈ.பி.ஆர்.எல். எவ் கட்சியும் முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாளும்தைரியமாக முன் வந்தனர்.

மாகாணசபையை இயங்கவிடாது அதை ஏற்று நடத்தியவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த முனைந்ததன் பயனாக முன்னாள் முதல்வர் வரதாஜப் பெருமாள் நாட்டை விட்டுத் தப்பியோடினார். தமது பாதுகாப்புக்கு உத்தரவாதமாக இருந்த இந்திய அமைதிப் படையினரும் நாட்டை விட்டு வெளியேறியதனால் (புலிகள் இயக்கமும் ஜனாதிபதி பிரேமதாசவும் சேர்ந்து வெளியேற்றியதனால்) வரதராஜப் பெருமாளின் வெளியேற்றம் தவிர்க்க முடியாததாயிற்று.

கஜேந்திரகுமார் அடிக்கடி கூறிவருகின்ற பூகோள அரசியலின் நேரடித் தாக்கமாகவே, எமக்குக்கிடைத்தவை மாகாண சபை முறைமையும், வடக்கு–கிழக்கு இணைப்பும். இந்த இரண்டுக்கும் எதிராகத் தமிழ்த் தலைமைகள் எடுத்த நடவடிக்கையின் பயனாகவே மேற்படி இரண்டு அம்சங்களும் இன்றும் சாத்தியமில்லாது இருக்கிறதென்றால், கஜேந்திரகுமார் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கை தவறானது என்கிறாரா?

மக்களிடம் நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேரடி வாரிசு என்று கூறி வாக்குக் கேட்கின்றீர்கள். அதேநேரம் நமக்குக்கிடைக்க இருந்த வரப்பிரசாதங்களை அனுபவிக்கமுடியாமல்புலிகளே இடைஞ்சலாக இருந்தார்கள் என்றும் சொல்லப் பாக்கிறீர்கள்.

அதேசமயத்தில் எல்லாக்குற்றங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதே போட்டும் விடுகிறீர்கள்.

நீங்கள் புலிகள் இயக்கம் பலமாக இருக்கும் சமயத்தில் ஐந்து வருடங்கள் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தீர்கள். அப்பொழுது உங்களது பூகோள அரசியல் ஞானத்தில் கொஞ்சத்தை வெளிவிட்டிருக்கலாமல்லவா?

இறுதியாக ஒரு சந்தேகம். தமிழ்த் தேசியக் கூட்டணி உட்பட கஜேந்திரகுமாரும் கூடச் சேர்ந்து தலையினால் கிடங்கு கிண்டினாலும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் எமக்குக் கிடைத்த நல்ல அம்சங்களைவிட, கூடுதலாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ அதிகாரங்கள், நல்லாட்சி அரசின் புதிய அரசமைப்பு மூலம் கிடைக்குமென்று கஜேந்திரகுமார் எதிர்பார்க்கிறாரா?

## கூட்டுறவுச் சங்கத்துக்கு காணிக் கொள்வனவில் முத்திரை வரி விதிவிலக்கு

தங்கள் பத்திகையில் 29–10–2016 அன்று வெளிவந்த முத்திரை வரி தொடர்பான செய்தி குறித்து ஒரு விளக்கம் இது.

ஒரு கூட்டுறவுச் சங்கம் காணியொன்றைக் கொள்வனவு செய்தால், அதற்கு முத்திரை வரி அறவிடுவதில்லை என மத்திய அரசு 1970 தொடக்கம் 1972 காலப்பகுதியில் தீர்மானம் எடுத்திருந்தது. அதற்கமைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் காணிக் கொள்வனவு செய்தால், அதற்கு முத்திரைவரியில் இருந்து விலக்களிக்கப்பட்டு வந்தது. அதற்கான சுற்றறிக்கைகள், வர்த்தமான அறிவித்தல்கள் எல்லாம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்றன. மத்திய அரசு நடைமுறைப்படுத்திய முத்திரை வரி விலக்களிப்பையே தற்போதைய மாகாண முதலமைச்சர் பின்பற்றி மாகாண இறைவரி அலுவலகத்துக்கு அறிவித்துள்ளார் என்பது எனது அபிப்பிராயம். தற்போதைய சட்டவாதிகளுக்கு மத்திய அரசும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களித்திருந்தமை தெரியாமல் இருக்கலாம். இதனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உறுதி எழுதிய பழைய நொத்தாரிசுகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். தற்போது கூட்டுறவுத் துறை மக்கள் நலனில் அக்கறை இல்லாத ஓர் ஊழல் துறையாக மாறியுள்ளது. தற்போது அங்கு பொருள்கள் கொள்வனவு செய்ய பெரும்பாலானவர்கள் போவதும் இல்லை. ரி.பி.இலங்கரட்ன அமைச்சராக இருந்த போதோ, அதற்கு முன்னரோ கூட்டுறவுச் சங்கங்கள் காணிக் கொள்வனவு செய்தால் அதற்கு முத்திரைவரி கட்டத் தேவையில்லை என்று விதி விலக்களிக்கப்பட்டிருந்தது.

ஒரு சட்டத்தரணி
வண்ணார்பண்ணை.

## யாழ். நகர கஸ்தூரியார் வீதியின் வாகன நெரிசல்

சிலமாதங்களுக்கு முன்னர், யாழ்.கஸ்தூரியார் வீதியில், துவிச்சக்கரவண்டியில் சென்ற சுமார் 69 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் பாரஊர்தியின் சக்கரத்தினுள் நசிபட்டு இதயம் சேதமடைந்து இறந்துவிட்டார். இந்தச் சம்பவம் மாலை 7 மணியளவில் நடைபெற்றது. வைத்தியசாலைக்கு அவரை முச்சக்கரவண்டியில் ஏற்றி அனுப்பி இருந்தனர். ஆனால் அவர் அங்கு கொண்டு வரப்படுவதற்கு முன்னரே இறந்துவிட்டிருந்தார். அவர் யார் என இனம்காண அவரது தொலைபேசியில் தொடர்பு கொள்ள தொலைபேசியும் உடைந்து காணப்பட்டது. அதன் ‘சிம் இனை’ எடுத்து வேறு தொலைபேசியில் பரிசீலித்தபோது, வீட்டில் இருந்து தேடி வந்த அழைப்புகள் இருந்தன. மேற்கூறிய இறப்பு ஏற்படுவதற்கு மிகவும் நெரிசல் உள்ள ஒரு வழிப்பாதையில் கனரக வாகனங்களையும் பேருந்துகளையும் செல்ல விட்டமை ஒரு காரணம். அடுத்து விபத்து நடந்த பகுதிக்கு முன்பாக முன்னர் வாகனத்தரிப்பிடங்கள் மட்டும் காணப்பட்டன. ஆனால் இன்று அங்கு அடுக்குமாடி வர்த்தகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. வர்த்தக நிலையங்களுக்கு வரும் வாகனங்கள் வீதி ஓரங்களில் ஆங்காங்கே நிறுத்தப்படுகின்றன. போதாக்குறைக்கு குளத்தின் ஓரத்தில் சூழலியல் சட்டத்துக்கு முரணாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் வர்த்தகம் செய்வோர் தெருஓரங்களிலும் வாகனங்கள் ஒதுங்க விடாது, கம்பிகளை நாட்டி உள்ளனர். உண்மையில் முறையான நீதி இருக்குமாயின், அந்தக் கட்டடமே அந்தஇடத்தில் இருத்தல் முறையாகாது. ஆனால் இன்று ஒட்டகத்துக்கு இடம் அளித்த நிலையாக உள்ளது. எனவே எதிர்காலத்தில் இந்த வீதியில் விபத்துக்கள் ஏற்படாது இருக்க ஒருவழிப்பாதையில் தேவையற்ற வாகனத் தரிப்புக்களையோ, பார ஊர்திகளையோ அனுமதிக்கலாகாது.

அடுத்து மானிப்பாய் வீதியில் இருந்து வாகனங்கள் ஸ்ரான்லி வீதியின் ஊடாக அதிவேகமாகவே கஸ்தூரியார் வீதியைக்கடக்கின்றன. எனவே நகர வீதிப்போக்குவரத்துக்குப் பொறுப்பானவர்கள் கஸ்தூரியார் வீதியின் நிலமையை மீள்பரிசீலனை செய்தல் நன்று. அதனால் சில அநாவசிய உயிரிழப்புகளைத் தவிர்க்கலாம்.

மருத்துவர் பி.யமுனாநந்தா

வாசகர் திருமுகப் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரிய அகதிப் பெண்களை வன்புணர்ந்த அரச அதிகாரிகள்

## மனித உரிமைகள் அவதானிப்புக் குழு தெரிவிப்பு

அபுஜா, நவ. 4

நைஜீரியாவில் போகோஹறம் அமைப்பின் தாக்குதல்களுக்கு அஞ்சி, மைடுகரி பகுதியில் உள்ள அரச முகாம்களுக்கு குடிபெயர்ந்த பெண்களை அங்கு பணியாற்றிய அரச அதிகாரிகள் வன்புணர்ந்தனர் என மனித உரிமைகள் அவதானிப்புக்குழு குற்றஞ் சாட்டியது.



நைஜீரிய அரசுக்கு எதிரான மிகப்பெரும் ஆயுதக் குழுவாக உருவெடுத்துள்ளது போகோஹறம் அமைப்பு. இந்த அமைப்பின் தாக்குதல்களுக்கு அஞ்சி அங்குள்ள பொதுமக்கள் பலர் அரசு அறிவித்துள்ள முகாம்களுக்குச் சென்று தஞ்சமடைந்து வருகின்றனர். அவற்றில் மைடுகரி முகாமும் ஒன்று. ஆயிரக்கணக்கானோர் இதுவரை இடம்பெயர்ந்துள்ளனர். மைடுகரி முகாமில் தங்க வைக்கப்பட்ட பெண்களில் பலர் அங்கு பணிக்கு அமர்த்தப்பட்ட அரசு அதிகாரிகளால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டனர் என மனித உரிமைகள் அவதானிப்புக் குழு குற்றஞ்சுமத்தியது.

பல பெண்களிடம் பெறப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலேயே இந்தச் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. முகாம் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் மீது குறித்த அமைப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண்களில் பலர் கர்ப்பிணிகளாகியுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உளவளச் சிகிச்சை வழங்கப்பட்டது. சிலர் எயிட்ஸ் தொற்றுக்கு இலக்காகி இருக்கலாம் என்றும்–அந்த அமைப்பு மேலும் தெரிவித்தது.

மனித உரிமைகள் அமைப்பின் இந்த தகவல் தம்மை கவலையும், அதிர்ச்சியும் அடையச் செய்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் சாதாரணமானது அல்ல என நைஜீரிய ஜனாதிபதி புகாரி தெரிவித்தார். (ம–எ)



### சவூதியின் மற்றொரு இளவரசருக்கும் சாவுத் தண்டனை நிறைவேற்றம்

ரியாத், நவ. 4

சவூதி அரேபியாவின் மற்றொரு இளவரசருக்கும் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது என சவூதி அரேபிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சவூதியில் ஷரியா விதிமுறைகள் மிகக் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே அவருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இளவரசரின் பெயரும் அவர் செய்த குற்றமும் வெளியிடப்படவில்லை. முன்னதாக இருவாரங்களுக்கு முன்னர் பிறிதொரு இளவரசருக்கு சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ம–எ)

## இந்தோனேஷியாவில் படகு விபத்து 18 பேர் உயிரிழப்பு; 44 பேர் மாயம்

ஜகார்த்தா, நவ. 4

இந்தோனேஷியாவில் நேற்றுமுன்தினம் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவிலிருந்து குடிபெயரும் அகதிகளை ஏற்றிச் சென்ற படகே மோசமான கால நிலை காரணமாக விபத்துக்குள்ளானது என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது. 18 பேர் ஊயிரிழந்தனர். 39 பேர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், 44 பேர் காணாமற் போயுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம–எ)






## ஒவ்வொரு நான்கு நாள்களுக்கும் ஒரு செய்தியாளர் கொல்லப்படுகிறார்

ஒவ்வொரு நான்கு நாள்களுக்கும் ஒரு செய்தியாளர் உலகஅளவில் கொலைசெய்யப்படுகிறார் யுனெஸ்கோ அமைப்பு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டது.

போர்கள் நடைபெறும் இடங்களுக்குச் செய்தி சேகரிக்கச் செல்லும் பத்திரிகையாளர்களே அதிக அளவில் கொல்லப்படுகின்றனர். 59 சதவீதமான கொலைகள் அவ்வாறான இடங்களிலேயே இடம்பெறுகின்றன. சிரியா, ஈராக், ஏமன் மற்றும் லிபியா உள்ளிட்ட அரபு நாடுகளில் தான் அதிக அளவில் பத்திரிகையாளர்கள் கொலைஇடம்பெற்றுள்ளன. அதற்கு அடுத்தால்போல் இலத்தீன் அமெரிக்காவில் அதிக கொலைகள் நடைபெற்றுள்ளன.

பெண் செய்தியாளர் களை விட ஆண்கள் 10 மடங்கு அதிக அளவில் கொல்லப்பட்டனர். சராசரி நான்கு நாள்களுக்கு ஓர் பத்திரிகையாளர் கொல்லப்படுகிறார் என்று யுனெஸ்கோ அமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டது. (ம–எ)

## பன்னாட்டு மன்னிப்புச் சபை ரஷ்யாவில் மூடப்பட்டது

மொஸ்கோ, நவ.4

ரஷ்யாவில் இயங்கி வந்த அந்த நாட்டுக்கான மனித உரிமைகள் அமைப்பின் பன்னாட்டு மன்னிப்புச் சபை அதிரடியாக மூடப்பட்டது.



அரசுக்குச் சொந்தமான வளாகம் குத்தகைக்கு எடுக்கப்பட்டே, பன்னாட்டு மன்னிப்புச் சபை இயங்கி வந்தது. கட்டணங்களை உரிய வகையில் செலுத்தவில்லை எனத் தெரிவித்தே மன்னிப்புச் சபையின் அலுவலகம் முடக்கப்பட்டதாக ரஷ்யாவின் தரப்பில் அறிவிக்கப்பட்டது. ஆனால், குறித்த தவணைகளில் சரியாக கட்டணங் களைச் செலுத்தினோம் என மன்னிப்புச் சபையின் சார்பில் தெரிவிக் கப்பட்டது. மனித உரிமைகள் அமைப்புக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வாக்கெடுப்பில் ரஷ்யா தகுதியை இழந்திருந்தது. இதனாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம–எ)

## ட்ரம்ப் ஜனாதிபதியானால் உ

வாஷிங்டன், ஒக். 4

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியானால் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பார் என ஒபாமா தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சியின் தலைமை வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். ஹிலாரி மீது முனைவைக்கப்பட்ட மின்னஞ்சல் குற்றச்சாட்டு காரணமாக அவர் தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ளார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சீனாவில் கடந்த செவ்வாய்க்கிழமை பன்னாட்டு வான் தளவாடங்கள் மற்றும் விமானக் க்ண்காட்சி நடைபெற்றது. சுகாய் விமானத் தளத்தில் இந்தக் கண்காட்சி நடைபெற்றது. 42 நாடுகளைச் சேர்ந்த 700 க்கும் மேற்பட்ட விமானங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. வான் சாதனங்கள், விமான உற்பத்தி, சந்தைப் படுத்தலை சீனாவில் ஊக்குவிக்கும் முகமாக இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. (ம-எ)

# சில அமெரிக்கக் குரங்குகள் பிலிப்பைன்ஸை தடுக்கின்றன

## டுடேர்தே கடும் காட்டம்

மணிலா, நவ. 4

பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு துப்பாக்கி விற்பனை செய்வதை சில அமெரிக்கக் குரங்குகள் தடுக்கின்றன. பிலிப்பைன்ஸின் வளர்ச்சிக்கும் அவை தடை போடுகின்றன இவ்வாறு தெரிவித்தார் டுடேர்தே.

பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு 26 ஆயிரம் தாக்குதல் ரக துப்பாக்கிகளை விற்பனை செய்ய அமெரிக்கா ஏற்கனவே திட்டமிட்டிருந்தது. இதனிடையே அமெரிக்காவில் நடைபெற்ற செனடார் கூட்டத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு துப்பாக்கி விற்பனை செய்ய எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனால் பிலிப்பைன்ஸுக்கான துப்பாக்கி விற்பனையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், பிலிப்பைன்ஸ் உடனான துப்பாக்கி விற்பனையை சில அமெரிக்கர்கள் தடுப்பதாக அந்நாட்டு அதிபர் டுடேர்தே குற்றஞ்சாட்டினார். அத்துடன் அவர்களை குரங்குகள் எனவும் முட்டாள்கள் எனவும் அவர் விழித்தார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கருத்துத் தெரிவித்த டுடேர்தே, இந்தக் குரங்குகளைப் பாருங்கள், நாங்கள் (பிலிப்பைன்ஸ்) 26 ஆயிரம் துப்பாக்கிகளை வாங்க விரும்பினோம், ஆனால் அவர்கள் (அமெரிக்கா) விற்க விரும்பவில்லை. எங்களிடம் உள்நாட்டில் தயாராகும் நிறைய துப்பாக்கிகள் இருக்கின்றன. இந்த அமெரிக்கர்கள் முட்டாள்கள். அதனால்தான் நான் அவர்களிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் என்னிடம் முரட்டுத்தனமாக இருக்கிறார்கள் என டுடேர்தே மேலும் தெரிவித்தார். (ம-எ)



# ஒலிப்பதிவு மூலம் ஆயுததாரிகளுக்கு ஆலோசனை வழங்கினாராம் பக்தாதி

பக்தாத், நவ. 4

ஈராக் படைகளின் நெருக்கடிகளைச் சமாளிக்க தனது குழுவினருக்கு ஒலிப்பதிவின் மூலம் ஆலோசனை வழங்கினார் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவரான பக்தாதி.


ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி, அவற்றை ஓர் தனிநாடாக பிரகடனம் செய்து, அங்கு தனது கொடூரத்தனமான ஆட்சியை அரங்கேற்றி வந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட் அமைப்பு). ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பெரும்பலமாகவும் தலைமையகமாகவும் ஈராக்கின் மோசூல் நகரே விளங்கியது. இதனால் நீண்ட காலத் திட்டத்துக்குப் பின்னர் அந்த நகரை மீட்கும் போரில் களமிறங்கியது ஈராக். அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளும் துருக்கியும் தமது ஆதரவை ஈராக்குக்கு வழங்கின. 35 ஆயிரம் ஈராக் இராணுவச் சிப்பாய்கள் உள்ளடங்கலாக மொத்தம் 90 ஆயிரம் சிப்பாய்கள் மோசூலை மீட்கும் பணியில் தீவிரமாக உள்ளனர். இராணுவச் சிப்பாய்களை விட மோசூலின் பூகோள நிலைகளை நன்று அறிந்த குர்தீஷ் ஆயுதக் குழுவும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை இல்லாது செய்வதில் முனைப்பாக உள்ளது. கடந்த இரு வாரங்களாக நடைபெற்ற போரில், 18 கிராமங்கள் மீட்கப்பட்டன. குவையாரா பெருங் கிராமமும் மீட்கப்பட்டது. ஐ.எஸ்ஐ.எஸ். அமைப்பு பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்று கருதப்படும் நிலையில் அந்த அமைப்பின் தலைவரான பக்தாதி ஒலிப் பதிவின் மூலம் தனது படையினருக்கு தற்போது ஆலோசனை வழங்கியுள்ளார் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



ஒதுங்கி ஓட வேண்டாம். எமது நிலப்பரப்புக்காக நாம் போரிடுவது ஒதுங்கி ஓடுவதை விட வலிமையானது. இந்தப் போர் எமது வலிமையையும் நம்பிக்கையையும் வெளிக்கொணர்கிறது.

இந்தப் போர் கடவுளுக்குப்பிரியமானது. எனவே நாம் இந்தப் போரில் வெற்றி பெறுவோம். எமக்கு எதிராக போராடுபவர்கள் கடவுளுடைய எதிரிகள். எதிரியை எதிர்கொள்வதில் உங்களது குறைபாடுகளை உணர்ந்து செயற்படுவது அவசியம். தற்கொலை குண்டுதாரிகளே இரவைப் பகலாக்கும் அளவுக்கு உங்களது தாக்குதல்கள் அமைய வேண்டும். உங்களது குருதி, ஆறாகச் சிந்தப்பட வேண்டும். ஏனெனில் இந்தப் போர் கடவுளுக்கானது என பக்தாதி தெரிவித்தார் எனப் பன்னாட்ட ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# பாகிஸ்தானில் ரயில் விபத்து 16 பேர் சாவு; பலர் காயம்



லாகூர், நவ. 4

பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று நடைபெற்ற ரயில் விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

நேருக்கு நேராக வந்த இரு ரயில்களே அவ்வாறு விபத்துக்குள்ளாகின. 13 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். 40 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

# ...ல் உலக அமைதிக்கு ஆபத்து



கருதப்படுகிறார். இந்த நிலையிலேயே ஒபாமா இவ்வாறு தெரிவித்தார்.

கரோலினாவில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமெரிக்க அதிபராக ஹிலாரி கிளிங்டன் தேர்ந்து எடுக்கப்படாவிட்டால், நான் அதிபராக இருந்த 8 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் எல்லாம் பின் தள்ளப்பட்டு விடும். டொனால் ட்ரம்ப் இந்த நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே அச்சுறுத்தலாக இருப்பார். அவர் சரியான நபர் அல்ல. சிறுபான்மை மக்களின் உரிமைகளை ட்ரம்ப் பறித்து விடுவார் என ஒபாமா மேலும் தெரிவித்தார். (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத ராசி பலன்



## சிம்மம்

மனதில் தோன்றுவதை மறைக்காமல் பேசும் சிம்மராசிக்காரர்களே! உங்கள் ராசிக்கு தனஸ்தானத்திலே குருபகவான் நின்று கொண்டிருப்பதனால் பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். சாதுரியமாகப் பேசி முக்கியமான வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள். வெளிவட்டாரத்திலே செல்வாக்கு உயரும். குடும்பத்தில் கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த கருத்து மோதல்கள் நீங்கும். மனம் விட்டுப் பேசி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். ஆனால் ராசிநாதன் சூரியன் சாதகமாக இல்லாததால் அவ்வப்போது சோர்வு, களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமையும் கூடிக்கொண்டே போகும். சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள். அரச காரியங்களும் தடைப்பட்டு முடியும். புதன் சாதகமான வீடுகளில் செல்வதனால் கடந்த காலத்தில் எதிர்ப்பார்த்து ஏமாந்து போன தொகை இப்போது கைக்கு வர வாய்ப்பிருக்கிறது. மூத்த சகோதரங்களும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். சுக்கிரன் சாதகமான வீடுகளில் சென்று கொண்டிருப்பதனால் மனைவி வழியிலே உதவிகள் உண்டு. வாகனம் புதிதாக வாங்குவீர்கள். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவது, மேற்கொண்டு அழகுபடுத்துவது போன்ற முயற்சிகளில் இறங்குவீர்கள். புது வேலையை எதிர்பார்த்து இருந்தவர்களுக்குப் புது வேலை கிடைக்கும். சிலருக்கு அயல்நாடு செல்லவும் விசா கிடைக்கும். உங்கள் பிரபலயோகாதிபதி செவ்வாய் 6 ஆவது வீட்டில் அமர்ந்திருப்பதால் செல்வாக்குக்கூடும். புறநகர்ப் பகுதியிலிருக்கும் இடத்தை விற்றுவிட்டு நகரத்தில் வீடு வாங்கக்கூடிய யோகம் உண்டாகும். பெற்றோரின் உடல்நிலை சீராகும். பெற்றோருடன் இருந்து வந்த மனக்கசப்புத் தீரும். ராகு, கேதுவும் சரியில்லாமல் இருப்பதனால் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். மூட்டு வலி, முதுகு வலி வந்து நீங்கும்.

**பெண்களுக்கு**

உயர்கல்வி நல்ல விதத்தில் அமையும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்திலே லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகளும் வசூலாகும். வாடிக்கையாளர்களுடைய எண்ணிக்கை அதிகமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மத்தியில் செல்வாக்கு அதிரிக்கும். மூத்த அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். சிலருக்கு பரிசும் பாராட்டும் கிடைக்கும். எதிர்ப்பாராத திடீர் திருப்பங்களையும், யோகங்களையும் தரும் மாதம் இது.

## கன்னி

கனிவான விசாரிப்பால் மற்றவர்களையும் கவர்ந்திழுக்கும் கன்னிராசிக்காரர்களே! உங்களின் பிரபல யோகாதிபதியான சனிபகவான் 3ஆவது வீட்டில் நின்று கொண்டிருப்பதனால் தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மற்றவர்களைச் சார்ந்திருக்காமல் தன்னிச்சையாக செயற்படத்தொடங்குவீர்கள். பிரபலங்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையில் தீர்வு காண்பீர்கள். வெளிமாவட்டம், வெளிநாட்டில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு. உங்கள் ராசியில் குரு பகவான் நின்று கொண்டிருப்பதால் வேலைச்சுமை கூடிக் கொண்டே போகும். சோர்வு, களைப்பு வந்து நீங்கும். உங்களுடைய ராசிநாதனாகிய புதன் 2 ஆவது வீட்டிலே நின்று கொண்டிருப்பதனால் இங்கிதமாக, இதமாகப் பேசி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உங்களில் பிரபல யோகாதிபதியாகிய சுக்கிரன் சாதகமான நட்சத்திரங்களில் சென்று கொண்டிருப்பதனால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். வாகனப் பழுதைச் சரி செய்வீர்கள். புது வாகனமும் வாங்குவீர்கள். தாய் வழி உறவினர்களாலும் செலவுகள் அதிகமாகிக் கொண்டே போகும். பூர்வீகச் சொத்துப் பிரச்னைகளில் தலையிட வேண்டாம். 6ஆம் இடத்திலே கேது நின்று கொண்டிருப்பதனால் பழைய வழக்கிலே நல்ல தீர்ப்புக் கிடைக்கும். பழைய கடனை அடைப்பதற்குக் குறைத்த வட்டியில் கடன் உதவி கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

**பெண்களுக்கு**

பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தனித்திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். வியாபாரத்திலே சில மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள். அனுபவம் மிக்க வேலையாள்களைப் பணியில் அமர்த்துவீர்கள். உத்தியோகத்திலே அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ள வேண்டாம். சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. கலைஞர்கள் வேற்று மொழி பேசுபவர்களால் ஆதாயம் அடைவீர்கள். சில நுணுக்கங்களையும் கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் மாதம் இது.

**நாளை** ஐப்பசி-20
சனிக்கிழமை -05.11.2016
திதி: பஞ்சமி மு.ப.07.54
நட்சத்திரம்: பூராடம் மு.இ.10.59
ராகுகாலம்:09.04-10.34 வரை
சுபநேரம்: [illegible]
கந்தசஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம்

பயங்கரவாதம் என்ற இந்தச் சொல் தற்போது பேசுபொருளாகியிருக்கின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவின் பேச்சு இதனை உறுதி செய்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த திங்கட்கிழமை, மாவிட்டபுரத்தில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். மாவை.சேனாதிராசா பொது மேடைகளில் பேசி வருகின்ற உரையிலிருந்து அன்றைய உரை வேறுபட்டது என்பதைப் பலரும் சொல்லிக்கொண்டனர். குறுகிய நேரத்தில் விடயத்திலிருந்து விலகாமல், எடுத்துக் கொண்ட விடயத்தை அடுத்தடுத்து நேர்த்தியாகச் சொல்லி முடித்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா பொதுவில் அப்படிப் பேசுவதில்லை என்று குறை சொல்வோர் அதிகம்.

ஜனாதிபதி முன்னிலையில், ஆங்கிலேயர்கள்கூட அகிம்சை வழியில் போராடிய காந்தியைப் பயங்கரவாதி என்றுதான் சொன்னார்கள் என்பதைச் சொல்லி, தமிழர்கள் விடுதலைக்காகத்தான் போராடினார்கள், அவர்களின் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். அரசியல் தலைவர்கள், இராணுவத்தினர் இவ்வாறு இனிமேல் சொல்லக் கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் ஆணித்தரமாக எடுத்துரைத்திருந்தார்.

சொந்த மண் வாசமோ பாசமோ நாடாளுமன்ற உறுப்பினரை அவ்வாறு பேச வைத்திருக்கின்றது. அவரது உரை நடந்து கொண்டிருக்கும் போதே, ஜனாதிபதிக்கு சிங்களத்தில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

ஜனாதிபதி உரையாற்றும்போதும் வார்த்தைகளைக் கவனமாகவே கையாண்டார். அரச படைகள் ஆயுதம் ஏந்திப் போராடின. "அதற்கு எதிரானவர்களும்" ஆயுதம் ஏந்தினார்கள் என்று உரையாற்றினார். தமிழீழ விடுதலைப் புலிகளை இதுவரை காலமும் அரசுத் தலைவர்கள் பயங்கரவாதிகள் என்றே விழித்து உரையாற்றி வந்தனர். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினரின் உணர்சிமிகு உரையின் பின்னர், ஜனாதிபதியின் பேச்சிலும் மாற்றம் இருந்தது.

இதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவின் வேறு பல விடயங்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால பதிலளித்திருந்தார்.

என்றாலும் ஜனாதிபதியின் அன்றைய நிகழ்வு தொடர்பில், ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகள் என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருந்தது. இந்த விடயம் சமூகவலைத் தளத்தில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.




நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா பயங்கரவாதிகள் என்று சொல்ல வேண்டாம் என்றதன் பின்னரும், அந்தச் சொல்லை ஜனாதிபதி ஊடகப் பிரிவு பயன்படுத்தியிருந்ததைப் பலரும் சமூக வலைத் தளத்தில் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து ஜனாதிபதி ஊடகப் பிரிவும் அந்தச் சொல்லை நீக்கியிருந்தது. இது வரவேற்கத்தக்க மாற்றம்தான். ஆனாலும், எவ்வளவு காலத்துக்கு இது நீடிக்கும் என்பதே அடுத்த கேள்வியாக இருக்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பயங்கரவாதிகள் என்ற சொல்லைத் தற்போது தவிர்த்திருக்கலாம். ஆனால் அவரது அரசில் உள்ள ஏனைய தலைவர்களையும், அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டாம் என்று ஜனாதிபதி சொல்வாரா ? மிக முக்கியமாக இராணுவத்தினருக்கும் அவர் அவ்வாறான கட்டளைகளைப் பிறப்பிப்பாரா? இவையே இப்போது எழுகின்ற கேள்விகள்.

ஏனெனில் தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்று நினைக்கின்றவர்கள், அந்த உரிமை கிடைக்காததால்தான் தமிழர்கள் போராடினார்கள் என்பதை உணரவேண்டும். அந்தப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று சித்திரித்துச் சிங்களவர்கள் மனத்தில் பதியச் செய்தால், தமிழர்களுக்கு உரிமை கொடுப்பதைச் சிங்கள வர்கள் மனம் கொள்ளாமல் இருப்பதற்கும் இடமுண்டு.

எனவே, தமிழர்கள் தங்கள் உரிமையையே கேட்டார்கள். அதற்காகவே போராடினார்கள் என்பதைச் சிங்கள மக்கள் உணர வேண்டுமானால், பயங்கரவாதம் என்ற சொல்லை அவர்கள் மனதிலிருந்து நீக்க வேண்டும்.

அ.அஜித்சஞ்ஜீவ்



# நகரத் திட்டமிடல் ஒரு பார்வை

நகரத்திட்டமிடல் என்பது நகரத்தினுடைய பல்வேறு மூலகங்களின் அல்லது அலகுகளின் ஒழுங்கமைப்பைச் சுட்டிக்காட்டுவதாகக் காணப்படுகின்றது. அதே வகையில் இத்தகைய ஒழுங்குபடுத்துகின்ற நிலையை ஏற்படுத்துகின்றபோது அத்தகைய அடைவுகளில் நகரில் வாழும் உயிரினங்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றது. மேலும் நகரத்திட்டமிடல் என்பது ஏற்கனவே காணப்படும் நகரங்களின் முன்னேற்றத்துடன் அல்லது அவற்றின் விரிவாக்கத்துடன் இணைந்ததான கருத்தைத் தருகின்றது. நகரத்திட்டமிடல் பற்றிய அறிவானது நகரச் சூழல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நகர நிலப்பரப்புச் சுற்றுச் சூழல் போன்றவற்றின் அனுகூலமான விடயங்களை அறிந்து கொள்வதற்கு உதவுகின்றது. மனிதனே நகரத்தை உருவாக்குபவனாகக் காணப்படுகின்றான்.

நகரத்திட்டமிடலை உருவாக்குவதற்குத் தேவையான கற்பனா சக்தியும் ஆழமான பகுத்தறிவும் நகரில் வாழ்கின்ற, வாழ விரும்புகின்ற சமூகங்களைப் பற்றியதாக இருத்தல் வேண்டும். ஒரு நகரத்திட்டமிடலாளர் நகரத் திட்டம் ஒன்றை வரைகின்றபோது அல்லது ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும்போது கிடைக்கும் இறுதி முடிவுகள் சகல பொதுத் துறைகளினாலும் மதிப்பிடப்படுவதாக இருக்கும். நகரத் திட்டமிடலாளர் ஒருவரின் வெற்றியானது, மந்தமானதும் செயற்றிறன் அற்றதுமான நிலையிலிருந்து நகரத்தை உயிர்த்துடிப்புள்ளதாக மாற்றுவதில் தங்கியுள்ளது. நன்கு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட நகரம் அங்கு வாழ்கின்ற உயிரினங்கள்போல் அவற்றின் செயற்பாடுகள் சாதாரண வழியில் நடத்தப்படும். நகர வளர்ச்சி அல்லது அபிவிருத்தியானது மனிதனுடைய நாகரிக உருவாக்கமாகக் காணப்படுகின்றது.

நகரத்திட்டமிடல் ஒரு விஞ்ஞானமாகக் காணப்படும் அதேவேளை ஒரு கலையாகவும் அமைகின்றது. நகரம் தொடர்பான உண்மைகளைச் சேகரித்தல், தொடர்புபடுத்தல், பகுப்பாய்வு செய்தல் என்பவற்றை விஞ்ஞானம் உள்ளடக்குகின்றது. கலை என்பது நகரின் மூலகங்களை ஒழுங்குபடுத்துவதைக் குறிப்பதுடன் அவ்வாறான வழியில் பெறப்படும் இறுதி விளைவுகள் வசீகரமான தோற்றம் வசதி பொருளாதாரம் மற்றும் திறமையான அலகு போன்ற நிலைகளில் காணப்படும். இவ்வகையில் நோக்கும்போது ஒரு புதிய நகரம் உருவாக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அல்லது இருக்கின்ற ஒரு நகரை மீள்நிர்மாணம் செய்கின்றபோது விஞ்ஞானமும், கலையும் தனியாக இருக்கக்கூடாததாகவும் இருக்க முடியாததாகவும் உள்ளது. எனவே விஞ்ஞானமும், கலையும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதன் மூலம் சிக்கலான கடினமான செயற்பாடுகளிலும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நகரை உருவாக்கமுடியும்.

எவ்வாறெனிலும் நகரத்திட்டமிடலானது, மிக நுட்பமான விஞ்ஞானமல்ல. அத்துடன் எதிர்கால சாத்திய நிலைகளை தெளிவாக முன்னறிவித்தல் அடையக்கூடியதல்ல. ஆனால், உய்த்துணரும் செயற்பாட்டுக்கும் முன்னறிவிக்கும் செயற்பாட்டுக்கும் இடையிலான இடைவெளியை நிலத்தின் பயன்பாடு, அபிவிருத்தி போன்றவற்றில் பல்வேறு நிறுவனங்கள் தரப்பினரை ஒன்றிணைப்பதால் குறைந்தளவுக்குக் கொண்டு வரமுடியும்.

நகரத்திட்டமிடலுக்கும் கட்டட நிர்மாணத் துறைக்குமிடையிலான வேறுபாட்டைக் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். நகரத்திட்டமிடல் ஒரு வரலாற்றுப் பிரிவு அல்லது சகாப்தத்தின் வாழ்வைக் குறிப்பிடுகின்றது. கட்டடக்கலையானது அதன் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

புராதன நகரங்கள் எவ்வாறு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டிருந்தன என்பதை தொல்லியலாளர்களின் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆதிகால மனிதன் ஒன்று சேர்ந்து ஒரு சமுதாயமாக வாழ்ந்ததுடன் தமது பரஸ்பர பாதுகாப்புக்காகவும் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயற்படுத்தவும் சமூக வாழ்வை முன்னெடுக்கவும் குழுக்களை உருவாக்கிக் கொண்டான். புராதன நகரங்களின் இட அமைவு சில சாதகமானதன்மைகளைக்குறிப்பதாக இலகுவான பாதுகாப்பு, காலநிலை தன்மைகள், பொருளாதார நடவடிக்கைகளுக்கான வசதிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டிருந்தன.

நவீன காலத்தின் நகரங்கள் பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பிரச்சினைகள் புராதன நகரங்களில் காணப்படவில்லை. எந்தவொரு நகர திட்டமிடலிலும் காணப்படக்கூடிய மிக முக்கியமான நோக்கங்கள் அல்லது குறிக்கோள்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01.வசீகரமான தோற்றம்
02.வசதி வாய்ப்பு
03 சுற்றுச்சூழல்
04சுகாதாரம்

வசீகரமான தோற்றம் அல்லது அழகுணர்ச்சி என்ற நோக்கமானது நகரத்தைச் சுற்றிக் காணப்படும் இயற்கையான நிலைமைகளில்மிகவும் சாத்தியமான நன்மைகளால் அடையப்படுகின்றது. அத்துடன் நகரத்தின் பல்வேறு மூலகங்களின் கட்ட நிர்மாண அமைப்புக்களாலும் இந்த நோக்கம் அடையப்படுகின்றது. இது மேலும் தாவரங்களின் பாதுகாப்பு, இயற்கையான பசுமையான செடிகள், பொதுத்துறைக் கட்டடங்கள், புரதான கட்டட நிர்மாணங்கள், கோயில்கள், தேவாலயங்கள், பள்ளி வாசல்கள், கலாசார வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் போன்றவற்றையும் உள்ளெடுக்கிறது.

> நகரத்திட்டமிடலை வித்தியாசமான பல வழிகளில் நோக்க முடியும். அதாவது சட்டரீதியாக, வரலாற்று ரீதியாக, சமூக ரீதியாக, கட்டடக்கலை ரீதியாக, பொருளாதார ரீதியாக நோக்கலாம். எவ்வாறெனிலும் பொருளாதார ரீதியில் நகரத்திட்டமிடலை ஏனைய் காரணங்களிலிருந்து வேறுபட்ட கோணத்தில் நோக்க முடியும். எனவே ஒரு சிறந்த நகரத்திட்டமிடல் என்பது பொருளாதார ரீதியில் அதன் மொத்த நிலப் பெறுமானங்களின் உயர்வாகக் காணப்பட வேண்டும். நகரத்திட்டமிடலுக்குப் பல்வேறு தொழிற்றிறன் சார்ந்த அறிவு நுட்பம் என்பன தேவைப்படுகின்றன.

வசதிவாய்ப்பு என்பது மக்களுக்குக் கிடைக்கக் கூடிய பொருளாதார சமூக பொழுது போக்கு ரீதியான வசதிகள் போன்ற நிலைகளில் விளங்கிக்கொள் ளப்படுகின்றது. இவ்வாறான வசதிகள் எளிதில் பெறக் கூடிய சக்தி, மின்வலு, கைத்தொழில் அலகுகளுக்கான பொருத்தமான இடம், போக்குவரத்து வசதிகள், போதியளவு நீர் விநியோகம், கழிவுநீர் மற்றும் கைத்தொழில் கழிவுகளை இலகுவாக அகற்றக் கூடிய ஏற்பாடுகள், வர்த்தக அலகுகளுக்கான வசதிகள்போன்றவற்றை உள்ளடக்குகின்றன. பொழுது போக்கு ரீதியான வசதிகளானது திறந்தவெளிகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், நகர மண்டபங்கள், திரையரங்குகள், சனசமூகநிலையங்கள், அரங்குகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

நகர திட்டமிடல்நோக்கங்களில் நகரத்தின் சுற்றுப்புறச் சூழல் முக்கியம் பெறுகிறது. இந்தச் சுற்றுச்சூழலானது மனிதன் தனது நாளாந்த செயற்பாடுகளை மிகக் குறைந்த முயற்சியுடன் இலகுவாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் உருவாக்கப்பட வேண்டும். நவீன சமூகத்தில் காணப்படும் சிக்கலான பிரச்சினைகள் குறிப்பாக வேலைக்குச்செல்கையில் களைப்பை ஏற்படுத்தக்கூடிய போக்குவரத்து, நீண்ட நேர வேலை, சமூகத்தவர்களுடன் குறைந்தளவான நேரத்தைச் செலவிடல் போன்றன படிப்படியாக மனிதனையும் அவனது வாழ்வையும் மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப மகிழ்வுடன் வாழமுடியாத ஒரு நிலைக்கு இட்டுச் செல்லும். இவ்வாறான நிலைமையானது உயிர்த்துடிப்புள்ள நகர வாழ்வின் அழிவுக்குக் காரணமாக அமைகிறது. நகர திட்டமிடலானது முக்கியமாக மனிதனுக்கும் அவன் வாழும் சுற்றுச் சூழலுக்கும் இடையேயான சாதகமான உறவை ஏற்படுத்துவதை கருத்திற்கொள்வதாக அமைகிறது.

ஒரு நகரத்திட்டமிடலில் சுகாதாரம் என்ற நோக்கமும் அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும். நியாயமான நோக்கங்களுக்காக நிலத்தை உரிய முறையில் பயன்படுத்தல், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றைப் பொதுமக்களின் பாவனைக்கு அனுமதித்தல் பல்வேறு நிலைகளிலும் சூழல் மாசடைதலைக் குறைந்தளவில் பேணல் போன்றவற்றால் நகர சுகாதாரத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

நகரத்திட்டமிடலை வித்தியாசமான பல வழிகளில் நோக்க முடியும். அதாவது சட்டரீதியாக, வரலாற்று ரீதியாக, சமூக ரீதியாக, கட்டடக்கலை ரீதியாக, பொருளாதார ரீதியாக நோக்கலாம். எவ்வாறெனிலும் பொருளாதார ரீதியில் நகரத்திட்டமிடலை ஏனைய காரணங்களிலிருந்து வேறுபட்ட கோணத்தில் நோக்க முடியும். எனவே ஒரு சிறந்த நகரத்திட்டமிடல் என்பது பொருளாதார ரீதியில் அதன் மொத்த நிலப்பெறுமானங்களின் உயர்வாகக் காணப்பட வேண்டும். நகரத்திட்டமிடலுக்குப் பல்வேறு தொழிற்றிறன் சார்ந்த அறிவு நுட்பம் என்பன தேவைப்படுகின்றன. முக்கியமாக பொறியியல் கட்டடக்கலை நில அளவீடு தொடர்பான அறிவு, அவசியமாகும். நகரமானது எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளை மட்டும் கருத்திற் கொண்டு உருவாக்கப்படுவதில்லை. ஆனால் நகரத் திட்டமிடலாளர்களின் கருத்துப்படி நகரங்களின் அநேகமான வளர்ச்சியும் அபிவிருத்தியும் பொருத்தமானதாக அமைதல் முக்கியமானதாகும்.

கட்டுரையாளர்:
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சித மான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமை களில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



பொ.சங்கவி,
தரம் 1 ஏ,
யா/மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்.





சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற் கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

## தர்மிலனும் பிள்ளையாரும்

தர்மிலன் அந்த ஊரிலுள்ள ஆரம்ப பாடசாலையொன்றில் தரம் ஐந்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்தான். அவனது குடும் பம் மிகவும் ஏழ்மையானது. தர்மிலனின் தந் தையார் அன்றாடம் கூலி வேலை செய்து சம் பாதிக்கும் பணத்தில் குடும்பச் செலவு களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவ னது தாயார் மிகுந்த கஷ்டத்துக்கு மத்தியில் செலவுகளைச் சமாளித்து வந்தார்.

சிறுவனாக இருந்த போதிலும் வீட்டின் கஷ்ட நிலைமை தர்மில னுக்கு நன்றாகவே புரிந்தது.



இதனால் தனது தேவை களை அவன் சுருக்கிக் கொண்டான். கண்ட தையெல்லாம் வாங் கித் தருமாறு அவன் தனது பெற்றோரிடம் ஒரு போதுமே கேட்ப தில்லை. அவன் பாட சாலைக்குச் செல்லும் வழியில் சிறிய பிள்ளை யார் ஆலயமொன்று அமைக்கப்பட்டிருந் தது. தர்மிலன் பிள்ளையாரை வணங்கு வதற்கு ஒரு நாளுமே தவறமாட்டான். "பிள்ளையாரப்பா எமது வீட்டுக் கஷ்டம் நீங்கு வதற்கு உதவி செய்யப்பா. நாங்கள் வறுமை யில் வாடுகின்றோம். சில நாள்கள் போதிய உணவு கூடக் கிடைப்பதில்லை. அம்மாவுக்கு அணி வதற்குப் போதிய உடுப்புக்கள்கூட இல்லை. நான் பெரியவனாகிச் சம்பாதிப் பதற்கு நீண்ட காலம் எடுக்கும். அதுவரை எம்மால் இந்த வறுமையைப் பொறுத்துக் கொள்ள முடியாது. நீ தானப்பா ஏதாவது வழிகாட்ட வேண்டும்" என்றெல்லாம் அவன் பிள்ளை யாரிடம் வேண்டிக் கொள்வான்.

ஒருநாள் வழக்கப்போல அவன் பிள்ளை யாரை வணங்கிவிட்டுப் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தான். பாடசாலை அமைந்துள்ள வீதியில் அதிர்ஷ்லாபச் சீட் டுக்களை விற்பனை செய்யும் நிலைய மொன்று காணப்பட்டது. அதிலிருந்த விற்பனை யாளருக்குத் தர்மிலனின் குடும்ப நிலைமை நன்கு தெரியும். தர்மிலனின் தந்தையார் ஒரு போதுமே அவரிடம் அதிர்ஷ்ட லாபச் சீட்டு வாங் கியதில்லை. அதில் அவருக்கு விருப்பமும் இல்லை. தர்மிலன் அந்த நிலையத்துக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது அங்கு இருந் தவர் அவனை அழைத்தார். தம்பி! இன்று குலுக்கல் இடம்பெறுகின்றது. அதிர்ஷ்டலாபச் சீட்டில் ஒன்றை எடுத்துக் கொண்டு போ. அதற் கான பணமும் தரவேண்டாம் என்று கூறிய வாறு ஒரு சீட்டை எடுத்துக் கொடுத்தார். தர்மிலன் அதை உடனே மறுத்தான். அப்பா இதை அறிந் தால் என்னைக் கண்டிப்பார். அவர் அதிர்ஷ்ட லாபச் சீட்டு வாங்குவதை ஒருபோதுமே விரும்பமாட்டார் என்று தர்மிலன் கூறினான். ஆனால் அந்த மனிதர் அவனை விடவில்லை. வலுக்கட்டாயமாக அவ னது புத்தகப் பையில் ஒரு சீட்டைத் திணித்து விட்டார். தர்மிலன் எதுவுமே செய்ய முடியாத நிலை யில் அங் கிருந்து சென்று விட்டான். வழக்கம்போல அவன் பாடசாலை செல்லும் போது பிள்ளையாரை வணங்கினான். பின்னர் பாடசாலை நோக்கிச் சென்று கொண் டிருந்தான். அவன் அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்யும் இடத்தை நெருங்கியதும் அங்கிருந்தவர் அவனை அழைத்து தம்பி! நான் நேற்றுத்தந்த அதிர்ஷ்டலாபச் சீட்டை எடுத்துத்தா என்று கேட்டார். தர்மிலனுக்கு அப்போதுதான் அதன் ஞாபகம் வந்தது. புத் தகப் பையிலிருந்து அதை எடுத்துக் கொடுத் தான். கொப்பியொன்றில் எழுதியிருந்த இலக் கங்களுடன் அதிர்ஷ்டலாபச் சீட்டை ஒப்பிட்டுப் பார்த்த அந்த மனிதர்; தம்பி உனக்குப் பத்து இலட்சம் ரூபா பரிசு விழுந்துவிட்டது. நான் உனது அப்பாவைக் கொழும்புக்குச் கூட்டிச் சென்று பரிசுத் தொகையை வாங்கிக் கொடுப் பேன் என்று கூறினார். தர்மிலனுக்குத் தலை சுற்றுவது போல இருந்து. பிள்ளையார் எனது குடும்பத்துக்கு நல்ல காலத்தை இந்த மனி தன் ஊடாக வழங்கிவிட்டார். பிள்ளையாரை நான் ஒருபோதுமே மறக்க மாட்டேன் என அவன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

சு.றிஷானிகா.



## வரலாற்றில் இன்றைய தினம்

1847 - பிரிட்டிஷ் மருத்துவர் சேர் ஜேம்ஸ் யங் சிம்சனால் குளோர போம் மயக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

1921 - ஜப்பானியப் பிரதமர் ஹறா டகாஷி, டோக்கியோவில் படு கொலை செய்யப்பட்டார்.

1924 - நெல்லி ரேய்லோ றோஸ் அமெரிக்காவில் முதல் பெண் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970 - சிலியின் ஜனாதிபதியா, சல்வடோர் அலெண்டி பதவி யேற் றார். லத்தின் அமெரிக்க நாடாளுமன்றில் தேர்தல் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட முதலாவது மார்க்ஸிஸ்ட் ஜனாதிபதி இவராவார்.

1979 - மாணவர்களையும் உள்ளடக்கிய கும்பலொன்றினால் தெஹ்ரானில் அமெரிக்கத் தூதராலயம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு, 53 அமெரிக்கர்கள் உட்பட 90 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

1995 - இஸ்ரேலியப் பிரதமர் ஜிற்சாக் றாபின், இஸ்ரேலிய தீவிர வாதி ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார்.

2000 - பிரபாவுடனும் சந்திரிகாவுடனும் இடம்பெறுகின்ற மிகப் பய னுள்ள பேச்சுக்கள். சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உதவுமென நோர்வே தூதுவர் தெரிவிப்பு.

- சந்திரிகா - வாஜ்பாய் தொலைபேசி உரையாடல் சந்தி ரிகாவை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு.

2004 - அரபாத் உயிர் ஊசலாட்டம் எனத் தகவல்.

- புளட் முன்னாள் உறுப்பினர் தெகிவளையில் சுட்டுக் கொலை. மேலும் 2 பேருக்குக் காயம்.

2006 - கொலைகள் தாக்குதல்கள் மூலம் தமிழர்களை அச்சுறுத்தி அவர்களை அடிமைப்படுத்த முயல்கிறது அரசு என மனித உரிமை மீறல் பிரச்சினைகளை விவரித்து ஐ.நாவுக்கு தமிழக மாவட்ட ரீதியாகப் புள்ளி விவரங்களுடன் கூட்ட மைப்பு மனு.

- ஜெனிவாப் பேச்சு முடிந்த கையோடு அரசு விடுத்த பயங்கரச் செய்தி, கிளிநொச்சி குண்டுவீச்சு தாக்குதல் என தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.

2008 - ஆபிரிக்க கலப்பினத்தவரான பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2015 - கியூபாவிலிருந்து புறப்பட்ட சரக்கு விமானம் புறப்பட்டு சில நிமிடங்களில் விபத்துக்குள்ளாகியதில் 37 பேர் உயிரிழந் தனர்.

- பாகிஸ்தானில் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் ஆகக் குறைந்தது 45 பேர் உயிரிழந்ததுடன், 100 பேர் காய மடைந்தனா .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** முக்கியமான செயல் நிறைவேற தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள், பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வர். சிலருக்கு, மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**இடபம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். குடும்பத்தினரின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி, வியத்தகு முன்னேற்றம் பெறும். வருமானம் அதி கரிக்கும்.

**மிதுனம்:** மதிநுட்பத்தால், வாழ்வில் வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் பன்மடங்கு உயரும். வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவர்.

**கடகம்:** சிலரது பேச்சால், சங்கடத்துக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில், சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** நண்பரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். மிதமான ஆதாயம் கிடைக்கும். வீடு, வாகன வகையில், பராமரிப்பு செலவு செய்வீர்கள். தாயின் அன்பும் ஆசியும் மனதுக்கு ஆறுதல் தரும்.

**கன்னி:** நல்லவர்களின் அறிமுகத்தால், நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். தாராள பணவரவு கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்கள் ஆடம்பர பொருள் வாங்குவர். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், நிலுவைப் பணியை நிறைவேற்றுவது நல்லது. லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மகரம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**கும்பம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் பன்மடங்கு உயரும். விரும்பிய உணவை உண்டு மகிழ்வீர்கள். பெண்கள், உறவினருடன் சுற்றுலா செல்ல திட்டமிடுவர்.


**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப்பணம் வசூலாகும். பெற்றோர் உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**யுகேஜி மாணவன்:** நான் ஸ்கூலுக்குப் போகல, வேலைக்குப் போறேன்...
**அம்மா:** யுகேஜி படிச்சிட்டு என்ன வேலைக்குடா போவ?



**மாணவன்:** எல்கேஜி கேர்ள்ஸ்க்கு டியூசன் எடுப்பேன்

கூட சாப்பிடுறவன் பேச்சுலர்...



சூடு பண்ணி சாப்பிடுறவன் குடும்பஸ்தன்

ஒரு டீச்சருக்கு ஒரு பாடமாம்....



நான் மட்டும் தனியாளா எல்லாப் பாடத்தையும் படிக்கணுமாம்...
என்ன நியாயம் இது???

எந்த வலி வந்தாலும் பல்லை கடிச்சிக்கிட்டு பொறுத்துக்கலாம்... ஆனா, பல் வலி வந்தா எதை கடிக்கிறது எண்டு தெரியலையே...!

★Palani கிங்★VJ

வெற்றிக்கான விதிகளை வகுப்பறையில் கற்றுக் கொள்ள முடியாது. வாழ்க்கையில் முட்டி மோதித்தான் கற்க முடியும்...


## சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | 4 |
| 9 | 3 | | | | | | 5 | |
| | | | 3 | 7 | | 1 | | |
| 4 | | 1 | | | | 3 | | |
| | | | 5 | 1 | 6 | | | |
| | | 2 | | | | 9 | | 6 |
| | | 7 | | 6 | 8 | | | |
| | 5 | | | | | | 8 | 3 |
| 8 | | 9 | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 6 | 5 | 9 | 2 | 3 | 4 |
| 9 | 3 | 4 | 8 | 2 | 1 | 6 | 5 | 7 |
| 6 | 2 | 5 | 3 | 7 | 4 | 1 | 9 | 8 |
| 4 | 6 | 1 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 |
| 7 | 9 | 3 | 5 | 1 | 6 | 8 | 4 | 2 |
| 5 | 8 | 2 | 7 | 4 | 3 | 9 | 1 | 6 |
| 3 | 1 | 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 9 |
| 2 | 5 | 6 | 1 | 9 | 7 | 4 | 8 | 3 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 5 | 7 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




## பாடகர் எஸ்.பி.பிக்கு சிறந்த ஆளுமை விருது

பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு சிறந்த ஆளுமை விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு வெளியிட்டுள்ளார். 1966 ஆம் ஆண்டு வெளிவந்த தெலுங்குப் படத்தில் பாடகராக எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அறிமுகமானார். தமிழில் எம்.ஜி.ஆர். நடித்த அடிமைப் பெண் படத்தில் பாடிய 'ஆயிரம் நிலவே வா..' பாடலே முதல் பாடலாக வெளிவந்தது. அன்றிலிருந்து இன்று வரை எத்தனையோ பாடல்களை பல இசையமைப்பாளர்களின் இசையில் பாடியிருக்கிறார். பல முன்னணி நடிகர்களுக்கும் சிறிய நடிகர்களுக்கும்கூட பாடியிருக்கிறார். தமிழ், தெலுங்கில் மட்டுமல்லாது, பல இந்திய மொழிகளிலும் பல அருமையான பாடல்களைப்பாடி, இசை ரசிகர்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றிருப்பவர். இதுவரை சுமார் 40 ஆயிரம் பாடல்களுக்கும் மேல் பாடியிருக்கிறார். இந்த நிலையில் மத்திய அரசு, எஸ்.பி.பிக்கு சிறந்த ஆளுமைக்கான விருதை அறிவித்துள்ளது. கோவாவில் நடக்கும் 47ஆவது சர்வதேச திரைப்பட விழாவில், அவருக்கு இந்த விருது வழங்கப்படும் என மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்திருக்கிறார். விருது குறித்து எஸ்.பி.பி. கூறுகையில், விருது அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த விருது கிடைக்கக் காரணமாக இருந்த அனைவருக்கும் நன்றி. குறிப்பாக கலைத்துறையினர் மற்றும் மத்திய அரசுக்கு நன்றி என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான சிகையலங்காரம்






1 படத்தில் காட்டப்பட்ட வாறு தலைமுடியை 4 சம பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளவும்.

2 நடுப்பகுதியில் உள்ள இரு பிரிவுகளை, ஒவ்வொன்றுக்கும் எதிராகப் பின்னலை ஆரம்பித்து, பக்கத்து பகுதிகளினூடாக அதனை சுற்றி எடுக்கவும்.

3 தொடர்ச்சியாக இந்தப் படிமுறையை மேற்கொள்ளவும்.

இந்தப் பின்னலை முதல் முறைமுயற்சிசெய்வதற்கு நாடாவைப் பயன்படுத்துவது சிறந்தது.



# நேற்றைய கடலுணவு

## விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | – | 800 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 500 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 600 | – | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 700 | 600 | 350 |
| சுறா | 500 | 400 | 500 | – | 800 | – | 500 |
| சீலா | 300 | 300 | 300 | – | 450 | 400 | 350 |
| விளை | 650 | 400 | 300 | – | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 300 | 300 | – | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | 300 |
| திரளி | 300 | 200 | 100 | – | 250 | 200 | 200 |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | – | 250 |
| சூடை | 150 | 150 | 100 | – | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 250 | 200 | – | 400 | – | 130 |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | – | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 120 | 100 | – |
| பாலை | 400 | 100 | 300 | – | 400 | 400 | – |
| வாழை | 100 | 100 | – | – | 300 | 200 | – |




காஸ் அடுப்பில் பாவிக்கும் மண் சட்டி அறிமுகமாகியுள்ளது. காஸ் அடுப்புகளுக்காக பிரத்தியேகமாக இவை தயாரிக்கப்பட்டுள்ளன. இவை 120 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப் படுகின்றன.

# மரக்கறி குருமா



### தேவையான பொருள்கள்

பட்டாணி - 200 கிராம்
பீன்ஸ் - 200 கிராம்
முட்டைக்கோவா - 100 கிராம்
உருளைக்கிழங்கு - 200 கிராம்
கரட் - 200 கிராம்
உள்ளி - 5 பல்
இஞ்சி - ஒரு சிறு துண்டு
பெரிய வெங்காயம் - 2
பச்சைமிளகாய் - 6
கசகசா - அரைத் தேக்கரண்டி
முந்திரிப்பருப்பு - 6
பொட்டுக்கடலை - ஒரு மேசைக்கரண்டி
தேங்காய் - அரை மூடி
பட்டை - ஒரு அங்குல துண்டு
கராம்பு - 4
எண்ணெய் - 2 மேசைக்கரண்டி
எலுமிச்சம்பழம் - 1
உப்பு - தேவையான அளவு

### செய்முறை

பட்டாணியை 5 அல்லது 6 மணிநேரம் ஊற வைத்து எடுத்துக் கொள்ளவும்.

பீன்ஸ், உருளைக்கிழங்கு, கரட், முட்டைக்கோவா ஆகியவற்றை அலசி பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

உள்ளி, இஞ்சி, பச்சை மிளகாய் மூன்றையும் ஒன்றாய் அம்மியில் அல்லது மிக்ஸியில் இட்டு நன்கு பசுமைபோல அரைத்துக் கொள்ளவும். பின்பு கசகசா, முந்திரிப் பருப்பு, பொட்டுக்கடலை ஆகியவற்றை தனியே அரைத்துக் கொள்ளவும்.

தேங்காயைத் துருவி பால் எடுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், பட்டை, கராம்பு, நறுக்கிய பெரிய வெங்காயம் ஆகியவற்றைப் போடவும்.

வெங்காயம் சிவந்ததும், அரைத்து வைத்துள்ள இஞ்சி, உள்ளி, மிளகாய் கலவையைப் போட்டு வாசனை வரும் வரை கிளற வேண்டும்.

பிறகு காய்கறிகளைப் போட்டு, தேங்காய் பாலையும் ஊற்றி, தேவையான உப்பு சேர்த்து மூடி வைத்து வேக விடவும்.

கால் மணி நேரம் கழித்து, காய்கறி வெந்தவுடன் கசகசா, பொட்டுக்கடலை மசாலாவினை போட்டு குருமா கெட்டியானவுடன், சிறிது நேரம் சிறு தீயில் வைத்திருந்து பிறகு இறக்கவும். இறக்கும்போது ஒரு மூடி எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து விடவும். மரக்கறி குருமா தயார்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 60 | 70 | 50–120 | 60 | 40 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 80–120 | 80 | 80–100 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50–60 | 60 | – | 60 |
| பயிற்றை | 140 | 130 | 140 | 80 | 140 | 160 | – | 60 |
| பாகல் | 120 | 160 | 200 | 120 | 180 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 100 | 100 | 80 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 90 | 120 | 100 | 100 | 80–100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 25–30 | 70 | – | 30 |
| தக்காளி | 80 | 70 | 60 | 60 | 80 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 60 | 60 | 80 | – | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 80 | 80 | 70 | 80 | – | 70 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 30 | 60 | – | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | – | 50 |
| வெண்டி | 100 | 80 | 120 | 80 | 80 | 40 | – | 30 |
| போஞ்சி | 180 | 160 | 180 | 160 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 | 80 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 30 | 45 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 100 | 100 | 120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 500 | 550 | 600 | 500 | 300 | 600 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 140 | 140 | 100 | 140 | – | 70 |
| இராசவள்ளி | 180 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 60 | 80 | 80 | 80 | – | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல்வரின் குழு செயற்படக் காணோம்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் விசனம்

ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் விசனம் வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆவணங்களைக் கையளிப்பதற்கு நேற்றையதினம், வடக்கு மாகாண தலைமைச் செயலர் அலுவலகத்துக்குச் சென்ற போதே, விசாரணைக் குழு செயற்படாத விடயம் தெரிய வந்ததாக உறுப்பினர் லிங்கநாதன் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கடந்த பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி என்னால் சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. பின்பு அதனைப் பதிவேட்டில் இருந்து நீக்கவேண்டும் என்று பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி, வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டபோதும் அது தோற்கடிக்கப்பட்டது.

விடயத்தை விசாரணை செய்வதாக முதலமைச்சரும் அறிவித்திருந்தார். 8 மாதம் கழிந்த நிலையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி சபையில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஓர் அறிவிப்புச் செய்திருந்தார். அமைச்சர்கள் தொடர்பான எந்த முறைப்பாட்டையும் சமர்ப்பிக்கும் வகையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவானது ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி முதல் தலைமைச் செயலாளரின் அலுவலகத்தில் இரு முன்னாள் நீதியரசர்கள் ஒரு ஓய்வு பெற்ற மாவட்டச் செயலர் தலைமையில் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் உட்பட 5 அமைச்சர்களுக்கு எதிராகவும் முறையிட முடியும் என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார். இந்தக் கோரிக்கையை முதலில் எழுப்பியவன் என்ற வகையிலும் விவசாய அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு என்னிடம் ஆதாரம் உண்டு என்று நான் கூறியதன் அடிப்படையிலும், இவ்வளவு நாளும் நான் ஏன் அதனை விசாரணக் குழுவிடம் கையளிக்கவில்லை என்று சிலர் கூற முற்படுகின்றனர்.

இதன் காரணத்தினால் ஒக்ரோபர் 3ஆம் திகதியில் இருந்து சரியாக ஒரு மாதம் கழித்து நவம்பர் 3ஆம் திகதி நேற்றுத் தலைமைச் செயலாளர் அலுவலகத்தில் இயங்குவதாகக் கூறப்பட்ட விசாரணைக் குழுவிடம் என்னிடம் உள்ள ஆதாரங்களான கடிதங்கள், காணொலிகளைச் சமர்ப்பிக்க இங்கு வந்தேன். அவ்வாறான அலுவலகம் எவையும் இங்கு இயங்கவில்லை எனப் பதிலளிக்கின்றனர். மாகாணத்தில் என்ன நடக்கின்றது. முதலமைச்சர் உட்பட அனைவரும் உரைத்தது பொய்யா என்ற சந்தேகமும் எழுகின்றது – என்றார்.

'ஆளும் கட்சி உறுப்பினர் ஆவணங்களைக் கையளிப்பதற்கு விசாரணைக் குழுவின் அலுவலகத்தைக் கேட்டபோது, இதுவரை எமது செயலகத்தில் அந்தக் குழு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவில்லை என்று பதிலளித்தேன். இருப்பினும் விசாரணைக் குழுவினர் தொடர்பு கொண்டுள்ளனர். இது தொடர்பில் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு பதிலளிப்பதாக தெரிவித்தேன்' என்று தலைமைச் செயலர் அ.பத்திநாதன் தெரிவித்தார். (த-5-10)

## மாதகலில் சிக்கிய 52 கிலோ கஞ்சா

### சந்தேகத்தில் ஒருவர் கைது

பாணத்துக்கு கேரளக் கஞ்சாக் கடத்தல் இடம் பெறுவதாக இளவாலைப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து காங்கேசன்துறை சிறப்புப் பொலிஸ்குழு கடற்படையினரின் உதவியுடன் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இந்த நிலையில் மாதகல் கடற் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணம் செய்த படகொன்றைச் சோதனையிட்டபோதே கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

படகில் கேரளக் கஞ்சா பரல்களின் உள்ளே மறைத்துவைக்கப்பட்டிருந்தநிலையில்கொண்டு வரப்பட்டிருந்ததாகவும், கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவின் மொத்த நிறை 52 கிலோ எனவும் இவற்றின் பெறுமதி 91 லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## ஆவா குழுவை உருவாக்கும் ஆற்றல் எனக்கில்லை

### கூறுகின்றார் கோத்தபாய

ஆவாக் குழுவை முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவே உருவாக்கியதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்த நிலையிலேயே, முன்னாள் பாதுகாப்புச் செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'மலினத்தனமான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதைவிட்டு, அமைச்சர் ராஜித சேனாரத்ன தனது அமைச்சுப் பொறுப்பில் கவனம் செலுத்த வேண்டும். அவருக்கு அமைச்சுப் பதவி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கடமையை அவர் சரியாகச் செய்யவேண்டும். அபத்தமான கதைகளைக் கொண்டு வரக் கூடாது. இதுபோன்ற செயல்களைச் செய்யும் ஆற்றல் எனக்கு இருக்குமேயானால், அதனை நான் பாராட்டாகவே எடுத்துக் கொள்வேன்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## புத்தர் சிலையை அகற்ற மறுத்தனர் பிக்குகள்

### மாணிக்க மடுவில் தொடரும் பதற்றம்

நிலையில் புத்தர் சிலை நிறுவப் பட்டமையானது தமிழ் பேசும் மக்களிடையே அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியது.

இது உடனடியாக அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்குத் தெரியப்படுத்தப்பட்டதுடன் அவர் அந்தப் பகுதிக்கு வந்து பார்வையிட்டு, மக்களுடன் கலந்துரையாடியிருந்தார். இந்த விவகாரம் தொடர்பாக, ஆராயும் கூட்டம் அம்பாறை மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

இந்தக் கூட்டத்துக்கு, இறக்காமம் பிரதேசத்திலுள்ள பள்ளி வாசல்களின் நிர்வாகிகள், இந்து ஆலய நிர்வாகிகள் மற்றும் புத்தர் சிலை விவகாரத்துடன் தொடர்புடைய பௌத்த பிக்குகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் – முஸ்லிம் தரப்புகள் பௌத்தர்கள் அல்லாத இடத்தில் புத்தர் சிலை வைப்பது பொருத்தமற்றது என்றும், இதனால் எதிர்காலத்தில் பின் விளைவுகள் ஏற்படலாம் என்றும் அச்சத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதற்கு பௌத்த பிக்குகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இறக்காமம் பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சிக்குரிய 19 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றைப் பாதுகாக்க வேண்டிய தேவை தமக்கு இருப்பதாகவும் பௌத்த பிக்குகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரத்துக்குச் சுமுகத் தீர்வு காணும் நோக்கில், தமிழ், முஸ்லிம், பௌத்த பிக்குகள் மற்றும் சிவில் அதிகாரிகளை உள்ளடக்கிய 15 பேர் கொண்ட குழுவொன்று மாவட்டச் செயலரால் நியமிக்கப்பட்டுள்ளது. (த-5)

## கடற்படைக்கு எதிராகத் திரண்ட புத்தளம் மீனவர்

றத்துக்கு முன்பாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9 மணிக்குக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மன்னார் – முத்தரிப்புத்துறைக் கிராமத்தில் கடந்த மாதம் 18ஆம் திகதி கடற்படையினர் – பொதுமக்கள் இடையில் முறுகல் ஏற்பட்டது. இதனால் மன்னார் மாவட்டத்தின் முத்தரிப்புத்துறை, வங்காலை, நறுவிலிக்குளம், சிலாவத்துறை உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடற்படையினரால் மோசமான பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அதிக சோதனைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

போர்க் காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது போல், மீனவர்களிடம் தொழில் அனுமதி பத்திரத்தைக் காண்பிக்குமாறு கடற்படையினர் தொந்தரவு கொடுக்கப்படுவதாகவும், படகுகளை பறிமுதல் செய்வதாகவும், மன்னார் மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்த நிலையிலேயே புத்தளம், சிலாபம் பகுதி மீனவர்களிடமும் கடற்படை தமது கெடுபிடிகளை ஆரம்பித்துள்ளதால் வடக்கு – கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களைச் சேர்ந்த மீனவர்கள், மீனவர் சங்க அமைப்புக்கள் இணைந்து கடற்படையினரின் கெடுபிடிகளுக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத் தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் வருகின்றார் பிரி. அமைச்சர்

பின்னர் புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் பதவியேற்றுள்ள பரனோஸ், அமைச்சராக முதல் முறையாக இலங்கைக்கு வருகை தருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு பரனோஸ் ஏன்லி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு இங்குள்ள நிலமைகளை ஆராயவுள்ளார். அத்துடன் வடக்கு முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன், வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

கொழும்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயவுள்ளார்.

இலங்கையில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பலப்படுத்துவது குறித்தும் இலங்கைப் பயணத்தின்போது அவர் வலியுறுத்தவுள்ளதுடன் நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்புத் தொடர்பாகவும் ஆராயவுள்ளார். (த-5)

## சந்திப்பு திருப்தி

### தமிழக மீனவர் வரவேற்பு

தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இரு தரப்புச் சந்திப்பில் எந்த முடிவுமே எட்டப்படவில்லை என்று இலங்கை மீனவர்கள் தெரிவித்திருந்த நிலையிலேயே, தமிழக மீனவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர். இலங்கை – இந்திய மீனவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் 3ஆம் கட்டப் பேச்சு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழக மீனவர்கள் சந்திப்பின் முடிவில் இந்திய ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்ததாவது:

பேச்சு திருப்திகரமாக இருந்தது. இலங்கை மீனவர்களுடன் ஆக்கபூர்வமான முறையில் பேச்சு நடைபெற்றது. பேச்சின்போது சிறையில் இருக்கும் இரு நாட்டு மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் ஒப்படைக்க ஒத்துக்கொள்ளப்பட்டது–என்றனர்.

இந்தப் பேச்சில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கை மீனவர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## லசந்தவின் கைபேசியை ஒட்டுக் கேட்டார் கோத்த

### அம்பலமானது இரகசிய ஆவண

ஆவணத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக, அரச புலனாய்வுச் சேவைத் தலைவரா இருந்த, கீர்த்தி கஜநாயக்கவின் கையொப்பத்துடன் எழு பட்ட கடிதத்தை கொழும்பு ரெலிகிராப் ஊடகம் வெ யிட்டுள்ளது.

இந்த ஆவணத்தில், லசந்த விக்கிரமதுங்கவின் கை தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட சில கைத்தொலைபே உரையாடல்களைக் கண்காணிக்குமாறு, பாதுகாப் செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய கீர்த்தி கஜநாய தமது அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இந்தக் கண்காணிப்பு தேசிய பாதுகாப்புடன் தொடர்புடை என்ற குறிப்பையும் அதில் அவர் எழுதியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி லசந்த விக்கி துங்க கொலை செய்யப்பட்டிருந்தார். அதற்கு முன்னதா 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10ஆம் திகதி இந்தக் கடி அனுப்பப்பட்டுள்ளது.

ஆவணத்தில் கண்காணிக்கப்படவேண்டிய தொலைபே இலக்கங்கள் என்று வரிசைப்படுத்தப்பட்டுள்ளவற்றி முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தற்போதைய பிரத மான ரணில் விக்கிரமசிங்கவின் கைத்தொலைபேசி இல மும் அடங்கியுள்ளது. ஏனைய தொலைபேசி இலக்கங்கள் பல அரசியல் பிரமுகர்களுடையவை என்றும் தெரிய வ கிறது. (த-5)

## நுட்பம்

# என்பு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரோபோ

என்பு நோயினால் பாதிப்புக்குள்ளாகி எழுந்து நடப்பதற்கும், சாதாரணமாக ஊசாடித் திரிவதற்கும் ஏற்ற வகையிலே நோயாளர்களுக்கு உதவும் புதிய ரோபோ ஒன்றைவிஞ்ஞானிகள் தயாரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதன்பிரகாரம் இந்த புதிய கண்டு கொள்ளலை சீனாவின் பெய்காங் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும் டென்மார்க்கில் உள்ள அல்போர்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும் இணைந்து வடிவமைத்துள்ளனர்.



பிரதானமாக பக்கவாதம், முழங்கால் மூட்டு இயங்காமை, தண்டுவட நோயின் பாதிப்பால் அவதியுறும் நோயாளிகளுக்காக இவை தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை முழங்காலில் அணிந்து கொள்ளும்போது, இயற்கையான முழங்காலின் அசைவுகளை ஏற்படுத்தி, எந்தவித உதவியுமின்றி நோயாளிகள் எழுந்து நிற்கவும், நடக்கவும் இவை உதவிபுரிவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர நடக்க முடியாதவர்கள் நடை பயிற்சி மேற்கொள்ளவும், இவை உதவுகின்றன. இடுப்புக்கு கீழாக அணிந்து கொள்ளும் வகையிலே இந்த ரோபோக்களை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள விஞ்ஞானிகள், மூளையில் உள்ள நரம்புகளே முதுகுத்தண்டு வட நரம்புகளுக்கான நடக்கும் அசைவுச் சமிக்ஞைகளை அனுப்புகிறது. இதேபோன்று மூளைக்கு அனுப்பப்படுகின்ற தகவல்களை ரோபோ உள்வாங்கிக் கொள்வதுடன், கால்களுக்கான அசைவுகளை உருவாக்குகிறது. இதன் மூலம் நோயாளிகள் எளிதாக நடக்க முடிகிறது– என்றுள்ளனர்.

## கலக்சி நோட் - 7 வாடிக்கையாளர்களுக்கு 08 கைபேசிகளைப் பெற முடியும்

கலக்சி நோட் 7 வாடிக்கையாளர்களுக்கான சலுகை வழங்கலாக கைபேசிப் பெறுமதியின் உண்மை விலையிலிருந்து அரைவாசி விலைக்கழிவுடன் கலக்சி நோட் 7 இனை வழங்கவுள்ளதாக சம்சங் நிறுவனம் அறிவித்துள்ளது.

கலக்சி நோட் 7 இனை மின்னேற்றம் செய்யும்போது, தீப்பற்றி எரிவதாக எழுந்த முறைப்பாட்டை அடுத்து, பல நாடுகளில் இந்த வகை கைபேசிகளை விமானத்தில் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலே வாடிக்கையாளர்களிடமிருந்து கைபேசிகளை மீளப் பெற்றுக்கொள்வதாக அண்மையிலே சம்சங் நிறுவனம் அறிவித்தது. அதனடிப்படையிலேயே இந்த வகை கைபேசிகளை வாங்கிய வாடிக்கையாளர்களுக்கு மேற்படி சலுகையையும் 88.39 டொலர்களை இழப்பீட்டுத் தொகையையும் சம்சங் நிறுவனம் வழங்க தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.



# "கிறவுண் பெயின்ட்ஸ்" வகைகளை அறிமுகப்படுத்தும் ஜட் நிறுவனம்

இலங்கையில் அமைப்பாக்க வசதி மற்றும் முடிவாக்க துறைசார் சந்தையில் முன்னணியில் திகழ்கின்ற ஜட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் உள்நாட்டுச் சந்தையின் தேவையை நிவர்த்தி செய்யும் விதத்திலமைந்த தனது அதிகமான வகைகளிலான உற்பத்திகளுள் இன்னுமொரு புதிய வகையாக கிறவுண் பெயின்ட்ஸ் எனும் வர்ணப்பூச்சை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

கிறவுண் என்பது பிரித்தானிய வர்த்தக குறியீடாக திகழ்வதுடன், ரோயல் முத்திரை பொறிக்கப்பட்டு அங்கீகாரமளிக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றது. இவ்வுற்பத்தியானது வாடிக்கையாளர்களுக்கு பரந்த வகைகளிலான வெளிப்புற, உட்புற பயன்பாட்டுக்கான எமல்சன் மற்றும் எனாமல் வர்ணப்பூச்சுக்களை வழங்குகின்றது.

கிறவுண் பெயின்ட்ஸ் நிறுவனம், ஐக்கிய இராச்சியம் மற்றும் அயர்லாந்தில் மிகப் பெரியதும் மிகவும் வெற்றிகரமானதுமான வர்ணப்பூச்சு உற்பத்தியாளராகத் திகழ்கின்ற அதேநேரத்தில், உலகளாவிய ரீதியில் கிளைகளை உள்ளடக்கிய வலைப்பின்னலையும் கொண்டியங்குகின்றது. மேன்மைதங்கிய மகாராணியால் வழங்கப்பட்ட ரோயல் அத்தாட்சிப் பத்திரத்தின் (Royal Warrant) மூலம் அதியுன்னத அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள இக்கம்பனி, மிகச் சிறந்த தரம் மற்றும் செயலாற்றல் கொண்ட உற்பத்திகளை தயாரிப்பதில் இரு நூற்றாண்டுகளுக்கும் அதிகமான சிறப்பான அனுபவத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

எமது உற்பத்தி வகைகளுடன் கிறவுண் பெயின்ட்ஸ் இணையும் உள்வாங்கிக் கொள்வதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். பல்லாயிரக்கணக்கான எமது வாடிக்கையாளர்கள் அவர்களுடைய வீடுகள் மற்றும் நிறுவனம் சார்ந்த தேவைகளுக்கு பொருந்தக் கூடிய, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட இந்த வர்த்தக குறியீட்டை பயன்படுத்துவதற்கான வரப்பிரசாதத்தை இப்போது பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதை சொல்லத் தேவையில்லை என்று ஜட் ஹோல்டிங்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் ஈலியன் குணவர்தன தெரிவித்தார்.

பரந்துபட்ட விதத்திலான ஒரு வர்ணத் தட்டையும் மிகவும் புத்தாக்கமான உற்பத்தித் தொடரையும் தன்னகத்தே கொண்டுள்ள, கிறவுண் ஆனது, 99 வீத கரைமத்திரவம் தேவையற்ற சூத்திரம், வர்ணப்பூச்சை அறிமுகம் செய்துள்ளது. ஐக்கிய இராச்சிய சந்தையில் இவ்வாறான ஒரு முதலாவது உற்பத்தியாக இது காணப்படுகின்றது. அத்துடன் பக்ரீரியாவுக்கு-எதிரான, தீ பரவாத தன்மையுள்ள மற்றும் காய்ந்த தன்மையான புத்தாக்க தயாரிப்புக்களையும் உலகுக்கு வழங்குகின்றது.

கிறவுண் பெயின்ட்ஸின் வர்ணம் பற்றிய பரந்த அறிவானது – பரந்துபட்ட உற்பத்தித் தொடர், வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட சேவை மற்றும் சூழல் பற்றிய முனைப்புடனான விழிப்புணர்வு ஆகியவற்றுடன் இரண்டறக் கலந்துள்ளது. அதேநேரம், நாம் இலங்கைச் சந்தையில் உறுதிமிக்க ஓர் அந்தஸ்தை பேணுகின்றோம் என்பதையும் உறுதி செய்கின்றது என்றும் குணவர்தன குறிப்பிட்டார். இது வெறுமனே ஒரு மெற், சில்க் அல்லது அழகிய புறத்தோற்றம் கொண்ட ஒரு தகரம் அல்ல. இது, ஒவ்வொரு விடயத்திலுமான 200வருடஅறிவும், அனுபவமும், பேரார்வமும் ஆகும் என்று அவர் மேலும் கூறினார். (த)

## வணிகம்

# புதிய காட்சியறைகள் திறந்துள்ளது டிமோ

டிமோ நாடெங்கிலுமுள்ள டாட்டா மோட்டர்ஸ் விற்பனை மையங்களின் தற்போதைய வலையமைப்பை மேலும் விஸ்தரித்துள்ளது. இலங்கையில் மூன்று பிரத்தியேகமான டாட்டா பயணிகள் மோட்டார் கார் விற்பனை காட்சியறைகளை ஆரம்பிப்பதற்கு, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்களில் முதலீடு செய்யும் முகமாகப் புதிய 3எஸ் வசதியுடன் (விற்பனை, பேணற் சேவை மற்றும் உதிரிப் பாகங்கள்) 30இற்கும் மேற்பட்ட மையங்களைக் கொண்ட வலையமைப்பாகப் பலப்படுத்தியுள்ளது.





இதன் முதற்கட்டமாகத் தனது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த கொள்வனவு அனுபவத்தை வழங்கும் வகையில், அண்மையில் நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய இடங்களிலும் காட்சியறைகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. நீர்கொழும்பு காட்சியறையானது இல.258, சிலாபம் வீதி, பெரிய முல்லை என்ற முகவரியிலும், களுத்துறை காட்சியறையானது இல.768, காலி வீதி, கட்டுக்குருந்த என்ற முகவரியிலும் அமைந்துள்ளன.

திறப்பு விழா நிகழ்வில் உரையாற்றிய டிமோ பணிப்பாளர் சபைத் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே கூறுகையில், பயணிகள் மோட்டார் கார் வியாபாரத்தை உச்சத்துக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்பதில் நாம் மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளோம். பெறுமதிவாய்ந்த எமது வாடிக்கையாளர்கள் தற்போது விசாலமான மற்றும் நவீன வலையமைப்பின் மூலமாக பல நன்மைகளை அனுபவிக்கவுள்ளதுடன், இது தொடர்ந்தும் விஸ்தரிக்கப்பட்டு, மேம்படுத்தப்படவுள்ளது–என்றார்.

நீர்கொழும்பு காட்சியறை திறப்பு விழா நிகழ்வில் உரையாற்றிய, ஜொனி உம்மன் (தலைமை அதிகாரி, சர்வதேசவியாபாரப் பிரிவு, பயணிகள் வாகனங்கள்) கூறுகையில், இலங்கையில் டாட்டா மோட்டர்ஸ் நிறுவனத்தின் தொடர்ச்சியான விஸ்தரிப்பு மற்றும் இந்தத் திறப்பு விழா சுப நிகழ்வில் அங்கம் வகிப்பதையிட்டு நாம் மிகவும் பூரிப்படைந்துள்ளோம். இலங்கையில் பயணிகள் வாகனச் சந்தையில் எமது விஸ்தரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களின் முதலாவது பெரிய முன்னெடுப்பாக இந்தத் திறப்பு விழா நிகழ்வு மாறியுள்ளது.

இந்த நவீன மற்றும் பிரத்தியேகக் காட்சியறைகள் சராசரியாக 1500 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட தாராளமான இட வசதிகளைக் கொண்டுள்ளதுடன், அங்கு 5 முதல் 6 வரையான வாகனங்களைக் காட்சிப்படுத்தக்கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது. (த)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| 3/11/2016 | | | | அதிகூடிய பங்குபரிமாற்றம் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| www.cse.lk | | | | ரெஸ்ஸ் எனர்ஜி | HPWR.N | 24.2 | 1,581,280 | 38,246,988 |
| சுட்டிகள் | | இன்று | நேற்று | ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 230.5 | 152,417 | 35,206,370 |
| ASPI | 13.05 | 6,442.09 | 6,429.04 | ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 152.0 | 171,259 | 26,004,016 |
| S&P SL20 | 11.67 | 3,610.40 | 3,598.73 | கொமர்சியல் வங்கி | COMB.N | 151 | 96,700 | 14,601,651 |
| வியாபாரப் புரள்வு | | 217,659,632 | 605,875,650 | அஸ்கோ கோல்டிங்ஸ் | ASCO.N | 33 | 412,491 | 13,488,056 |
| உள்நாட்டு- கொள்வனவு | | 141,121,760 | 119,629,192 | டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 62.2 | 181,001 | 11,361,554 |
| விற்பனை | | 202,612,768 | 512,838,240 | சீரா கேபிள்ஸ் | SIRA.N | 3.4 | 3,120,967 | 10,660,388 |
| வெளிநாட்டு- கொள்வனவு | | 76,537,864 | 486,246,496 | காகில்ஸ் | CARG.N | 173.1 | 52,025 | 9,006,548 |
| விற்பனை | | 15,046,870 | 93,037,424 | அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 26.2 | 269,211 | 7,122,355 |
| | | | | டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 52.8 | 88,738 | 4,688,393 |





அறிவித்தல்கள்

பங்குலாபம்

அக்ஸஸ் இஞ்சினியறிங் (AEL) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.50
லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் (LHCL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
கொமர்சியல் வங்கி (COMB) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 175 |
| விலை உழைப்பு | 13.4 |
| [illegible] | 1.5 |
| பங்குகளா விளைவு | 3.1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## லிபியாவில் படகு விபத்து; 250 பேர் பரிதாபச் சாவு

வட ஆபிரிக்க லிபியாவில் சில மணித்தியாலய இடைவெளிகளில் இடம்பெற்ற படகு விபத்தில் 250 பேர் உயிரிழந்தனர்.

துருக்கி, சிரியா நாடுகளில் நடைபெற்று வரும் போர் காரணமாக ஏகப்பட்ட பொதுமக்கள் லிபியா வந்தடைகிறார்கள். அவர்களும் லிபிய மக்களும் லிபியாவிலிருந்து மத்திய தரைக் கடலின் எலையான இத்தாலியை நோக்கி அகதிகளாகப் பயணிக்கின்றனர். அவ்வாறு பயணிக்கும் போது அவ்வப்போது சில படகு விபத்துக்களும் இடம்பெறுவதுண்டு. அந்த வகையில் நேற்று முன்தினம் இரவு படகொன்று விபத்துக்குள்ளானதில் நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் உயிரிழந்தனர். 39 பேர்தப்பித்துக்கரைசேர்ந்தனர். குறித்த கடல் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற பிறிதொரு படகு விபத்தில் 140 பேர் உயிரிழந்தனர். சில மணித்தியால இடைவெளியில் இரு படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கிட்டத்தட்ட 250 பேர் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தத் தகவலை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான முகவராண்மை உறுதிப்படுத்தியது. (ம)

# புலனாய்வுப் பணிப்பாளரின் பதவி நீக்கத்துக்கு வரவேற்பு

கொழும்பு, நவ. 4

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து பிரிகேடியர் துவான் சுரேஸ் சாலேயை நீக்கியதை மக்கள் சக்தி பொது அமைப்பு வரவேற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகுவதற்கு ஆதரவு வழங்கிய மக்கள் சக்தி என்ற பொது அமைப்பு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு சந்தித்திருந்தது. இந்தச் சந்திப்பின் பின்னர்- இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மாற்றம் நடைபெற்றது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரான சரத் வீரசேகர தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய காலப் பகுதியில், தனது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக விசுவாசமானவர்களை முக்கியமான பல பதவிகளில் அமர்த்தினார். அவ்வாறு பதவியில் அமர்த்தப்பட்டவர்களில் ஒருவர் தான் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சுரேஸ் சாலி.

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் குறித்த நபரை தொடர்ந்தும் அதே பதவியில், வைத்திருந்தனர். எமக்குத் தெரிந்த அளவில் உலகில் எந்தவொரு நாட்டிலும், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் முன்னைய ஆட்சியில் இருந்த புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரியொருவரை தொடர்ந்தும் பதவியில் வைத்திருக்கும் சம்பிரதாயமொன்றே இருந்ததில்லை.

ஆட்சியாளர்களுக்கு ஆட்சியை முன்னெடுப்பதற்குச் சரியான தகவல்களைத் திரட்டிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. முன்னைய ஆட்சியாளர்கள் நியமித்த புலனாய்வுத்துறை பணிப்பாளரைத் தொடர்ந்தும் பதவியில் அமர்த்தியிருந்ததால், இந்த அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவிடாது பல தடைகளை அவர் ஏற்படுத்தி வந்தார். இதில் எந்த சந்தேகமும் இல்லை.

இவற்றைவிடக் கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் மிகவும் முக்கியமான விடயங்களாகும். மனிதப் படுகொலைகள், ஊடக நிறுவனங்களைத் தீ வைத்துக் கொளுத்தியமை, கடத்தல்கள், காணாமற் போகச் செய்த சம்பவங்கள் ஆகியவற்றுக்கு எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னர், அவை குறித்த தகவல்களை தெரியப்படுத்தவோ, அல்லது அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்தவோ இராணுவப் புலானாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி தவறியமை மிகப்பெரிய பிரச்சினையாகும். அதனால் காலம் கடந்தாவது இந்த அரசு சம்பந்தப்பட்ட இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரியை மாற்றி, அந்த இடத்துக்குப் புதிய ஓர் அதிகாரியை நியமித்துள்ளதை, சட்டத்தின் ஆட்சியையும், நீதியையும், சாதாரண சமூகத்தைக் கட்டியெழுப்பவும் விரும்பும் மக்கள் வரவேற் கின்றனர் - என்றார். (த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தீர்வு...

மகாஜனக் கல்லூரியில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

பெரும் அழிவுகளைச் சந்தித்த இந்த நாடு இன்னமும் அதிலிருந்து இதய சுத்தியோடு பாடம் கற்று இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப்பயணிக்காவிட்டால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகும். எந்தவித தாமதமும் இல்லாமல் இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக இந்த நாட்டில் எவரும் இருக்க முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எல்லோரும் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டு சத்தியப்பிரமாணம் செய்துவிட்டுப் பின்னர் அதனை வழங்குவதற்கு மறுக்க முடியாது.

அரசியல் இழுத்தடிப்பு இந்த நாட்டுக்கு நல்லதல்ல. இனப் பிரச்சினைக்கான முன்னெடுப்பை உடனடியாக எடுக்க வேண்டும் - என்றார். (த-ய-46)

### டில்லிக்கு...

பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இந்திய - இலங்கை மீனவர் பேச்சில் இந்த விடயத்தை முன்னிறுத்துவதற்காக டில்லி சென்றுள்ளார்.

இலங்கை-இந்திய மீனவர்களுக்கு இடையிலான 3 ஆம் கட்டப் பேச்சு டில்லியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இந்தச் சந்திப்பில் இரு தரப்பு மீனவப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். நாளை சனிக் கிழமை இரு தரப்பு அமைச்சு மட்டத்திலான பேச்சு நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் இலங்கை சார்பில், கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொள்ளவுள்ளார்.

இழுவைமடிப் படகுகளைத் தடை செய்வதற்கான தனிநபர் சட்டவரைபை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்திருந்தார். இதே நடைமுறையை இந்தியாவிலும் நடைமுறைப்படுத்தக் கோருவதற்கே, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தப் பேச்சில் கலந்து கொள்ளவுள்ளார். (த-5-101)

### மரக் கடத்தலுக்கு...

புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளில் கிளிநொச்சி அக்கராயன் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக பதினாறு முதிரை மரக்குற்றிகளை வெட்டிக் கிளிநொச்சி நகருக்கு கொண்டு வருவதற்கு உடந்தையாகச் செயற்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அக்கராயன், முட்கொம்பன் காட்டுப் பகுதிகளில் சட்டவிரோத மரக் கடத்தல் இடம்பெற்று வருகின்றது என்று தொடர்ச்சியாகப் பல தரப்பினர்களாலும் குற்றம் சுமத்தப்பட்டு வரும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோதமாக மரங்களை வெட்டிக் கடத்தியவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிகன்னவின் வழிநடத்தலில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்சவினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-5)

### சு.க. தலைமையில்...

உறுதியளித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் மகர கமவில் நேற்று நடை பெற்றது. இந்த நிகழ்விலேயே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

ஜனாதிபதியின் இந்த உரையினால் நேற்றுக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சுதந்திரக் கட்சியின் தலைமையில் அரசு அமையும் என ஜனாதிபதி தெரிவித்தமையால், நல்லாட்சி அரசுடனான அவரது உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் நேற்று எழுந்தது. மத்திய வங்கியின் பிணை முறி விவகாரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாகத் தலையிட்டு சில முடிவுகளை எடுப்பதால் ஜனாதிபதி மைத்திரிபால கடும் விசனமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அவர் தெரிவித்ததாவது:

தோல்வியடைந்து பிளவுபட்டுக் காணப்படும் கட்சியை ஒன்றிணைத்து வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வது, கட்சியின் தோல்விக்கான காரணங்களை இனங்கண்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தல், களவு, கொள்ளை என்று தீய செயல்கள் அற்ற தூய்மையான பாதையில் பயணித்தல், மக்கள் பலத்துடன் கூடிய சுதந்திரக் கட்சியின் அரசை அமைத்தல் என பல முக்கிய காரணங்களுக்காகவே கட்சியில் புதிய அங்கத்தவர்களை இணைத்து கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எதிர்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசை அமைப்பதற்கு முன்னர் மக்கள் பலத்தைக் கொண்டு கட்சியை வலிமை பெறச் செய்ய வேண்டும். முன்னைய கால ஆட்சியின் அனுபவங்களைக் கொண்டு கட்சியைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய பிரதான இரு கட்சிகள் காணப்பட்டபோதும் பல புதிய கட்சிகள் தோற்றம் பெற்றன. எனினும் அந்தக் கட்சிகள் மீது மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படவில்லை.

மத்திய வங்கி பிணைமுறிகள் விவகாரம் தொடர்பில் அரசியல்வாதிகள் தீர்வு காண முடியாது. இது தொடர்பில் நாட்டு மக்கள் உண்மையை அறிந்து கொள்ளவேண்டுமாயின் நீதிமன்றம் ஊடாகவே தீர்வைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

கடந்த ஆட்சியில் தவறு செய்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவும் எனது ஆட்சியில் எவரும் தவறு செய்யாமல் இருப்பதற்குமே நான் மகிந்த ராஜபக்சவின் அரசில் இருந்து விலகி வந்தேன்.

எனது ஆட்சியில் தூய்மையான அரசியல் இருக்கவேண்டும். ஒவ்வொரு அரசியல்வாதிகளும் என்ன செய்கிறார்கள், என்ன உணவு உண்ணுகிறார்கள், எந்த வாகனத்தில் செல்கிறார்கள் என்று அனைத்தும் அறிந்திருக்கவேண்டும். இதன் மூலமே தாம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி மக்கள் சேவை செய்யத் தகுதியானவரா அல்லது தகுதியற்றவரா என்பதை இனம் கண்டுகொள்ள முடியும்.

மத்தி வங்கியில் இடம்பெற்ற பிணை முறிகள் விவகாரம் தொடர்பில் நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டுச் சென்று அதன் ஊடாகத் தீர்வைப் பெறவேண்டும். மகிந்த ராஜபக்ச போர்க் குற்றம், மின்சாரக் கதிரை, பொருளாதாரச் சிக்கல், பன்னாட்டு விசாரணை என்ற பூகம்பங்களைக் காட்டி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முயற்சித்தும் முடியாமல் போனது. நான் சுதந்திரக் கட்சியைத் தோல்வியடையச் செய்தேன் என்று குற்றம் சுமத்துகிறார்கள். இறுதி 24 மணித்தியாலம் வரை என்னைப் பொது வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளார்கள் என்பது எனக்குத் தெரியாது.

மகிந்த ராஜபக்ச இந்தத் தருணம் வரை கூட ஜனாதிபதியாக இருந்திருக்க முடியும். ஆனால் இரண்டு வருட ஆட்சிக்காலம் இருக்கும்போதே தேர்தலை நடத்தத் தீர்மானித்தார்.

கட்சியின் பொதுச் செயலாளர் என்றவகையில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல வேண்டாம் என வற்புறுத்தினேன். மூத்த தலைவர்களின் கூட்டத்தின்போது, ஜனாதிபதித் தேர்தல் நடத்தினால் எதிர்காலத்தில் என்ன விளைவு ஏற்படும் என்பதைத் தெளிவுப்படுத்தி ஒவ்வொருவருக்கும் கடிதம் வழங்கினேன்.

வரலாற்றில் என்றும் இல்லாதவாறு அமெரிக்காவில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இடையே தரக் குறைவாகச் சேறும் பூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது அரசியலில் சாதாரண விடயமாகும். எமது நாட்டில் சிறப்பான விடயங்களை முன்னெடுக்கும் போது இது போன்ற சில பிரச்சினைகள் ஏற்படுவது இயற்கை ஆகும்.

நானே சுதந்திரக் கட்சியைத் தோல்வியடையச் செய்தேன் எனக் குற்றம் சுமத்துகின்றார்கள். நான் ஒருபோதும் கட்சியைத் தோல்வியடையச் செய்யவில்லை. வெற்றி பெறவே செய்துள்ளேன். நான் மகிந்த ராஜபக்சவின் அரசில் இருந்து வெளி யேறினேனே தவிர, சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறவில்லை.

என்னுடன் பல அமைச்சர்களும் மகிந்தவின் அரசில் இருந்தே வெளியேறினார்கள். ஆனால் சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு 60 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைக்கப்பெற்றன. இதில் நூற்றுக்கு 12 வீதமான வாக்குகள் உண்மையான சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்றது. நான் பிறந்த இடமான பொலநறுவையில் 35 சதவீதமான வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

சுதந்திரத்தை மதித்து நடக்கும் எமது நாட்டில் கடந்த ஆட்சியில் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலை காணப்பட்டது. தொடர் வெற்றிகளுடன் பயணித்த சுதந்திரக் கட்சி பிளவுகள், தோல்விகள் எனப் பல சவால்களைச் சந்தித்தபோதும் முன் னோக்கியே செல்கிறது. எதிர்காலத்தில் நல்லதொரு ஆட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அமையும் - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை சண்முகசுந்தரம்



யாழ்.அத்தியடியைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை சண்முகசுந்தரம் 02.11.2016 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகசுந்தரத்தின் (முன்னாள் உதவி கட்டுப்பாட்டு அதிகாரி, மத்திய வங்கி) அன்புத் துணைவியாரும், சுபாசினி (ஜேர்மனி), சுகந்தி, சுமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், கொங்காதரன் (ஜேர்மனி), குகநேசன், கிறிஸ்டி ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற இரட்ணசபாபதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நல்லசேகரம்பிள்ளை, சீலாவதி ஆகியோரின் மைத்துனியும், யோகீஸ்வரனின் (ராஜன்) பாசமிகு சிறியதாயும், பாஸ்கரன், ஜெயவாணி, முரளிதரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டர்ஷிகா (ஜேர்மனி), கிருஷ்ணராஜ் (ஜேர்மனி), நிதர்சன், விதூரசன் (டுபாய்), சுபானி, லக்ஷினி, பிறேமலா, சுதர்சன் (ஜேர்மனி), பிருந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிருசன் (ஜேர்மனி), தியான் தெஸ்வின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.11.2016) வியாழக்கிழமை புத்தளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லையடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/5841)
(11,18,21)

தகவல்: குடும்பத்தினர்.

சுபாசினி (ஜேர்மனி)- +4915 2277 92755,
சுகந்தி - 077 949 0942, சுமதி - 077 162 9211

# மாணவர் நாடாளுமன்ற செயற்பாடுகளை பார்வையிட வருகிறார் மகிந்த தேசப்பிரிய

தென்மராட்சி, நவ.4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இயங்கும் மாணவர் நாடாளுமன்றங்களின் செயற்பாடுகளைப் பார்வையிடுவதற்காக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வரவுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ள வலய மட்ட மாணவர் நாடாளுமன்றங்களை வலுவூட்டல் தொடர்பான செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ள அவர் வலய மாணவர் நாடாளுமன்றத்தின் பிரதமர் மற்றும் உரிய அமைச்சர்கள் பாடசாலைகளில் செயற்படுத்திய செயற்றிட்டங்கள் தொடர்பாக இலத்திரனியல் முன்னளிப்புகள் மூலம் பார்வையிடுவார்.

இந்தச் செயலமர்வில் மாணவர் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக செயற்படும் அதிபர்கள், பிரதி செயலாளர் நாயகமாகச் செயற்படும் நிர்வாகத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்கள், வலய வகை 1 ஏபி, 1 சீ வகை 11 பாடசாலைகளின் அதிபர்கள், வலயக கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

செயலமர்வில் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் கல்வி அமைச்சின் ஆலோசனையும் வழிகாட்டலும் மற்றும் சமாதானக் கல்வி அலகின் உதவிக் கல்விப் பணிப்பாளர் பீ.டபிள்யு. ஏ.டி.பத்மசாந்த ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலய மட்ட மாணவர் நாடாளுமன்றம் அமைப்பது தொடர்பான ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# சுற்றுலாத் தலமாக மாற்றப்பட்டது வெள்ளைக் கடற்கரை

யாழ்ப்பாணம், நவ.4

வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட திருவடி நிலை வெள்ளைக் கடற்கரைப் பிரதேசம் நவீன சுற்றுலாத் தலமாக உருவாக்கப்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் திருவடி நிலை கடற்கரைப் பிரதேசத்தை அழகுபடுத்துவதற்காக 4 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார்.

தற்போது குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகள் மேற்படி திருவடிநிலை வெள்ளைக் கடற்கரைப் பிரதேசத்தை குளிப்பதற்காகவும் இளைப்பாறுவதற்காகவும் முழுமையாகப் பயன்படுத்துகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறுவதற்கு மடமும் உடுபுடைவை மாற்றும் இடம், மலசலகூடம் மற்றும் இருக்கைகள் என்பன உருவாக்கப்பட்டுள்ளன. அங்குள்ள இந்து ஆலயங்களில் புனிதம் பேணப்படு வதற்கான விளம்பரங்களும் ஒட்டப்பட்டுள்ளன. (ற-50)

## மரண அறிவித்தல்

### கைலாசபிள்ளை பாலசிங்கம்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், தம்பனையை வதிவிடமாகவும், இல.83, கனகாம்பிகைக்குளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை பாலசிங்கம் நேற்று (03.11.2016) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் கமலம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தூயமலரின் அன்புக் கணவரும், யுவராசா, மோகனதாசா, தர்சிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோனியா, சத்தியகலா, ரஞ்சித் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நீக்சா, ஆரதி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் அமரசிங்கம் (இந்தியா), நாகேஸ்வரி (கிளி- தம்பனை), இராஜேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் வீரசிங்கம் (இந்தியா), திலகவதி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மனோன்மணி, பரமலிங்கம், நல்லம்மா, காலஞ்சென்ற கேதாரலட்சுமி மற்றும் கனகாம்பிகை, கௌசலா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் நிரந்தர முகவரியான இல.83, கனகாம்பிகைக்குள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.83, கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

தகவல்: குடும்பத்தினர்.
077 717 1420

(K/205)(11,18,21)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
### சரஸ்வதி யோகராசா

கடந்த 06.10.2016 வியாழக்கிழமை இறையடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி **திருமதி சரஸ்வதி யோகராசா** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.11.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சின்ன ஆலடி,
காரைநகர்.

(Ge/5825)
(12.17.18)

கணவர் (யோகராசா)
மகன் (சிவரஞ்சன் குடும்பம், யாழ்ப்பாணம்)
077 614 0446, 077 617 6369

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 06.10.2016 அன்று
இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் மாரிமுத்து அமுதலிங்கம்

தோற்றம் 15.08.1936
மறைவு 06.10.2016

அன்னாரின் வீட்டுக்கிருத்தியமும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (04.11.2016) வெள்ளிக்கிழமை மு.ப.11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் காலஞ்சென்ற செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர்வளையங்கள், இரங்கல் செய்தி தெரிவித்தவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறி இறுதிக்கிரியையிலும் ஊர்வலத்திலும் கலந்துகொண்ட அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில
13 . 03 . 1961



ஆண்டவரின் அடியில்
16 . 11 . 2015

### அமரர் தம்பிராசா குகநேசன்

முன்னாள் உரிமையாளர் : அம்பிகை களஞ்சியம், ராம் சூப்பர் சிற்றி யாழ்ப்பாணம், சன்ரைஸ் ரேடர்ஸ், நியூ மெடிக் கேர் - சாவகச்சேரி, சிற்றி சென்ரர் - கொழும்பு

திதி : 4/11/2016

வருடம் ஒன்று சென்றது அப்பா ஆனாலும்
ஆறாது எம் துயரம் என்றென்றும்
அன்புடன் எமையணைத்து
அறிவுரைகள் பல கூறி
பண்புடன் எம்மை வளர்த்து, படிக்க வைத்து
பாரினில் உயர வைத்தீர்
ஆயிரமாயிரம் உறவுகள் இருந்தாலும்
என்னப்பா ? உங்கள்
அன்பைப்போல் வருமா எமக்கு !
எந்நாளும் உங்கள் நினைவலைகளை
இதயத்தில் சுமந்து நிற்கின்றோம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டி நிற்கும்

வெள்ளவத்தை,
கொழும்பு - 06.

மனைவி,
பிள்ளைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடிக் குடுவை வெடித்து ஆசிரியை, மாணவர்கள் காயம்

கொழும்பு, நவ. 4

பாடசாலை ஆய்வுக்கூடத்தில் கண்ணாடிக் குடுவை வெடித்ததில், விஞ்ஞான பாட ஆசிரியை மற்றும் நான்கு மாணவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த வெடிப்புச் சம் பவம் ஏற்பட்டுள்ளதாகவும், காயமடைந்த ஆசிரியையும் மாணவர்களும் அரநாயக்க மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அதில் இரண்டு மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கேகாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த)

# சு.க. உறுப்பினர் எண்ணிக்கை 40 இலட்சமாக மாற்றப்படும்

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.4

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 40 இலட்சமாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அந்த கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

மகரகமவில் நேற்று ஆரம்பமான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இதற்கு முன்னர் 2013ஆம் ஆண்டிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அதிகளவானவர்கள் உறுப்பினர்களாக இணைந்து கொண்டனர். கட்சியின் உறுப்பினர்கள் கட்சியுடன் இணைந்து கொள்ள வேண்டுமே அன்றி நபர்களுடன் அல்ல.

கட்சியின் புதிய தலைமையுடன் எந்தத் தயக்கமும் இன்றி இணைந்து கொள்ள முடியும் - என்றார். (ற)

# தபால் சேவைகள் அதிகாரிகள் 353 பேருக்கு நிரந்தர நியமனம்

தபால் சேவை அதிகாரிகள் 353 பேருக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுத் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தலைமையில் இடம்பெற்றது.

விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சின் செயலாளர் வசந்த ஹப்புஆராச்சி, தபால்மா அதிபர் டி.எல்.பி. ரோஹன அபேரத்ன உட்படப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (த)

## தேவை

கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருகின்ற நிறுவனத்துக்கு கணக்கியல் உதவியாளர் தேவை. க.பொ.த உயர்தரத்தில் வணிகத்துறை பயின்றவர்கள் விரும்பத்தக்கது.

**ஆண்கள் மட்டும்.**

T.P: 0773614638 / 021 205 2080

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம 10.00 / 1.00 / 4.00 / 7.00
சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat 9.30 p.m




ப்ரொன்ஸ் 10.30 a.m / 4.30 p.m 1.30 p.m / 7.30 p.m
Fri/Sat 9.30 p.m
விசாரணை 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

## வெளிவந்து விட்டது

திரு.ஆ.சத்தியமூர்த்தியினால் தொகுக்கப்பட்ட சகல திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை பதவியுயர்வு பரீட்சைகளுக்கு துல்லியமாக விடையளிக்கும் வகையில் நிதி ஒழுங்கு விதி அத்தியாயம் இலக்கங்களுடன் கடந்த கால பரீட்சை வினாக்களையும் விடைகளையும் கொண்ட மிகச்சிறந்த வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு: 077 1676 457




நவீன தகவல் தொழில்நுட்ப உலகில்

உங்களுக்கான , உங்கள் வியாபார நிறுவனத்திற்கான இணையத்தினை உருவாக்கிக்கொள்ள தாமதிக்காதீர்கள்

இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

காலம்:06.11.2016 நேரம்:09.00-1.00 தொ.இல:0776053902


கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள்



இணையதளங்களை பதிவு செய்தல் ( Domain Registration )
சேவர் இடவசதி ( Web Hosting )
இணையதளம் வடிவமைப்பு ( Web Designing )
இணையவழி தொழில் வாய்ப்பு ( Web Job opportunity )

ESOFT
ESOFT METRO CAMPUS
Shaping Lives, Creating Futures
No. 137, K.K.S Road, Jaffna, Srilanka
Hot Line : 077 309 9 308 | Land Line : 021 222 4142

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 06 . 1925

மறைவு 01 . 11 . 2016

### கதிரன் பொன்னையா (K.P)

கோயில் வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் பொன்னையா (K.P) 01.11.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதி இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற அம்மாப்பிள்ளையின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நேசமலர், ஞானேஸ்வரி, நாகேஸ்வரன், சுதாகரன்(பிரான்ஸ்), குணேஸ்வரி, நகுலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் இராசதுரை (சிங்கப்பூர்), கதிரமலை, காலஞ்சென்ற புஸ்பராசா மற்றும் மரியறூபி, யமுனா (பிரான்ஸ்), கணேசலிங்கம், மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் அளவெட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கோயில் வீதி,
மல்லாகம்

(J/5844)(2.18.21)

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 04 . 1933

மறைவு 03 . 11 . 2016

### வீரகத்திப்பிள்ளை கனகசபை

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை கனகசபை நேற்று (03.11.2016) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை மற்றும் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், சிறிதரன், புவிதரன், காலஞ்சென்றவர்களான மதிதரன், கவிதரன், ரவிதரன், புவிதா, விஜிதா மற்றும் துவிதரன், கிருபாதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்களேஸ்வரி, சுபத்திராதேவி, கலைச்செல்வி, மேகலா ஆகியோரின் மாமனாரும், கீர்த்தனா, டியாளினி, நிதுஷா, யசோதா, கவீனன், கஜேந்திரன், அபிசன், டயானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2016) வெள்ளிக்கிழமை காலை8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்திவில்லை,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்


(N/169)
(11,21,18)

075 967 7911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீச்சல் போட்டி

கொழும்பு, நவ. 4
ஆசியாவிலுள்ள பன்னாட்டுப் பாடசாலைகளுக்கு இடையிலான நீச்சல் போட்டி கொழும்பு சுகததாச உள்ளரங்கில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறவுள்ளது. 21 பாடசாலைகளைச் சேர்ந்த 836 போட்டியாளர்கள் போட்டியில் கலந்து கொள்ளுகின்றனர். (ம-23)



## முர்ரே முன்னேற்றம்

பரிஸ், நவ. 4
பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ்தொடரில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் பிரிட்டன் வீரர் அன்டி முர்ரே. பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்திலுள்ள முர்ரேயை எதிர்த்து ஸ்பெய்ன் வீரர் பெர்னாண்டோ மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. இரண்டாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தர் பெர்னாண்டோ. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முர்ரே 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார். இந்த வெற்றியைப் பெற முர்ரேக்கு 2 மணித்தியாலம் 29 நிமிடங்கள் தேவைப்பட்டது. (ம)




# நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மே.தீவுகளுக்கு முதல் வெற்றி

## தொடரை வென்றது பாக்.

பாகிஸ்தான்- மேற்கிந்தியத்தீவுகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

நாயணச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 281 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அஸ்லாம் 74 ஓட்டங்களையும், மிஸ்பா 53 ஓட்டங்களையும், யுனிஸ் கான் 51ஓட்டங்களையும், சர்பிராஸ் அகமட் 51 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் பிஸ்கூ 4 இலக்குகளையும், கபிரியேல் 3 இலக்குகளையும், ஜோசெப் 2 இலக்குகளையும், சேஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 337 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பிரீத்வைட் 142 ஓட்டங்களையும், சேஸ் 50 ஓட்டங்களையும், டவ்ரிச் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரியாஸ் 5 இலக்குகளையும், ஆமிர் 3 இலக்குகளையும், யாசீர், பாபர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

56 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் 208 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக அசார் அலி 91 ஓட்டங்களையும், அகமட் 42 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கோல்டர் 5 இலக்குகளையும், பிஸ்கூ 3 இலக்குகளையும் சேஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு 153 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சரிவு கண்டாலும் பின்னர் ஓரளவு எழுச்சியடைந்து நான்காம் நாள் முடிவில் தீவுகள் 114-5 என்றிருந்தது. பிரீத்வைட் 44 ஓட்டங்களுடனும், டவ்ரிச் 34 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காகக் களமிறங்கினர். மேலதிகமாக 39 ஓட்டங்களைப் பெற்றாலேயே பாகிஸ்தான் வெற்றிபெறலாம் என்ற நிலையில் மற்றொரு இலக்கை இழக்காமல் இலக்கை அடைந்தது தீவுகள். பிரீத்வைட் 60 ஓட்டங்களுடனும், டவ்ரிச் 60 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றாலும் முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் வெற்றி பெற்ற காரணத்தினால் 2:1 என்ற அடிப்படையில் அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம)

## இலங்கை - சிம்பாப்வே டெஸ்ட் நாளைமறுதினம்



இலங்கை- சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றது. தொடரில் இரண்டு ஆட்டங்கள் என்பதால் இரண்டாவது ஆட்டத்தில் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது இலங்கைக்கு பாதகத்தை ஏற்படுத்தாது. ஆனால் குறைந்தபட்சம் தொடரை சமன்செய்ய வேண்டுமாயின் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் இலங்கைக்கு உள்ளது. (ம)



*தேசிய மட்ட தடகளப் போட்டியில் பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில் புதிய சாதனையைப் பதிவு செய்த ஜெ.அனித்தா வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார். (ம-422)*

# ரொனால்டோவின் கோல்களால் கோமாவிலிருந்து மீண்ட சிறுவன்



ரொனால்டோ கோலைப் பதிவுசெய்யும் வர்ணனைகளைக் கேட்டு சிறுவனொருவன் கோமாவிலிருந்து மீண்டுள்ள சம்பவம் போலந்தில் இடம்பெற்றது.

போலந்து நாட்டை சேர்ந்த 15 வயதான டேவிட் பவ்லாஸ் என்ற சிறுவனே அவ்வாறு குணமடைந்துள்ளார். இவர் கடந்த 2013 ஆம் ஆண்டு வாகன விபத்தில் சிக்கினார். இதனையடுத்து தொடர் சிகிச்சை பெற்று வந்த அவர் மூன்று மாதங்களுக்கு முன் கோமா நிலைக்கு சென்றார். பல சிகிச்சைகள் வழங்கப்பட்டும் நினைவு திரும்பாத அவர், ரொனால்டோவின் கோல் அடிக்கும் வர்ணனைகளைக் கேட்டு சுய நினைவுக்கு திரும்பினார் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதனையடுத்து குறித்த சிறுவனைச் சந்திக்க விருப்பம் தெரிவித்த ரொனால்டோ அண்மையில் அவரைச் சந்தித்துள்ளார். (ம)

## சமபோச கிண்ணம் ஆட்டம் ஆரம்பம்

கொழும்பு, நவ. 4
இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 15 வயதுக்குட்பட்ட இருபால் அணிகளுக்கும் இடையிலான கால்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. ஆண்களுக்கான ஆட்டங்கள் அல்பிரட் பீரிஸ் மைதானத்திலும் பெண்களுக்கான ஆட்டங்கள் நகரசபை மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-23)

## ஆசிய கூடைப்பந்தாட்டம் விரைவில் ஆரம்பமாகிறது

கொழும்பு, நவ. 4
பன்னாட்டு கூடைப்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்படும் ஆசிய கூடைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தாய்லாந்தில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் கலந்து கொள்ளுவதற்கான அணி எதிர்வரும் 8 ஆம் திகதி பயணமாகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட கனவு நனவானது

இந்திய டெஸ்ட் அணியில் இடம்பிடித்தமையின் மூலம் தனது நீண்டகாலக் கனவு நனவானதாக சகலதுறை வீரர் பாண்டியா தெரிவித்தார்.
இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் தெரிவு செய்யப்பட்டது. அறிமுக வீரராக பாண்டியா சேர்த்துக் கொள்ளப்பட்டார். இதனையடுத்து வழங்கிய நேர் காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்திய டெஸ்ட் அணியில் இடம் பெற்றிருப்பதன் மூலம் எனது நீண்டகாலக் கனவு நனவாகி உள்ளது. மட்டுப் படுத்தப்பட்ட ஆட்டங்களில் இந்திய அணியின் சார்பாக விளையாடிய போதிலும் டெஸ்ட் அணியில் இடம் பிடித்ததன் மூலம் இந்தியாவை முழுமையாகப் பிரதிநிதித்துவம் செய்துள்ளேன் என உணர்கிறேன் என்று பாண்டியா மேலும் தெரிவித்தார். (ம)







# ரியல் மட்ரிட்டை சமன் செய்தது கத்துக்குட்டியான லிகா வார்சவா


ஐரோப்பின் சம்பியன்ஸ் லீக் கால் பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட்டை சமன் செய்தது கத்துக்குட்டியான லிகா வார்சவா.
ஆட்டத்தின் ஆரம்பம் ரியல் மட்ரிட்டுக்கு சாதகமாகவே அமைந்தது. நட்சத்திர வீரர் பலே முதல் நிமிடத்திலேயே முதல் கோலைப் பதிவுசெய்தார். காயம் காரணமாக ஓய்விலிருந்து மீண்ட பென்சிமா 35 ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 40 ஆவது நிமிடத்தில் வார்சவாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார் ஒடியா. 2:1 என்ற ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி.
58 ஆவது நிமிடத்தில் ரடோவிக் பதிவு செய்த கோலின் மூலம் 2:2 என்றாக்கியது வார்சவா.
கோல்கள் இல்லாமல் அடுத்த 25 நிமிடங்களும் நகர்ந்தன. 83 ஆவது நிமிடத்தில்மௌலின் பதிவுசெய்த கோலின் மூலம் ரியல்மட்ரிட்டை 3:2 என்று ஆதிக்கம் செலுத்தி அதிர்ச்சியில் உறையவைத்தது வார்சவா. அடுத்த இரு நிமிடங்களில் மட்ரிட்டுக்கான மூன்றாவது கோலைப் பதிவுசெய்து ஆட்டத்தை சமநிலையில் முடித்தார் மட்ரோ. (ம)

# நிதானத்தை இழந்தாரா பார்சிலோனா மெஸ்ஸி

மன்செஸ்டர் சிற்றிக்கு எதிரான தோல்வியை அடுத்து பாரிசிலோனா அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸி நிதானம் இழந்தார் என ஸ்பெய்ன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் 1:3 என்ற அடிப்படையில் மன்செஸ்டர் சிற்றியிடம் தோல்வியடைந்தது பார்சிலோனா. ஆட்டம் முடிந்த பிற்பாடு மெஸ்ஸி எதிர் வீரர் ஒருவருடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தார் என ஸ்பெய்ன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
மன்செஸ்டர் சிற்றியின் அதிகம் அறியப்படாத வீரரே ஆரம்பத்தில் சில வார்த்தைகளைப் பரிமாறினார். அதற்குப் பதிலடியாகவே மெஸ்ஸி கருத்துத் தெரிவித்தார். மேலும் மன்செஸ்டர் சிற்றியின் ஓய்வறைக்கு மெஸ்ஸி சென்று அந்த வீரரைத் தேடினார் எனவும் குறித்த ஊடகங்கள் தெரிவித்தன. (ம)




## பயிற்சியாளரானார் அசார் மக்மூட்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் அசார் மக்மூட், அந்த அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.
பாகிஸ்தான் அணி விரைவில் நியூசிலாந்துக்கு சுற்றுப்பணயம் மேற்கொண்டு இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரிலிருந்து மக்மூட், அணியுடன் இணைந்து பணியாற்றுவார் என்று அறிவிக்கப் பட்டது. (ம)

# காயம் காரணமாகவே ரோகித் புறக்கணிப்பு

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலிரு ஆட்டங்களுக்குமான இந்திய அணியில் ரோகித் சர்மா இடம்பெறாதமைக்கு அவருக்கு ஏற்பட்ட காயமே காரணம் என அறிவிக்கப்பட்டது.
இங்கிலாந்து அணி ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. நவம்பர் மாதம் 9 ஆம் திகதி முத லாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. ரோகித் சர்மா இடம்பெற வில்லை. இந்த விடயம் சில அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்த நிலை யில், காயம் காரணமாகவே ரோகித் புறக்கணிக்கப்பட்டார் என்று தெரிவுக்குழு அறிவித்தது.
ரோகித் சர்மாவின் தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. அவரது காயம் குணமடைய சில வாரங்கள் ஆகும். எனவே தான் இங்கிலாந்துக்கு எதிரான முதல் இரு ஆட்டங்களுக்குமான அணியில் அவர் இடம்பெறவில்லை. ஏனைய டெஸ்ட் ஆட்டங்களிலும் அவர் இடம்பெற வாய்ப்பில்லை என மேலும் தெரிவிக்கப் பட்டது. (ம)






# இங்கிலாந்துக் கழகத்தில் இலங்கை வீரர் பானுகா

இங்கிலாந்தைச் சேர்ந்த பென்ரித் கிரிக்கெட் கழகத்தில் விளையாடுவதற்காக இலங்கை வீரர் பானுகா ராஜபக்ச ஒப்பந்தமாகியுள்ளார்.
இலங்கை அணியின் முதல் தர ஆட்டங்களில் பானுகா சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ளார். இடது கை துடுப்பாட்ட வீரரான இவர் சகலதுறை வீரராகவும் விளங்குகிறார். முதல் தர ஆட்டங்களில் 4 ஆயிரத்து 500 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவற்றில் 5 சதங்கள் உள்ளடங்குகின்றன. 50 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். இதனையடுத்து பானுகா ராஜபக்சவை இங்கிலாந்தின் கழகமான பென்ரித் ஒப்பந்தம் செய்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் அவர் பென்ரித் கழகத்துடன் இணைவார் என்று அறிவிக்கப்பட்டது. (ம)

# மழை காரணமாக தொடரில் தடங்கல்

யாழ்ப்பாணம், நவ. 4
மைலோ கிண்ணத்துக்காகத் தீவக கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையே வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்திலும் மெலிஞ்சிமுனை இருதயராஜா வி.கழக மைதானத்திலும் நேற்று நடைபெறவிருந்த ஆட்டங்கள் மழை காரணமாகக் கைவிடப்பட்டன. குறித்த மைதானங்களில் இன்று ஆட்டங்கள் நடைபெறும். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிக்குத் தகுதி பெற்றது வளர்மதி அணி

அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் பி பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் வளர்மதி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

யுத் வி.கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. புத்தூர்வளர்மதி அணியை எதிர்த்து தோப்பு வாலிபர் அணி மோதியது. மிகப்பெரும் ஆதிக்கம் செலுத்திய வளர்மதி அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-422-108)





# பற்றிக்ஸ் இறுதிக்கு

யாழ்ப்பாணம், நவ. 4

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் 19 வயதுக்குட்பட்ட பாடசாலைகளின் அணிகளுக்கு இடையே நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இறுதியாட்டத்தக்குத் தகுதி பெற்றது.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வென்னப்புவ சென். ஜோசவாஸ் கல்லூரி அணி மோதியது. நீண்ட போராட்டத்தின் பின்னர் வாய்ப்புக் கள் கிடைப்பதும் பின்னர் அவை வீணடிக்கப்படுவதுமாக நகர்ந்தது ஆட்டம். கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். சொல்லிக் கொள்ளும் படியான மாற்றங்கள் இல்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளாலும் கோல்கள் எவையையும் பதிவுசெய்ய இயலவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 6:5 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார். (ம-23)

**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**

வடமாகாண உள்ளக கணக்காய்வாளர்
சனி, ஞாயிறு
9.00 - 4.00

வடமாகாண ஆசிரியர்
சனி, ஞாயிறு
10.00 - 3.00

வடமாகாண காணி வெளிக்கள போதனாசிரியர்
ஞாயிறு
2.00 - 5.00

வங்கிகள் B.Ed, M.Ed
ஏனைய பரீட்சைகளுக்கு
சனி 1.00 - 5.00

அதிபர் EB
சனி 1.00 மணி

ஏனைய EB
சனி, ஞாயிறு
9.00 - 11.00

T.P : 076 6883394, 021 2223382

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
(சி/23091)(19.20)

# இறுதியைத் தவறவிட்டது சென். ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், நவ. 4

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் 19 வயதுக்குட்பட்ட பாடசாலைகளின் அணிகளுக்கு இடையே நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குச் செல்வதற்கான வாய்ப்பைத் தவறவிட்டது இளவாலை சென். ஹென்றிஸ் அணி. யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென். ஹென்றிஸை எதிர்த்து கொழும்பு சாகிராக் கல்லூரி மோதியது. அவ்வளவு இலகுவில் கோல்களைப் பதிவுசெய்ய இயலவில்லை. பெரும் முயற்சிக்குப் பின்னர் 40ஆவது நிமிடத்தில் ஹென்றிஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார் மதுசன். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. 60 ஆவது நிமிடத்தில் பதில் கோலைப் பதிவுசெய்தார் சாகிராவின் ஆகிப். 1:1 என்ற நிலையிலேயே ஆட்டம் நகர்ந்தது. 91 ஆவது நிமிடத்தில் கிரிசாந் ஹென்றி ஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய அடுத்த நிமிடத்திலேயே அதற்கும் பதிலடி கொடுத்தார் சகீல். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது சாகிராக் கல்லூரி. (ம-23)



**யாழில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobil Phone Repairing Course
Nov-05 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல்
05,06,07,08 ஆகிய நான்கு நாள்கள்
Smart Phone கள் உற்பட அனைத்து Phone களும் பயிற்சி அளிக்கப்படும்.
சுயமாக வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி வழங்கப்படும். குறைந்த முதலீட்டில் உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய ஒரு சுயதொழில்.
இத் துறையில் ஒரு வருடத்துக்கு மேல் அனுபவம் உள்ளவர்களுக்கு டுபாய் நாட்டில் அதிஉயர்சம்பளத்துடன்
தொழில் வாய்ப்பு உடனடியாக காத்திருக்கின்றது. பதிவுகளுக்கு முந்துங்கள்
Softview IT.S Computer Academy
No.221,Kandy Road,Jaffna. 077 7475783

**கருத்தரங்கு**
November நடுப்பகுதியில் நடைபெறவுள்ள
காலம்
06.11.2016,12.11.2016,
13.11.2016, 19.11.2016
(9.00-4.00 Pm)
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
T.P 077 4696695

**விசேட பொதுக்கூட்டம்**

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமானது (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க வளாகத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமூகமளிக்கும்படி பணிவாக கேட்டுக்கொள்கின்றேன்.
செயலாளர்.
(தே/5851)(9.20)

## தெ.ஆபிரிக்காவை மிரட்டுகிறது ஆஸி.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்துவதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியது ஆஸ்திரேலியா.

பேர்த்தில் நேற்று ஆரம்பமானது ஆட்டம். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார் ஸ்ரீபன் குக். வீழ்த்தியவர் ஸ்ராக். அம்லாவை ஓட்டமெதனையும் பெறாது வீழ்த்தினார் ஹசில்வூட். எல்கர், டுமினி இருவரும் பதின் மத்தைத் தாண்டவில்லை. பிளாசிஸ்-பவுமா இணை சிறிது இணைப்பாட்டத்தை வழங்கியது. அரைச்சதம் கடந்தார் பவுமா. அதிரடியாக விளையாடி 84 ஓட்டங்களைக் குவித்தார் குயின்டன் டி ஹொக். பின்வரிசை தடுமாற 242 ஓட்டங்களில் சுருண்டது தென்னாபிரிக்கா.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா இலக்குச் சரிவில்லாமல் 105 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வோர்ணர் 73 ஓட்டங்களுடனும், மார்ஷ் 23 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.